

கல்கி

KALKI
13.10.85
ரூ. 1.50



"மதிக்கப்படாவிட்டால் மதம் மாறுவோம்!"

– இது அச்சுறுத்தல் அல்ல; வேதனை!



செக்ஸ், ஸ்ட்ரைப்ஸ்
மற்றும் டெக்ஸ்சர்ஸ்
மாதந்தோறும் நூற்றுக்கும்
மேலான டிசைன்கள்.

பாம்பே டையிங்

எக்ஸிக்யூடிவ்
கலெக்ஷனிலிருந்து ஷர்டிங்குகள்



• வீரப்ப நாய்க்கன்பட்டி: ஊர் முகப்

"மதிக்கப்படாவிட்டால் மதம் மாறுவோம்!"


— இது அச்சுறுத்தல் அல்ல; வேதனை!

"சமூகம் என்று மொத்தமாய் எடுத்துக் கொள்ளும்போது, மூடத்தனத்துக்கு முதல் பாக்கு வெற்றிலை இந்த ஹிந்து சமூகத்துக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று தோன்று கிறது.

"ஒரு சமயத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் அந்தச் சமயத்தைச் சேர்ந்த தெய்வத்தை வணங்க வசதியின்றி, அந்தக் கோபத்தினால் வேறு மதங்களைச் சேர்வதென்றால், அது அந்தச் சமூகத்துக்கு மட்டுமன்றி மனித வர்க் கத்திற்கே அவமானமளிக்கும் ஒரு விஷய மாகும்.

"ஹிந்து சமூகம் இந்த மானக்கேட்டை ஒழித்துத் தூய்மை பெற வேண்டும். இன் றேல் அழிந்து போக வேண்டும். நீங்கள் எதற்குத் துணை புரிவீர்கள்?"

— சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பெரிய குளம் வட்டாரத்திலுள்ள ஹரிஜன மக்களைக் கோயிலுக்குள் சென்று தரிசிக்கத் தடை செய்தபோது, அந்தப் பகுதியிலுள்ள முப்பத்திரண்டாயிரம் ஹரிஜனங்கள் முஸ் லிம் மதத்துக்கு மாறப் போவதாகச் செய்தி வந்தபோது, அமரர் கல்கி அவர்கள் கொதித் தெழுந்து, 'அதோ கதி' என்ற தலைப்பில் ஆனந்த விகடனில் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதிதான் இது!



• வேலயப்பன்

ஐம்பதாண்டுகளுக்குப் பிறகும் அந்த நிலை மாறிவிட்டதா? இந்து மதத்திலுள்ள உயர் ஜாதிக்காரர்கள் ஹரிஜனங்களைச் சரிசம மாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்



• தண்ணீர் கூடத் தரமாட்டார்கள்.

களா? இல்லை; இல்லவே இல்லை என்பதைத் தான் அண்மையில் நடந்த மீனாட்சிபுர மத மாற்றம் உறுதிப்படுத்தியது. சரி அதுவும் போய்த் தொலையட்டும்! அதற்குப் பிறகாவது — இன்றாவது ஹரிஜனங்கள் மீது நடந்து கொண்டிருக்கும் கொடுமைகள் ஒழிந்து போனதா என்றால், அதுவும் இல்லை என்பதைத்தான் நாம் ஆதங்கத்தோடு சொல்ல வேண்டியிருக்கிறது.

ஆம்; அண்மையில் தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுக்காவிலுள்ள வீரப்ப நாய்க்கன் பட்டியிலிருந்து கல்கி அலுவலகத்துக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், ''மகாத்மா காந்தியடிகளால் ஹரியின் ஜனங்கள் என்று பெருமையாகச் சொல்லப்பட்ட நாங்கள் இன்னமும் மேல் ஜாதிக்காரர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாதவர்களாக இருக்கிறோம்! இந்தக் கொடுமைகள் இந்து மதத்தில் இருப்பதால்தானே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதனால் எங்கள் ஊரிலுள்ள எல்லா ஹரிஜனங்களும் ஒட்டு மொத்தமாக முஸ்லீம் மதத்துக்கு மாறிவிடலாமென்று தீர்மானித்திருக்கிறோம்!'' என்று வேடியப்பன் என்ற ஹரிஜன் ஒருவர் எழுதியிருந்தார். அதில் அவருடைய கையெழுத்தோடு மேலும் பலருடைய கையெழுத்தும் இருந்தது. உண்மைகளை அறிய உடனடியாக நாங்கள் அந்த ஊருக்கே புறப்பட்டுச் சென்றோம்.

அரூரிலிருந்து தீர்த்தமலை என்னும் ஊருக்குச் செல்லும் பாதையில் பதினைந்தாவது கி. மீட்டரில் இருக்கிறது வீரப்ப நாய்க்கன் பட்டி என்னும் கிராமம். கடிதம் எழுதிய வேடியப்பனைச் சந்தித்து. ''என்னதான் நடந்தது? எதற்காக மதம் மாறும் ஒரு முடிவுக்கு வந்தீர்கள்?'' என்று கேட்டோம்.

''சார்! கடந்த நான்கைந்து ஆண்டுகளாகவே எங்களுக்கும், எங்களூரிலுள்ள உயர் ஜாதிக்காரர்களான கவுண்டர் இனத்தவருக்கும் ஜாதிப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. இங்கே சுமார் ஐநூறு குடும்பங்கள் இருக்கின்றன. அதில் சுமார் நூறு குடும்பங்கள் ஹரிஜனக் குடும்பங்கள். பிற்பட்டோர் போன்ற இனத்தவர்கள் சுமார் இருநூறு குடும்பங்கள். கவுண்டர் இனத்த



• முனுசாமி: ஆமாம் சாமி!

வர்கள் சுமார் இருநூறு குடும்பங்கள். பிரச்னைக் குரியவர்களும் எங்களைக் கொடுமைப் படுத்துபவர்களும் இந்தக் கவுண்டர்கள் தான்.

''எங்கள் காலனியிலுள்ள பலரும் கவுண்டர்களுடைய நிலத்தில்தான் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். கூலிகள் என்று சொல்லுவதைவிட அடிமைகள் என்று சொல்லுவதுதான் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஆம்; எங்களை அவர்கள் அப்படித் தான் நடத்துகிறார்கள்.

''1980 — ஆம் ஆண்டுவரை டீக்கடைகளில் நாங்கள் டீ குடிக்க தனி கிளாஸ்கள் தான் வைத்திருந்தார்கள். நாங்கள் டீ குடிக்கச் சென்றால் அந்த கிளாஸை நாங்களே எடுத்துக் கழுவி டீ வாங்க வேண்டும். குடித்து முடித்த பிறகும் அதை நாங்களேதான் கழுவித் தனியானதோர் இடத்தில் வைத்து விட்டு வரவேண்டும். தீண்டாமை என்பது

குற்றமாக அறிவிக்கப்பட்ட பின்னரும் இந்த நிலை நீடித்ததால் இதுபற்றி நாங்கள் பல முறை அதிகாரிகளுக்குப் புகார் அனுப்பினோம். அதன் பிறகுதான் இப்போது எங்களுக்கும் பொதுவான கிளாஸ்களில் டீ தருகிறார்கள். ஆனாலும் மற்ற கொடுமைகள் ஒழிந்தபாடில்லை.

''கவுண்டர்கள் வசிக்கும் தெருவில் போகும்போது இன்னமும் எங்கள் ஹரிஜனப் பெரியவர்கள் செருப்பைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டுதான் செல்கிறார்கள். விவசாயக் கூலிகளுக்கான கூலியை அரசாங்கம் நிர்ணயம் செய்துவிட்ட நிலையிலும் எங்களுக்குக் கொடுக்கப்படும் கூலியைக்கேட்டால்அதிர்ச்சியடைவீர்கள். ஆண்களுக்கு ஐந்து ரூபாய். பெண்களுக்கு மூன்று ரூபாய். இதுதான் ஒரு நாளைய கூலி. இது அநியாயமில்லையா?



பெருமாள் கவுண்டர்: விளக்கு வைத்த பிறகு நான் வெளியிலேயே வரமாட்டேன்.

''ஹரிஜனங்கள் செய்யும் சிறுசிறு தவறுகளுக்குக்கூட ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டி, 'தண்டம்' வசூலிக்கிறார்கள். எங்கள் குல தெய்வமான வேடியப்ப சுவாமி கோயிலுக்குள் நுழைவதற்குக்கூட எங்களுக்கு அனுமதி கிடையாது. மீறி நுழைந்தால், அடி உதைதான். அரசாங்கத்துக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களை ஆக்ரமித்துக் கொள்ளும் அவர்களைக் கேட்டாலும் அடி உதைதான்!

''என்னைக் கடந்த 13.4.84 அன்று கட்டி வைத்து உதைத்தார்கள் கவுண்டர்கள். அதன் பிறகு, இருபது நாட்கள் கழித்து, வயல் வேலைகளுக்குச் சென்று வந்த எங்கள் இளைஞர்களையும் தாக்கினார்கள். போலீஸில் புகார் கொடுத்தால், தாக்கியவர்கள் மீது வழக்குப் போடாமல் அடிபட்ட எங்கள் மேலேயே வழக்குப் போட்டுவிட்டார்கள். அதற்கு நாங்களெல்லாம் ஒன்று சேர்ந்து பலமான எதிர்ப்பைக் காட்டிய பிறகுதான் அவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

''நாங்களோ கூலி வேலை செய்து பிழைக்கும் ஏழைகள். பல நாள் பட்டினி கிடக்க வேண்டிய நிலையிலிருக்கும்எங்களால்கவுண்டர்களை எதிர்த்து வழக்கு நடத்த முடியுமா? எத்தனை நாளைக்குத்தான் இப்படிச் சித்திர வதைகளை அனுபவித்துக் கொண்டிருப்பது? இவற்றிலிருந்து விடுபடுவதற்கு எங்களுக்குத் தெரிந்த ஒரே வழி முஸ்லீம் மதத்துக்கு மாறி விடுவதுதான். அதைத்தான் நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்!'' என்று மனம் குமுறிச் சொன்னார் வேடியப்பன்.

''முஸ்லீம் மதத்தில் சேர்ந்து விடுவதால் மட்டும் உங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஒழிந்து விடுமா என்ன?''

''இப்போது நடந்து கொண்டிருக்கும் அக்கிரமங்களைத் தட்டிக் கேட்க, எந்த இந்து மத அமைப்பும், தலைவர்களும், அரசாங்கமும் முன்வராதபோது நாங்கள் வேறு என்னதான் செய்ய முடியும்? இந்த ஊரிலுள்ள முஸ்லீம்களை கவுண்டர்கள் சமமாகத்தான் நடத்துகிறார்கள். அதனால்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்.''

''முஸ்லீம் மதத்திலும் தாழ்த்தப்பட்ட பிரிவுகள் இருக்கின்றனவே?''

''அது பற்றியெல்லாம் தீர விசாரித்துப் பார்த்துவிட்டோம். அதில் பல பிரிவுகள் இருந்தாலும் ஏற்றத் தாழ்வுகள் இல்லை. இந்து மதத்தில் இருப்பது போன்ற கொடுமைகளும் இல்லை!

''இதுபோல் முஸ்லீம் மதத்துக்கு மாறுபவர்களையெல்லாம்ஒருசிலர் பணம்கொடுத்துச் செய்யும் வேலை என்ற ஒரு கருத்தும் இருக்கிறதே, அது பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

''கேவலம் இறந்துபோன பிறகுகூட சுடுகாட்டில் பிரித்து வைக்கிறார்கள் சார்! எங்கள் பிணங்களை நாங்கள் ஆற்றங்கரையில்தான் புதைக்க வேண்டும். மழைக்காலத்தில் வெள்ளம் வரும்போது பிணக் குழிகள் அரிக்கப்பட்டுப் பிணங்கள் ஆற்றுத் தண்ணீரில் மிதந்து போகும் கொடுமைகளுக்கெல்லாம் ஒரு முடிவே இல்லையா? பிணங்களைக் கூடப் பிரித்து வைக்கும் இந்து மதத்தில் நாங்கள் இன்னமும் எதற்காக சார் இருக்க வேண்டும்?

''இங்கு கூட்டுறவு வங்கி, கூட்டுறவு பால் சொசைட்டி, மூன்று கோயில்கள், என்று பலவும் இருக்கின்றன. ஆனால், அவை எதிலுமே ஹரிஜனப் பிரதிநிதிகள் இல்லை. ஏன் சார் இந்த நிலைமை? பணம் எங்களுக்குப் பெரிது இல்லை. மானம்தான் சார் பெரிது.



* வெள்ளையப்ப கவுண்டர்: சிவலிங்கம் சொல்வது தான் சரி!

தன்மானத்தோடு வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அப்படிப்பட்ட வாழ்வை இந்து மதத்தில் வாழ முடியாது என்பதால் தான் முஸ்லீம்களாக முடிவு செய்திருக்கிறோம்!'' என்றார் வேடியப்பன்.

எங்கள் அருகில் நின்று கொண்டிருந்த முனுசாமி என்ற ஹரிஜனப் பெரியவரிடம், ''வேடியப்பன் சொல்வதெல்லாம் உண்மை தானா? நீங்கள் கவுண்டர் தெருவுக்குள் செல்லும்போது செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டுதான் செல்லுகிறீர்களா?'' என்று கேட்டபோது, ''ஆமாம் சாமி!'' என்றார். இன்றும் உயர் ஜாதிக்காரர்களை அந்த ஊர் ஹரிஜனப் பெரியவர்கள் ''சாமி!'' என்று தான் விளிக்கிறார்கள்!

நாங்கள் வேடியப்பன், முனுசாமி ஆகியோருடன் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு ஹரிஜனப் பெண்மணி வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்தார். அத்தனை அவசரமாக எதற்கு ஓடி வருகிறார் என்று விசாரித்தபோது, தண்ணீர் குடிப்பதற்காகத்தான் என்று சொன்னார்கள்.

குடி தண்ணீருக்கா இத்தனை தவிப்பு? விசாரித்தபோது கவுண்டர்கள் வீட்டில் ஹரிஜனங்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது என்னதான் தாகமெடுத்தாலும் கவுண்டர்கள் தண்ணீர் தரமாட்டார்களாம். ஹரிஜனக் காலனிக்கு வந்துதான் குடித்து விட்டுச் செல்ல வேண்டுமாம்! இதை அவர்கள் சொன்னபோது வேதனையாக இருந்தது.

ஹரிஜனக் காலனியிலிருந்து புறப்பட்டுச் சென்று சிவலிங்கம் என்ற கவுண்டர் இளைஞரைச் சந்தித்து, ''ஹரிஜனங்கள் மதம் மாறப் போவதாகக் கூறுகிறார்களே?'' என்று கேட்டபோது, ''போகட்டுமே! நாங்களா தடுக்கிறோம்? எங்கள் மூதாதையர்கள் வேண்டுமானால் அவர்கள் சொல்லுவது போல் அவர்களை ஜாதிப் பாகுபாட்டோடு நடத்தியிருக்கலாம். இப்போது நாங்கள்தான் ஹரிஜனங்களுக்குப் பயந்து கொண்டிருக்கிறோம்!'' என்றார். அவர் அருகிலிருந்த வெள்ளையப்ப கவுண்டரும் சிவலிங்கம் சொல்வதுதான் 'சரி என்பது போல் தலையாட்டினார்.

அங்குள்ள டீக்கடை ஒன்றுக்குச் சென்றோம். அந்த கிராமத்தில் மொத்தம் மூன்று டீக்கடைகள். மூன்றையும் முதலியார்கள் தான் நடத்துகிறார்கள். நாங்கள் சென்ற கடை தீர்த்தகிரி முதலியார் என்பவருடையது. அவர் அங்கு இல்லை. அவர் மகனிடம் விசாரித்தபோது, ''முன்பெல்லாம் ஹரிஜனங்களுக்கான கிளாஸ்கள் தனியாகத் தான் வைக்கப்பட்டிருந்தன!'' என்றார்.

''ஏன் அப்படி?'' என்று கேட்டபோது, ''அதெல்லாம் அப்பாவிடம்தான் கேட்க வேண்டும்!'' என்று நழுவிவிட்டார்.

மற்றொரு டீக்கடைக்குச் சென்றபோது பல கவுண்டர்கள் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் பெருமாள் கவுண்டரிடம் ஹரிஜனங்களின் மதம் மாறும் முடிவு பற்றிக் கேட்டபோது, ''எல்லாரும் ஒற்றுமையாகத்தான் இருந்தோம். இப்போது ஹரிஜன மக்களுக்குத் தலைவன் போலிருக்கிறானே வேடியப்பன் அவனுக்குக்கூட நான் கடன் கொடுத்திருக்கிறேன். எப்போது திரும்பி வரும் என்றுகூடத் தெரியாது!'' என்றார்.

''வேடியப்பனை சமீபத்தில் கவுண்டர்கள் கட்டிப் போட்டு உதைத்ததாக அவரே சொன்னாரே?''

''விளக்கு வைத்த பிறகு வீட்டுக்கு வெளியில்கூட நான் வருவது கிடையாது. வேடியப்பன் மனைவி ஒரு கவுண்டர் தோட்டத்தில் அவரக்காய் திருடியபோது, அந்தக் கவுண்டர் வீட்டுப் பெண்மணி, வேடியப்பன் மனைவியை அறைந்துவிட்டாளாம். பிறகு வேடியப்பன் அந்தக் கவுண்டர் பெண்ணை அடித்துவிட்டானாம். இதனால் ஆத்திரப்பட்ட கவுண்டர்கள் ஒன்று சேர்ந்து வேடியப்பனை அடித்ததாக ஊரில் பேசிக் கொண்டார்கள். இது தான் எனக்குத் தெரியும்!''

''புறம்போக்கு நிலத்தையெல்லாம் கவுண்டர்கள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறார்களாமே?''

''அட நீ ஒண்ணு தம்பி! உன் நிலத்துக்குப் பக்கத்துலேயே கொஞ்சம் நிலம் சும்மா கிடந்தால் நீ உபயோகப்படுத்திக் கொள்ள மாட்டாயா? இதெல்லாம் பெரிய விஷயமா

காட்பரிஸ்

போர்ன்விடா



சுறு சுறுப்பு பானம்!

போர்ன்விடா—கோகோ, மால்ட், பால் மற்றும் சாக்கரையின் ஊட்ட நலன்களைக் கொண்ட ஒரு உன்னத உணவு பானம் ஆகும். 100 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் உடைய காட்பரி நிபுணர்களால் தயாரிக்கப்படுவது போர்ன்விடா.

ஒவ்வொரு கப் பாலுடனும் இரண்டு ஸ்பூன் போர்ன்விடா சேர்த்து, உங்கள் குடும்பத்தினருக்கு நலமான சுவையான பானம் அளியுங்கள்.

வளரும் குழந்தைகளுக்கு விசேஷமாக நன்மை அளிப்பது போர்ன்விடா. அவர்களுக்கு தேவைப்படும் விசேஷ ஊட்டச் சத்தும் சுடிகையும் பெற்றிட தினமும் இருவேளை அவர்களுக்கு போர்ன்விடா தாருங்கள்.

கவனத்துடன் வளர்த்திடும் ஒரு அன்னை கூறுகிறாள் "என் குழந்தைகளுக்கு போர்ன்விடா தருவதினால், வளரும் வயதில் அவர்களுக்குத் தேவையான விசேஷ ஊட்டம் கிடைக்கிறது. ஆகவே நல்ல வளர்ச்சி. போர்ன்விடா பயிற்சி."




போர்ன்விடாவின் இனிமைக் காலம். போர்ன்விடா அளித்தவரை பாசமனங்கள் நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்.

OBM/5135/TAM

பேனினல் தலைமுடி உதிரும்

நறுமணம் கமழும் கென்ஸ் தைலத்தை உபயோகித்து ஈறையும், பேனையும் அறவே ஒழியுங்கள். தலை முடியை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



கென்ஸ்

'சிறந்த பேன் நாசினி'

ஈறுகளையும் கொல்லும் பென்சோகெயின் கலந்தது.



PHARM PRODUCTS

பார்ம் ப்ராடக்ட்ஸ்

தஞ்சாவூர்-613 007 தமிழ்நாடு

விற்பனை விவரங்களுக்கு எழுதவும்.

Chhaya/PP/582/1

ஸ்ரீ வேத பாராயண சபா

பிருந்தாவன் நகர்

ஆதம்பாக்கம் சென்னை - 600 088

சென்னை, பரங்கிமலை ஸ்டேஷன், ஆதம்பாக்கம் அடுத்து பிருந்தாவன் நகர், சென்னை—88 ல் அமைந்துள்ள ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அம்பிகா சமேத் சிவாலயம் அமைக்க, அடிதேவஸ்தானத்தார் அனுமதியுடன், ஸ்ரீ வேத பாராயண சபையினர் தீர்மானித்துள்ளது அனைவரும் அறிவர். இதற்காக பக்த கோடிகள் தாராளமாக அளித்த நன்கொடை மூலம் இதுவரை சுமார் ரூ. 50,000/— வசூல் ஆகி உள்ளது.

இந்த ரூ. 50,000/—த்தில், ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி தேவஸ்தான நிர்வாகத்தினர் விரும்பியபடி ரூ. 45,000/— பாங்கில் நிரந்தர நிதியில் வைக்கப்பட்டு, அதில் வரும் வட்டியை சிவாலய நித்ய பூஜைக்காக மட்டுமே உபயோகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவாலய கட்டிட வேலை இம்மாதம் துவங்கப்பட்டு நடந்து வருகிறது. இந்த ஆலயம் முடிவுற ரூ. 1,00,000—க்கு மேல் தேவைப்படுகிறது. நிரந்தர நிதியில் போட்டது போக, மீதி இருப்பு சுமார் ரூ. 5000/—ல் ஆலய திருப்பணி தடங்கலில்லாமல் விரைவில் முடிவுற, பக்த கோடிகள் அனைவரும் தாராளமாக பொருளாகவும், நிதியாகவும் உதவி அளித்து இறைவன் அருள் பெற வேண்டுகிறோம். நன்கொடை அளிக்க விரும்புவோர் தங்கள் நன்கொடைகளை ஸ்ரீ வேத பாராயண சபா, 20, பாக்கியம்மாள் தெரு, சென்னை—88 விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோர்கள்.

Space Donated by JAYASAKTHI FINANCIERS, Madras.

JAYADTS.

என்ன! அவனுக கூடத்தான் இது மாதிரி செய்து கொண்டிருக்கானுக!" என்றார். மற்ற கவுண்டர்களும் இப்படித்தான் சொன்னார்கள். எது உண்மை?

ஹரிஜன மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும்வேடியப்பன் ஏழாம்வகுப்பு வரை படித்தவர். சிறு வயதிலேயே ஊரை விட்டு ஓடி வெளியூர்களுக்குச் சென்று வாழ்ந்து பிறகு சொந்த ஊருக்கு வந்தவர். மார்க்ஸிஸம் தெரிந்திருக்கிறார். பேசும் போது சர்வ சாதாரணமாக 'நிலப்பிரபுத்துவம், வர்க்கம், பூர்ஷ்வா' போன்ற வார்த்தைகள் அவரை அறியாமலேயே தெறித்து விழுகின்றன. இவருடைய போராட்டத்தால் தான் டீக்கடைகளில் பொதுவான கிளாஸ்களில் ஹரிஜனங்களுக்கு டீ கொடுக்கும் நிலை வந்ததாகப் பலரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட இவரை எதிர்ப்பதற்காகவே 15.3.84ல் அந்த ஊர் கவுண்டர் இன இளைஞர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கம் அமைக்கப்பட்ட பிறகுதான் அங்குள்ள ஹரிஜனங்கள் மீது தாக்குதல்கள் நடந்ததாகச் சொல்கிறார்கள். இத்தனைக்கும் அந்த அரூர்த் தொகுதி ஹரிஜனப் பிரதிநிதியை எம். எல். ஏ. (அ.இ.அ.தி.மு.க.) வாகக் கொண்ட ரிசர்வ் தொகுதி. அப்படியிருந்தும் அந்த எம். எல். ஏ. இந்த அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுக்காததுதான் ஆச்சரியம்!

உண்மையிலேயே இந்த மதம் மாறும் விஷயத்தைப் பற்றி ஹரிஜனப் பெரியவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. இளைஞர்கள் தான் இந்த விஷயத்தில் வேகமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆக, ஐம்பதாண்டுகளுக்கு முன்பு பெரிய குளம் பகுதியில் தொடங்கி, மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மீனாட்சிபுரத்தில் தொடர்ந்த இந்த மதமாற்றம் இன்றும் பரவிக் கொண்டுதான் இருக்கிறது. இந்து மதத்தைத்தாங்கள்தான் காப்பாற்றிக்கொண்டிருப்பதாக முழங்கிக் கொண்டிருக்கும் அமைப்புகளும், மடாதிபதிகளும், பீடாதிபதிகளும் இனியாவது ஜாதிச் சுவர்களை உடைத்தெறிய முன்வருவார்களா? அப்படி அவர்கள் முன்வரா விட்டால் இந்து சமுதாயம் அழிவுப் பாதையை நோக்கிச் செல்வதை யாராலும் தடுக்க முடியாது.

கட்டுரை: **ப்ரியன்**

அட்டை வண்ணப்படமும்,
புகைப்படங்களும்: **மணே**



அடுத்த இதழில்...

வீரப்பனுக்கு வீழ்ச்சியா?

—மனம் விட்டுப் பேசுகிறார் வீரப்பன்



மணப் பெண்ணின் தந்தை: ''சீக்கிரம் சொல்லுங்க. எங்க பொண்ணை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

மணமகனின் தந்தை: ''எதுக்கு இவ்வளவு அவசரப்படறீங்க?''


ம. பெ. தந்தை: ''டிபன் செய்யத் தான்....!''

— ரம்யா.

கணவன்: (மனைவியை நோக்கி): சேச்சே... வரவர உங்க சக்களத்தி சண்டையால் எனக்கு மன நிம்மதி இல்லாமப் போச்சு. பேசாம இன் னொருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கிட்டு அவளோடவாவது நிம்மதியா இருக்கேன்!

— குமார்.





நன்றி: சோவியத் யூனியன்

தகவல்: இரா. சிவா.



''யோவ், குடிகாரக் குமரேசன் வீட்டுக்கு எப்படிய்யா போவணும்?''

''சரியாப் போச்சு... நீதானே அந்தக் குடிகாரக் குமரேசன்...''

''அது தெரியுது. அவன் வீட்டுக்குப் போக வழி எப்படின்னு தான் கேட்கறேன்...?''

—குமார்.

உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை


டெட்



உன்னதம்...உன்னதம்...
வெண்மையிலே
அனைத்திலும் உன்னதம்!

உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரிய மளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கி யுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.

நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.





கல்கி

1985 அக்டோபர் 13
மலர் 44 இதழ் 11
குரோதன புரட்டாசி 27



தேவை – ஒரு வைத்தியநாத அய்யர்!

காஞ்சி முனிவரின் அருள் வாக்கைப் பிரகரிப்பதால் கல்கி பார்ப்பனர் பத்திரிகை!

பிராமணர் சங்கத்தின் சென்னைக் கிளையின் ஒரு செயலைக் குறை கூறியதால் கல்கி பிராமணர் துவேஷப் பத்திரிகை!

'தேவையின்றி ஒரு துப்பாக்கி சூடு!' என்ற கட்டுரை வெளிவந்ததால் கல்கி கிறிஸ்துவ மீனவர்கள் சிலரால் நடத்தப்படும் பத்திரிகை!

கருணாநிதியிடம் ஈழப் பிரச்னையில் நமக்குக் கருத்து மாறுபாடு உண்டு என்பதால் கல்கி ஆளும் கட்சிகளுக்குத் துதி பாடும் பத்திரிகை!

'அப்பனுக்குச் சாராயம்; குழந்தைக்குச் சத்துணவு!' என்று கட்டுரை இடம் பெற்றதால் கல்கி ஆளும் கட்சி மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட பத்திரிகை!

இப்படிப் பல நேரங்களில் பலவிதமாக முத்திரை குத்தப்படுவதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அது கல்கி, எந்த அரசியல் கட்சியையோ, மதத்தையோ, ஜாதியையோ சாராமல் நடுநிலையில் நின்று பிரச்னைகளை அலசுகிறது; முடிவுகளைச் சொல்கிறது என்பதுதான். நமக்கு யாரிடமும் விரோதமும் இல்லை; பந்த பாசமும் இல்லை. குறை கூறுவதெல்லாம் அன்பு காரணமாகவே, நாட்டு நலனை உத்தேசித்தே, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவே. 'நமக்கு ஏன் வம்பு, எல்லாரிடமும் நல்ல பெயர் வாங்கிக் கொண்டு போகலாம்' என்று ஒதுங்குவது ரொம்பச் சுலபம்; வியாபார நோக்கில் லாபம்; ஆனால் அது பத்திரிகை தர்மமாகாது; கடமையைச் செய்ததும் ஆகாது. அநீதியை எடுத்துச் சொல்லாமலிருப்பதே அதற்குத் துணை போன மாதிரிதான்.

நன்கு படித்தறிந்தவர்கள், விஷய ஞானமுள்ள பெரியவர்கள் கூட, 'வெங்கட்டுக்குக் கல்கி எப்படிப் பரிந்து பேசலாயிற்று?' என்று கேட்கிறார்கள். 'அவர் பிராமண சமூகத்தினரைத் தவிர வேறு எந்த ஜாதியினரையாவது, மதத்தவரையாவது குறை கூறத் துணிவாரா?' என்று சவால் விடுகிறார்கள். ஆனால் நாம் எடுத்துக் கொண்ட பிரச்னை அதுவல்ல. வெங்கட் செய்த காரியம் தவறு என்பதாகவே ஒப்புக் கொள்வதானாலும் அந்தத் தவற்றைத் திருத்தவோ, கண்டிக்கவோ, தர்ம நியாயமான, ஜனநாயக மரபுகளுக்கு உள்ளடங்கிய வழி முறைகளை பிராமணர் சங்கம் கையாள வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுவதே நமது நோக்கம்.

இதே பிராமணர் சங்கம் (சென்னைக் கிளை) ஆதி திராவிடர்—பிராமணர் ஒற்றுமை மாநாடு நடத்தியதை மனப்பூர்வமாக வரவேற்று வாழ்த்துகிறோம். மதுரை வைத்தியநாதய்யர் அரங்கம் அமைத்தது மிகப் பொருத்தமானது. ஹரிஜனங்களுக்காக அவர் செய்த காரியங்


கள், நடத்திய போராட்டங்களுக்கு ஈடு இணை கிடையாது.

ஒரு வைத்தியநாத அய்யர் இல்லாத காரணத்தால்தான் தமிழ்நாட்டின் சில இடங்களில் ஹரிஜனங்கள் இன்னமும் மனிதராக மதிக்கப்படுவதில்லை. இந்தக் கொடுமைகள் நீங்க வேண்டும், அவர்கள் சமத்துவம் பெற வேண்டும் என்ற நோக்கில்தான் சில சம்பவங்களை அவ்வப்போது கல்கி வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறது. இந்த இதழிலும் அத்தகைய ஒரு கட்டுரை இடம் பெறுகிறது.

இந்த 'கவர் ஸ்டோரி'யைப் படித்துவிட்டு உடனே சில 'மேல்' ஜாதியினர் நம் மீது கோபப்படாமல் இருப்பார்களாக! இதே 'மேல்' ஜாதியினர் தமிழகமெங்கும் செய்துள்ள, செய்து வருகிற பல உன்னதமான காரியங்கள், சாதனைகள் நாம் அறியாததல்ல. எழுதாததும் அல்ல. ஏன், விரப்ப நாய்க்கன் பட்டி கிராமத்திலேயே முற்போக்கு சிந்தனையுள்ள பல 'மேல்' ஜாதியினர் இருக்கலாம்; விஷமிகளான சில ஹரிஜனங்களும் இருக்கலாம். ஆனால் நாம் சுட்டிக்காட்ட விரும்புவது அங்குள்ள ஹரிஜனங்களில் பெரும்பாலோர் மதம் மாறிவிட வேண்டும் என்று எண்ணுமளவுக்கு மனம் நொந்து போயிருக்கிறார்கள் என்பதுதான்.

மாற்று மதத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு மதம் மாறினால் போற்றலாம்; பணத்தாசைக்கு அடிமையாகி மதம் மாறினால் தூற்றலாம். ஆனால் ஜாதிப் பிரச்னை காரணமாக ஹரிஜனங்கள் மதம் மாறுவதாகச் சொன்னால், ஹிந்துக்கள் அனைவரும் ஆத்மப் பரிசோதனை செய்து கொள்ள அவசியம் இருக்கிறது. அதை வலியுறுத்துவதே இந்த இதழ் 'கவர் ஸ்டோரி'யின் நோக்கம். அரசு சட்டம் இயற்றலாம்; ஆனால் அதன்படி நடக்க 'மனப் பக்குவத்தை ஆத்மப் பரிசோதனை மூலம்தான் பெறமுடியும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்.





இதுகள் எங்கட முதுசங்கள்தான்

"இந்தத் தடவையும் நாங்கள் முத்தத்தில் அடுப்பு வைச்சுப் பொங்கலாமெண்டு நினைக்கேல்லை செல்லம். நாட்டு நிலைமை வர வர மோசமாகிக் கொண்டு வருகுது"

யாழ்ப்பாணத்துப் பனங் கிழங்கை இரண்டாகப் பிளந்து, அதன் ஒரு பாதியைக் கை விரல்களால் முறித்து வாயில் போட்டபடி தன் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தார் கந்தப்பு.

யாழ் நகரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் இருக்கும் கோப்பாய் கிராமத்தில், யாழ்ப்பாணம் — பருத்தித் துறை நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து கிழக்குப் புறமாகச் செல்லும் 'மக்கி' ரோட்டில் மேலும் இரண்டொரு பர்லாங் தொலைவைக் கடந்தால் கந்தப்புவின் வீட்டை அடையலாம்.

பழைய காலத்து மண் வீட்டை இடித்து விட்டு, மூன்று வருடங்களுக்கு முன்னர்தான் அவர் அந்த இடத்தில் விஸ்தாரமாக ஓர் ஓட்டு வீட்டினைக் கட்டியிருந்தார்.

அதுவும் அவரது மகன் வாகீசன் துபாயில் நாயாய் அலைந்து உழைத்து அனுப்பிய பணத்தில் கட்டியது.

பழைய மண் வீட்டின் முன்னால் போடப்பட்டிருந்த மல்லிகைப் பந்தலை வெட்டி எறிய நினையாமல், அதனை இந்தப் புதிய வீட்டின் முற்றத்தில் கொஞ்சம் அழகாகப் பனை மரங்களால் பந்தல் போட்டுப் படரவிட்டிருந்தார்.

வீட்டின் பின்புறம் யாழ் மண்ணுக்கேயுரிய கற்பகத் தருக்களான பத்துப் பன்னிரண்டு பனை மரங்களும், அவற்றின் இடையே அவர் ஆசையாக நட்டு வளர்த்த கிணற்றடிக் கமுக மரங்களும் காற்றில் அங்குமிங்கும் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

சென்ற மழைக் காலத்தின்போது, பனை மரங்களில் இருந்து மண்ணில் பழுத்து விழுந்த பனம்பழங்களை ஒவ்வொன்றாகப் பிளந்து, வளவு மூலையில் மண் மேடையிட்டு, அதன் மீது முளைக்க வைத்திருந்தார்.

அந்தப் பனம் 'பாத்தி'யிலிருந்து பதமாக இழுத்தெடுத்த நாலைந்து பனங் கிழங்குகளைச் செல்லம்மாவிடம் கொடுத்து அடுப்புச் சாம்பலில் வேக வைத்து எடுத்து வந்திருந்தார் அவர்.

ஜனவரி மாதம் பிறந்துவிட்டால், யாழ்ப்பாணத்தின் ஏனைய காய்கறிகளுடன் பனங் கிழங்குகளும் சந்தைக்கு வந்துவிடும். கிராமப்புற ஏழை மக்களில் பலர் இந்தப் பனங்



கிழங்குக் காலத்தில் அவர்களுக்கு வரும் பணத்தை வைத்துத்தான் தைப்பொங்கலைக் கூட கொண்டாடுவார்கள்.

கந்தப்புவைப் பொறுத்தமட்டில் அவர் பனங் கிழங்கு விற்று சீவியம் நடத்த வேண்டிய நிலையில் இன்றில்லை. அவரது ஒரே பையனும் கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு நான்குவருடங்களுக்கு முன்பே துபாயிக்குச் சென்றுவிட்டதால், அவன் அனுப்பும் பணத்தில் அவரது குடும்பம் ஓடிக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணச் சந்தையில் அவருக்கென்றிருந்த ஒரேயொரு மளிகைக் கடையும் எண்பத்தொராம் ஆண்டில் நடந்த இராணுவக் கடையெரிப்பின்போது சாம்பலாகிப் போய் விட்டது.

அதன்பின்னர், அவர் தமது கடையைப் புதுப்பித்து வியாபாரத்தை ஆரம்பிக்க முயன்ற சமயம், மீண்டும் நாட்டில் ஆங்காங்கே கடையெரிப்புக்களும், சூறையாடல்களும் நிகழ்வது அன்றாடச் சம்பவங்களாகி விட்டிருந்ததால், ''மினக்கெட்டு முதலைப் போட்டுக் கடையை ஆரம்பிச்சாலும், பிறகும் .இந்த ராணுவக்காரங்கள் வந்து ஒரு நாளைக்கு எரிச்சுப் போடுவாங்கள் — அதனாலை மகன் அனுப்புற காசிலைக் கொஞ்சத்தை எடுத்து நாங்கள் சாப்பிடுவம்'' என்று செல்லம்மாவுக்குச் சமாதானம்! செல்லம்மாவுக்கும் நாட்டு நிலவரம் தெரிந்திருந்ததால், கணவர் சொன்னதை ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்றாலும் அவர்களுக்கென்று சிறிது தொலைவில், நீர்வேலி கிராமத்தில் இருக்கும் பள்ளக் காணியில் நெல் சாகுபடி செய்வதை அவர்கள் விட்டுவிடவில்லை.


ஆனால்இப்போதுஇரண்டுவருடங்களாய் வயல் வேலைகளுக்கும், தோட்ட வேலைக்கும் ஆட்களைப் பிடிப்பது சிரமமாகப் போய்விட்டது. நாட்டில் நடக்கும் அரசியல் பிரச்சனைகளால் இளைஞர்களில் திடகாத்திரமாய் இருப்பவர்களெல்லோரும் அரசப் படையினருக்கு விடுதலைப் புலிகளாகத் தெரிந்ததால், கண்டபடி அவர்களைச் சிறைப் பிடித்துச் செல்லவும், கொல்லவும் ஆரம்பித்திருந்தார்கள்.

இதற்குப் பயந்தவர்கள் வெளி நாடுகளுக்குத் தப்பி ஓடிவிடக் கொஞ்சம் துணிவுள்ளவர்கள் நிர்ப்பந்தம் காரணமாய் விடுதலை வீரர்களாகவே மாறிவிட்டிருந்தார்கள். இதனால் தமிழ்ப் பிரதேசங்களின் வழக்கமான நடைமுறைகளில் மாற்றங்கள் உருவாகியது.

பண்டிகைக் காலங்களில்கூட நிம்மதியாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டதால், தமிழ்ப் பாரம்பரியத்தில்ஊறிப்போன முதியவர்கள், இவ்வாறான தடைகள் ஏதோ பெரிய அழிவுக்கு அறிகுறியாகும் என்று முணுமுணுக்கத் தொடங்கியிருந்தனர். கந்தப்புவும், அவ்வாறுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார். போன தடவை பொங்கலைக் கொண்டாட முடியாமல் போனதால் அவருக்குப் பெரும் மனக்கஷ்டமாக இருந்தது. ''அட, வருசத்துக்கு, ஒருமுறை வர்ற இந்த நாளைக் கூட நிம்மதியாக் கொண்டாட முடியாட்டி என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கு....?'' என்று அவர் எதிர் வீட்டு தம்பாப் பிள்ளை மாஸ்டரிடம்வருடம்முழுவதும்குறைப்பட்டுக்கொண்டிருந்தார்.

கோப்பாய் பாடசாலையில் தலைமையாசிரியராய் இருக்கும் தம்பாப் பிள்ளை மாஸ்டர் இந்த வருடத்தோடு ஓய்வு பெறும் வயதை எட்டியிருந்தார். அவரது ஒரேயொரு மகளும் வெளி நாடொன்றில் கணவரோடு குடும்பமாக இருக்கிறாள். மனைவி இறந்து நான்கு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. தனிக் கட்டையான அவருக்கு மூன்று வேளைச் சாப்பாடும், கந்தப்பு வீட்டில்தான்.

தமது சம்பளப் பணத்தில் கணிசமான ஒரு பங்கை மாதம் முடிந்ததும் செல்ல ம்மா



'சர்வசித்தன்'

வின் கையில் அவர் கொடுத்துவிடுவார். நாட்டு நடப்புகளைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வது கிடையாது.

பாடசாலைக்குப் பிள்ளைகள் வந்தால் அன்று ஒழுங்காக வகுப்புகள் நடக்கும். இல்லாவிட்டால், பேசாமல் வீட்டுக்கு வந்து படுத்துவிடுவார். பேச்சுத் துணைக்கும், சாப்பாட்டுக்கும் தான் சுந்தப்புவின் குடும்பம் இருக்கிறதே....! அது போதும் அவருக்கு.

வாசல் இரும்புக் கேட்டை யாரோ திறந்து மூடும் சப்தம் கேட்டதும் கையில் வைத்திருந்த பனங்கிழங்கைப் பாயில் வைத்துவிட்டு, வருவது யாராயிருக்கும் என்ற பாவனையில் புருவத்தைஉயர்த்திக்கூர்ந்துபார்க்கிறார் சுந்தப்பு.

அடுக்களையில் அலுவலாக இருந்த செல்லம்மாவும், வேலை செய்வதற்கு வசதியாக இடுப்பில் சற்று உயர்த்திச் சொருகியிருந்த புடவையைத்தழையவிட்டவாறு ஜன்னலால் எட்டிப் பார்க்கிறாள்.

''உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமோ, மிருசுவிலில ரயில் பாதையை யாரோ வெடி வைச்சுத் தகர்த்துப் போட்டாங்களாம் — இனி எங்களுக்கு எந்தச் சாமானும் வெளியில இருந்து வராது....'' பரபரப்புடன் கூறியவாறு தம்பாப் பிள்ளை மாஸ்டர் வந்துகொண்டிருந்தார்.

''என்ன ரயில்பாதையை உடைச்செறிஞ்சு போட்டாங்களோ! இது யாற்றை வேலையாயிருக்கும்?''

''வேற யார்? எங்கட இந்தப் பொடியங்களின்ர வேலைதான். தீவிரவாதிகள்தான் ரயில் பாதையை உடைச்சதா பேப்பரில போட்டிருக்கு!''

''இது இந்த மிலிற்றெரிக்காரற்றை வேலையாத்தானிருக்கும். அவங்கள்தான் உடைச்சுப் போட்டு பொடியங்கள் செய்து போட்டாங்களெண்டு சொல்லுறாங்கள். ஏனெண்டா பொங்கல் வருகுதில்லே, அப்போ வெளியில இருக்கிற நம்மட சனங்களெல்லாம் இங்க வரத் தொடங்கிவிடுவினம், குறிப்பா இனி நொச்சிப் பக்கத்திலிருந்து அரிசி, மிளகாய், வெங்காயம் இவையெல்லாம் வரவேணுமில்லே — அதை நிப்பாட்டுறதுக்கு அவங்கள் செய்த வேலையாத்தான் இருக்கும்'' சுந்தப்பு உறுதியாகச் சொல்கிறார்.

''என்ன சார் வேணும்?''
''மாதக் கடைசிக்கு ஏத்தபடி நீயாப் பாத்து ஏதாவது கொண்டு வாப்பா!''
—விக.



அவர் சொன்னதைக் கேட்ட பின்னர் தம்பாப் பிள்ளை மாஸ்டர், ''ஓ, அப்பிடியே சங்கதி, அப்ப இந்த யாழ்ப்பாணத்தாக்கள் பொங்கல் கொண்டாடுறதை எப்படியாவது தடுக்கிறதுக்காக அரசாங்கம் செய்யிற வேலைகளில இதுவும் ஒண்டுதானே?'' என்றார் வியப்புடன்.

''பின்னே, இந்த நேரத்தில எங்கட பொடியன் இப்பிடிச் செய்வாங்களோ! அவங்கள் செய்யிறதெண்டா இதைவிட எத்தனையோ வேலையள் செய்வாங்கள். ஆனா அநியாயமா பொது சனம் சாகப்படாது எண்டெல்லோ கொஞ்சம் நிதானமா....''

''அட இந்த வயசிலயும் உங்கள விட்டா புலிப்படையில போய்ச் சேர்ந்திடுவீங்கள் போல கிடக்கு....!'' நக்கலும், நையாண்டியுமாகத் தம்பா பிள்ளை மாஸ்டர் இவ்வாறு கேட்கையில், வாசலில் வண்டிச் சத்தம் கேட்கிறது. தொடர்ந்து காளை மாடுகளை அவிழ்த்து வேலியோரமாக நிற்கும் கதியால்களில் கட்டும் ஓசை....!

''ம்.... யாரிற்றையோ மாட்டு வண்டில் எங்கட வாசலுக்கை வந்து நிக்குது போலக் கிடக்கு!'' என்று முணுமுணுத்த சுந்தப்பு, ''இஞ்சேருமப்பா, வாசல்ல யாற்றையோ வண்டில் நிக்குது போல கிடக்கு. யாரெண்டு பாருமப்பா!'' என்று மனைவிக்குக் குரல் கொடுக்கிறார்.

இந்தச் சந்தடியில், முற்றத்து வேலிக் கரையில் படுத்திருந்த கிழட்டு நாய், எழுந்து நின்று பின் கால்களால் கழுத்தை மாறி மாறிச் சொறிந்தவாறு 'வள் வள்' என்று தனது பிரசன்னத்தைப் பறை சாற்றுகிறது.

வெளியே வந்த செல்லம்மாவின் கண்களில் ஆளுயரத்துக்கு பனை மட்டைகளாலும், பனை ஓலைகளாலும் நிறைந்து கிடக்கும் மாட்டு வண்டியும், அதன் அருகே நிற்கும் நான்கு இளைஞர்களும் தென்படுகிறார்கள்.

வயது முதிர்ந்த பெண் ஒருத்தி வெளியே வந்து எட்டிப் பார்ப்பதைக் கண்டதும் அந்த இளைஞர்களில் ஒருவன், ''இது வாசீசன்ரை வீடுதானே?'' என்கிறான்.

தனது பிள்ளையின் பெயரைக் கூறி, அது அவன் வீடுதானா என்று கேட்கும் வாலிபனை ஒரு கணம் கூர்ந்து பார்த்த செல்லம்மா மறு கணம், ''ஓமோம், தம்பியவை நீங்கள்...?'' என்று இழுக்கிறாள்.

''எங்களை வாசீசுக்கு நல்லாத் தெரியும். நாங்கள் ரெண்டு பேரும் அவனோட படிச்சனாங்கள்!'' என்று தன்னையும், மற்றொருவனையும் சுட்டிக் காட்டியவன், ஏனைய இருவர்களையும் காட்டி, ''அவன் மலைநாட்டில இருக்கிறவன். இவன் இந்தியாவில இருந்து போன கிழமைதான் வந்தவன்'' என்கிறான்.

''அப்போ.... நீங்கள்தான் அந்தப்...?'' செல்லம்மாளின் வார்த்தைகள் இடையில் நிற்கின்றன.

''நீங்க பயப்படாதீங்க. நாங்களெல்லாம் அவங்களேதான்!'' என்கிறான் தன் நெஞ்சை நிமிர்த்தி.



மிகப் புதியதான காஸ்கட்
ரிலீஸ் ஸிஸ்டம்
MAJESTIC
இந்தியாவின்
100% பாதுகாப்பான
பிரஷர் குக்கரை
உருவாக்குகிறது
உங்கள் நேரம், பணம், எரிபொருள் மூன்றும் தொடர்ந்து மிச்சப்படுகின்றன.
உணவின் மணமும், ருசியும் மாறாமலும் வைட்டமின்கள் சக்தி குறையாமலும் பாது காக்கப்படுகிறது.
3 லிட்டர் முதல் 12.5 லிட்டர் வரை உள்ள மெஜெஸ்டிக் குக்கர்களும், அவை சம்பந்தப்பட்ட இதர பாத்திரங்களும் அலுமினியம் மற்றும் எவர் சில்வரில் கிடைக்கின்றன.
MAJESTIC PRESSURE COOKER
G.R. System
எங்கள் மற்றைய பிரபலமான
விசில் செய்யும் சமையலறைத் துணைகள்.
IS 1660
MAJESTIC
MAJESTIC
ரைஸ் குக்கர்,
மில்க் பாய்லர்
இட்லி குக்கர்
பிரஷர் பான்
DISTRIBUTORS FOR TAMILNADU
Naik BROTHERS
56, Purushwalkam High Road, 1st floor, MADRAS -7 Phone : 662965 661034

''தம்பியவை சுறுக்கா உள்ளே வாங்கோ. ம்...!'' என்று துரிதப்படுத்திய செல்லம்மா அவங்களை அழைத்துக் கொண்டு வீட்டினுள் நுழைகிறாள்.

''யாரது.....பிள்ளையள்?'' என்று சந்தேகத்துடன் அந்த இளைஞர்கள் மீது பார்வையை வீசிய கணவரிடம், ''அதெல்லாம் எங்கட பிள்ளையள் தான். நீங்கள்தான் எங்கட மகனை இந்த நாலு வருசமாக் காணேல்லை என்று அங்கலாச்சுக் கொண்டு இருந்தீங்களே! அதுதான் கடவுளாப் பார்த்து நாலு பேரை இந்தப் பொங்கலுக்கு எங்களிட்டை அனுப்பி வைச்சிருக்கு...'' என்கிறாள் செல்லம்மா உள்ளப் பூரிப்புடன்.

''நீ என்ன சொல்கிறாய் செல்லம்? யாரிவங்கள்? பார்த்தா....?'' அவர் கண்களில் சந்தேகம் படர்கிறது.

''நீங்க நினைக்கிறது போல அவையளே தான்!''

''அப்போ.... இங்கே, இப்போ....?''

''நாங்கள் இங்க ஒரு நாற்பது பேருக்கு மேல இந்தக் கிராமத்தில இருக்கிறம். வாசலில இருக்கிற பனை மட்டையளுக்குள்ளேயும், பனை ஓலைகளுக்கிடையிலுந்தான் எங்கட ஆயுதங்கள் கிடக்கு. ஏன்? இப்பமிருசுவிலில தண்டவாளத்தைப் பெயர்த்துப்போட்டதாய் கேள்விப் பட்டிருப்பியளே, அதுகூட எங்கட ஆட்களின்ரை வேலைதான்!''

''என்ன....! நீங்கள் செய்த வேலையா இது? அட, போயும் போயும்.... பொங்கலும் அதுவுமா?'' என்று அங்கலாய்த்தார் கந்தப்பு.

''பொங்கலா.....?'' என்று புருவத்தை உயர்த்திய இளைஞன் ஒருவன் தொடர்ந்து, ''ஓ, தைப் பொங்கலைச் சொல்றீங்களா பெரியவர்? நாங்கள் சொல்லுறமெண்டு கோவிக்காதேங்கோ! இப்ப நாடு கிடக்கிற நிலமையில தைப்பொங்கலைக் கொண்டாட உங்களுக்கு மனசு வருகுதா?''

''இவர் இப்படித்தான் பிள்ளையள். அவருக்குத் தீபாவளி, தைப் பொங்கல், இதுகளெல்லாம் தவறக் கூடாது! அங்க மிலிட்டெரிக்காரன் கண்டபடி தமிழ்ச் சனங்களைப் பட்டாசு சுடுற மாதிரி சுட்டுப் பொசுக்கிறான். எங்களுக்கு மட்டும் பானையில அரிசி வைச்சுப் பொங்க வேணுமாக்கும்?''

கந்தப்புவுக்குச் செல்லம்மா கூறிய பதிலை வெகுவாகரசிப்பதுபோலத்தலையை ஆட்டிச் சிரித்தார்கள் அந்த இளைஞர்கள் நால்வரும்.

''அது சரி தம்பியவை நீங்கள் இப்ப எந்த ஊரில இருந்து வாரியள்?'' கந்தப்புதான் வினவுகிறார்.

''எந்த ஊராயிருந்தாலும், இப்ப எங்கட வீட்டுக்கு வந்திட்டா இதுகள் எங்கட பிள்ளையள்தான். நாளைக்கு எங்கட நாட்டுக்கு நல்ல வழி பிறக்க வேணுமெண்டா இந்தப் பிள்ளையளாலதான் முடியும். ம். சும்மா கதை பேசிக் கொண்டிருக்காமல், பின் ஒழுங்கையால போய் சிவகுருவின்ரை கடையில ஏதாவது மரக்கறி வாங்கிக் கொண்டு வாங்கோ. பிள்ளையள் பசியோட இருப்பினம்!'' என்று கணவனைத் துரிதப்படுத்தினாள் செல்லம்மா



daCunha/AS/35/85TM

சித்தரஞ்சனி

11. காத்திருந்தவன்! நேற்று வந்தவன்!

இரவின் மூன்றாம் ஜாமத்தில், எதிரேயிருந்த தாபோல் மலைக்காட்டு துஷ்ட மிருகங்களின் கர்ஜனை தவிர வேறு எந்த அரவமும் கேட்காத பயங்கரச் சூழ்நிலையில், மரக்கலக் காவலனையும் மீறி யாரும் மரக்கலத்தை அணுகுவதோ அதில் ஏறுவதோ நடக்காத காரியமென்று தீர்மானத்திலிருந்த யௌவன வீரன், சித்தரஞ்சனி எதிர்பார்த்தது சொப்பனமல்லவென்பதைச் சர்வ சாதாரணமாக உணர்த்திய வண்ணம் அறைக் கதவில் சாய்ந்து நின்ற கௌதமிபுத்ரனைக் கண்டதும் அவன் பெரும் வியப்பே அடைந்தாலும், பீதியைச் சிறிதும் அடைந்தானில்லை. சதகர்ணியின் குரலைக் கேட்டுச் சரேலெனத் திரும்பிய அந்த வாலிபன், "நீ யார்? இங்கு எப்படி வந்தாய்? சிங்கத்தின் வாயில்தானுகத் தலையை விட்டு மடிய அத்தனை விரக்தி எப்படி வந்தது?" என்று விடுவிடு என சொற்களை உதிர்த்தான். இத்தனைக்கும் அவன் எந்தவிதப் பதற்றத்தையும் காட்டாமலே ஏதோ குற்றவாளியைவிசாரிக்கும்நீதிபதியைப்போலவே நின்றான்.

கௌதமிபுத்ரன் கதவு மீது சாய்ந்த நிலையிலிருந்து சற்றும் அசையாமலே, "என் துணிவைப் பற்றி இன்றுவரை யாரும் சந்தேகப்பட்டதில்லை. சிங்கத்தின் வாயில் தலையை விடுவதென்றால் சிங்கம் யார் என்பதையும் பொறுத்திருக்கிறது" என்றான் நிதானமாக.

அவன் நிதானத்தையும், அவன் பதில் சொன்னதைத் தொடர்ந்து உதடுகளில் விரவிய புன்முறுவலையும் கவனிக்கவே செய்த சாக வாலிபன் "நீ இருக்கும் நிலை உனக்குப் புரியவில்லையா? புரிந்துதான் அசட்டுத் துணிவைக் காட்டுகிறாயா?" என்று வினவினான்.

"யார் நிலை யாருக்குப் புரியவில்லையென்பது தர்க்கத்துக்கு உரிய விஷயம்" சதகர்ணி சொற்களை இழுத்தான்.

"இதில் தர்க்கத்துக்கு என்ன இருக்கிறது? இப்பொழுதுகூட நான் ஒரு குரல் கொடுத்தால் இம்மரக்கலத்திலுள்ள காவலர் உன்னை வெட்டிப் போடுவார்கள்" என்று சுட்டிக் காட்டினான் அந்த வாலிபன்.

"அதில் இரண்டு கஷ்டங்கள் இருக்கின்றன. முதலில் உன் குரல் வெளிப்பட வேண்டும்."

"வெளிப்பட என்ன தடை?"

"உயிர் இருந்தால்தானே குரல் கொடுக்க முடியும்?"

"உயிர் இப்போது எங்கு போய்விடும்?"

"இதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது. சாஸ்திரங்களே இதற்குப் பதிலைத் தேடிக் கொண்டிருக்கின்றன. ஒன்று நிச்சயம் நீ குரல் கொடுக்க முற்படுமுன் உனது உட





லிலிருந்து உயிர் ஓடிவிடும். பிறகு அது எங்கு போகிறது, என்ன செய்கிறது என்றெல்லாம் என்னால் சொல்ல முடியாது'' என்ற சதகர்ணி ''காஷ்டானா!'' என்று அந்த வாலிபனை அழைத்தான்.

அந்த ஒரு சொல் அந்த வாலிபனுக்குப் பேரதிர்ச்சியை அளித்திருக்க வேண்டும். ''என்னை உனக்கு முன்பே தெரியுமா?'' என்று வினவினான் அதிர்ச்சி ஒலித்த குரலில்.

''ஏன் தெரியாது. நீ சாக இனத்தவனல்லவா?''

''ஆம்.''

''நான் சாகா இனத்தவன், சதகர்ணி.''

அந்த வாலிபன் கல்லாய்ச் சமைந்து நின்றான். ''கௌதமிபுத்ர சதகர்ணியா?'' என்று அதிர்ச்சியின் விளைவாகச் சிறிது குளறினாலும் விநாடி நேரத்தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''கௌதமிபுத்ரா! நீ இங்கு வந்திருப்பது தெரிந்தால் உடனடியாக வெட்டப்படுவாய். வந்த மாதிரியே தப்பி ஓடிவிடு'' என்று கூறினான்.

கௌதமிபுத்ரனைப் பற்றி காஷ்டானன் கேள்விப்பட்டிருந்தாலும், அவன் தாபோல் மலையில் இருப்பதைப் பற்றி மகாக்ஷத்ரபர் அறிவித்திருந்ததால் அதை உணர்ந்திருந்தாலும் அவன் இன்றுவரை சாதவாகனனை நேரில் பார்த்ததில்லையாகையால் சித்தரஞ்சனியின் உதவிக்கு வேறுயாரையோ சதகர்ணி அனுப்பியிருக்க வேண்டுமென்றே நினைத்திருந்த காஷ்டானன், வந்திருப்பவன் கௌதமிபுத்ரனே என்பதை அறிந்ததும் அச்சத்திற்கே உள்ளானான். தான் தப்பி ஓடிவிடச் சொன்ன பிறகும் சதகர்ணி இடித்தபுளியைப் போல் நின்ற இடத்தைவிட்டு அசையாததைக் கண்டு, ''ஏன் நிற்கிறாய்? உன்னைப் பேராபத்து சூழ்ந்திருக்கிறது. பொழுது விடிந்ததும், மகாக்ஷத்ரபரும், க்ஷத்ரபரும் 'இங்கு வருவார்கள். வந்தபின்பு நீ இங்கிருந்து அசைய முடியாது. ஆகவே இப்பொழுதே போய்விடு'' என்று வலியுறுத்தினான்.

''நான் மன்னன்'' என்று சுட்டிக்காட்டினான் சதகர்ணி.

''அதனாலென்ன?'' என்று காஷ்டானன் கேட்டான்.

''குற்றவாளியைத் தண்டிக்காமல் நான் போக முடியாது.''

''யார் குற்றவாளி?''

''நீதான்'' என்ற சதகர்ணி ''காஷ்டானா! சித்தரஞ்சனி இந்த மரக்கலத்தின் மீது ஏறி வந்ததும் அவள் இடையைப் பிடித்து அழைத்துப் போனாய். தவிர இந்த அறைக்கு வந்ததும் ஏற்கனவே தறிக்கப்பட்ட கைகால் தளைகளுக்குப் பதில் வேறு கயிறு கொண்டு அவளைப் பிணைத்துக் கட்டிலில் தள்ளியிருக்கிறாய். அவளைத் தொட்டதற்கே உன்னைக் கொன்றிருப்பேன். அவளை கைகால்களைக் கட்டி இந்தக் கட்டிலில் தூக்கிப் போட்டதற்கும் உன்னைக் கொல்ல வேண்டும். ஒரு மனிதனை ஒரு தடவைக்கு மேல் கொல்ல முடியாதாகையால் உனக்கு என்ன தண்டனை விதிக்கலாமென்று எனக்கே புரியவில்லை'' என்ற கௌதமிபுத்ரன், ''காஷ்டானா! அறையின் அந்த மூலைக்குச் செல்'' என்று கூறி ஓர் எட்டில் அவனை அடைந்து அவன் கச்சையிலிருந்த குறுவாளை எடுத்துக் கொண்டான். அடுத்து அவனை அறை மூலைக்குத் தள்ளிவிட்டு, அந்தக் குறுவாளால் சித்தரஞ்சனியின் தளைகளை அறுத்துப் போட்டான். பிறகு அவளைத் தூக்க முயன்ற சமயத்தில், ''அவளைத் தொடாதே!'' என்று கூவினான் காஷ்டானன்.

''ஏன் தொடக்கூடாது?'' எனறு வியப்புடன் கேட்டான் சதகர்ணி.

''அவள் என்னை மணக்க வேண்டியவள்'' என்றான் காஷ்டானன்.

''அப்படியென்ன கட்டாயம்?'' என்று சதகர்ணி வினவினான் ஏளனக் குரலில்.

''எங்கள் திருமணத்தை நிச்சயித்து ஓராண்டுக் காலம் ஆகிவிட்டது'' என்றான் காஷ்டானன்.

''இவளை மணக்க உனக்குத் தகுதி கிடையாது.''

''என் தகுதிக்கு என்ன குறைச்சல்?''

''இந்தச் சித்தினியை நீ எப்படி ஓராண்டு காலம் மணக்காமல் விட்டுவிட்டாயோ, அப்பொழுதே உனக்குத் திருமணத் தகுதி போய்விட்டது. தவிர.....'' சற்று நிறுத்திக் காஷ்டானனை நோக்கினான் சதகர்ணி.

''தவிர? வேறு என்ன?''

''நீ காலங்கடத்தியதால் ஏற்பட்ட தவறு.''

''என்ன தவறு?''

லேசாக நகைத்த கௌதமிபுத்ரன் ''தமிழில் ஒரு பழமொழி உண்டு'' என்றான்.

''பழமொழியா! இப்பொழுது பழமொழிக்கென்ன அவசரம்?'' என்று கேட்டான் காஷ்டானன்.

''நிலைமைக்குப் பொருத்தமாயிருக்கிறது. 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனான்' என்பது பழமொழி. நீ காத்திருந்தவன், நான் நேற்று வந்தவன். காதலில் காத்திருப்பதைப்போலப் பைத்தியக்காரத்தனம் வேறில்லை'' என்ற சதகர்ணி ''சித்தரஞ்சனி! வா என்னுடன்'' என்று கூறி அவளைக் கட்டிலிலிருந்து இறக்கி அவன் இடையில் தனது இடது கையைச் செலுத்தித் தன்னுடன் இழுத்துக் கொண்டான்.

அதைக் கண்ட காஷ்டானன் உறுமினான். ''காஷ்டானா! அறிவுடன் நடந்து கொள். என் கச்சையிலிருக்கும் கட்டாரி உன் உயிரைக் கண்ணிமைக்கும் நேரத்தில் முடித்துவிடும். கதவை ஓசைப்படாமல் திற. காவலரைப் படுக்கும்படி உத்தரவிடு. பிறகு நூலேணியை நீயே தொங்கவிடு. நானும் சித்தரஞ்சனியும் இறங்கிப் படகை அடையுமுன்பு எந்தவிதச் சைகை செய்தாலும் வாயைத் திறந்தாலும் பிணமாகிவிடுவாய். நான் உன் பின்னாலேயே நெருங்கி வருவேன். எந்தவித அலுவலிலும் அனாவசியமாக இறங்காதே. உனக்கு நல்ல காலம் இருக்கிறது. அதை வீணாக அழித்துக் கொள்



அதனால்தான் ரஜனி கோத்ரெஜ் வாஷிங் தயாரிப்புகளையே உபயோகிக்கிறார்.



"இக்காலத்திலே வாஷிங் பொருள்களின் விலை எக்கச்சக்கமாக ஏறிக் கிடக்கின்றன. எங்களைப் போன்ற நடுத்தர குடும்பத்து தாய்மார்களுக்கு மிகவும் சிரமம்தான்.

இருந்தாலும், எங்களுடைய குடும்பத்திற்கு எதுவாயினும் மிகச்சிறந்த பொருள்தான் வாங்க வேண்டும் என்பது என் எண்ணம். நான் பார்த்து பார்த்து வாங்குகிறேன். ஆகவே, நான் செலவு பண்ணும் ஒவ்வொரு பைசாவும் நல்ல வசூல் செய்து விடுகிறேன்.

வாஷிங் பொருள்கள் வாங்கும்போது, நான் கோத்ரெஜ் தயாரிப்புகளாகிய கீ டிடெர்ஜண்ட் பார், ட்ரைலோ டிடெர்ஜண்ட் கட்டி, பிஜ் துலக்கும் பவுடர் போன்றவைகளைத்தான் வாங்குவேன். ஈஸி லிக்யுட் டிடெர்ஜண்ட் மூலம் டிரைக்ளீனிங் செலவு மிகவும் மிச்சமாகிறது. அவற்றின் விலை நியாயமாகவும், உயர்ந்த தரம் வாய்ந்ததாகவும் இருக்கின்றன.

எனக்கும் பணத்தை விரயமாக்கப் பிடிப்பதில்லை. யார்தான் அப்படி செய்வார்கள்!"

உண்மையான மதிப்பைத் தரும் தயாரிப்புகளை **கோத்ரெஜ்** - வழங்குகிறது ரஜனியே ஒப்புக்கொள்கிறார்.

Mudra:B:G: 2631

ளாதே'' என்று சொன்ன சதகர்ணி அந்த அறையிலிருந்த விளக்கை ஊதிவிட்டான். சித்தரஞ்சனியைத் தனக்குப் பின்னால் வரும்படி அவள் கையை அழுத்தி ஜாடையால் கூறிவிட்டுக் கதவை மெதுவாகத் திறந்து ''முன்னால் செல்'' என்று காஷ்டானன் காதில் ஓதினான் மெதுவாக மந்திரம் ஓதுவது போல.

காஷ்டானன் மெதுவாக வெளியே தலையை நீட்டிப் பார்த்தான். மரக்கலத் தளத்துக் கோடியில் மாலுமிகள் பலர் படுத்து நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். நிலவின் வெளிச்சத்தில் காவலர் கும்பகர்ண சகோதரர்களாகிவிட்டதைக் கண்ட சதகர்ணி மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். சாக வாலிபனும் எந்தவித சப்தமும் இன்றி மெதுவாக அந்தப் பெரும் மரக்கலத்தளத்தில் நடந்து, அங்கிருந்த நூலேணியை ஓசைப்படாமல் இறக்கினான். ''இனி இறங்கலாம்'' என்று சொன்ன காஷ்டானனை ''நீ முதலில் இறங்கு'' என்று கூறியதன்றி வலுக்கட்டாயமாக இறக்கவும் செய்தான். அவனை அடுத்துத் தானும் இறங்கினான். பிறகு சித்தரஞ்சனியையும் இறங்கச் சொல்ல அவளும் மெதுவாக வரவே அவளைத் தூக்கி அங்கிருந்த படகில் இறக்கிவிட்டான். ''நான் வந்த படகைவிட இது பெரிதாயிருக்கிறது'' என்று சிலாகித்த சதகர்ணி, ''துறை முகத்துக்கு விடு படகை'' என்று கூறினான். அந்தப் படகில் பெரிய முண்டாக ஒன்றைக் கட்டிக் கொண்டு சற்றே குளிர் இருந்ததால் பெரிய போர்வையால் உடலை மூடிக் கொண்டும் உட்கார்ந்திருந்த படகோட்டி துடுப்புகளைத் துழாவப் படகு விரைந்தது.

துடுப்புகளைத் துழாவுபவன் ஒருவனேயென்பதையும் அவன் நல்ல பலசாலியென்பதையும் துடுப்புகளை அவன் துழாவிய வேகத்திலிருந்தே புரிந்து கொண்ட சதகர்ணி, சிறிது தூரம் படகு சென்றதும், தாபோல் மலைப்பகுதியை விட்டு வேறு வழியில் செலுத்தப்படுவதைக் கண்டு, ''படகைத் திருப்பு. துறைமுகத்துக்குப் போ'' என்று உத்தரவிட்டான்.

அவன் உத்தரவைக் காதில் வாங்காத படகோட்டி அஞ்சனவேல் நதியை நோக்கிப் படகைச் செலுத்தினான். அதனால் வெகுண்ட கௌதமிபுத்ரன் தனது கச்சையில் கையை வைத்தான் கோடாரியை எடுக்க. கோடாரி கச்சையில் இல்லை. தான் நிராயுதபாணியாகிவிட்டதைப் புரிந்து கொண்ட சதகர்ணி, ''படகோட்டி! இப்படித் திரும்பு'' என்று உத்தரவிட்டான். அதே சமயத்தில் சதகர்ணியின் முதுகில் குறுவாளொன்று ஊன்றப்பட்டது. படகோட்டியும் திரும்பினான் சதகர்ணியை நோக்கி. திரும்பியவன் முகத்தில் வெண் நிலவு பூர்ணமாய் விழுந்தது. அந்த முகம் நாகபாணன் முகம்!

(தொடரும்)



அருள்வாக்கு

சாஸ்திரம் விதிக்கிற வயஸை மீறுவதற்குச் சட்டம் காரணம் என்றால், சட்டம் போட்டிருக்கிற 'லிமிட்'டையும் மீறி 25 வயசு, 30 வயசுக்குக் கூடப் பெண்கள் கல்யாணமாகாமல் நிற்பதற்குக் காரணம் விவாஹத்தைப் பண சம்பந்தமான விஷயமாக்கியிருப்பது தான். இப்போது கல்யாணத்தில் நடக்கிற ஆடம்பரங்களும் வரதக்ஷிணை வாங்குவதும், சீர் செனத்தி கேட்பதும் சாஸ்திர சம்மதமானதல்ல. செலவழிப்பதற்குப் பெண் வீட்டுக்காரன் என்று ஒருத்தன் ஏற்பட்டிருக்கிறான் என்பதால் அவனிடம் ஒட்டக் கறக்க வேண்டும் என்பதற்காகவே பிள்ளைக்கு ஸூட் வாங்கித் தா; பூட்ஸ் வாங்கித் தா; ரிஸ்ட்வாட்ச் வாங்கித் தா'' என்று பறிமுதல் மாதிரிப் பண்ணி, இந்த அலங்காரங்களோடு ஜானவாஸ ஊர்வலம் என்று ரொம்பவும் அத்தியாவசியமான அம்சம் மாதிரி விவாஹத்துக்கு முதல் தினம் பண்ணுகிறார்களே இது சாஸ்திரத்தில் அடியோடு இல்லாத விஷயம். இதற்கு ஒரு மந்திரமும் கிடையாது.

பழைய நாளில் அதிபால்யத்தில் விவாஹமானதால், 'குழந்தைகளை உத்ஸாஹப்படுத்த வேண்டும், ஹோமப் புகையில் கஷ்டப்படுகிறதுகளே!' என்று விளையாடல், நலுங்கு ஊர்வலம் என்றெல்லாம் வைத்தார்கள். அவ்வளவு தான்.

''கன்யாம் கனக ஸம்பந்நாம்'' என்று சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதால், தங்கமானது லக்ஷ்மீ பிரஸாதத்தை உண்டாக்குவது என்பதால் தங்கத்திலே திருமாங்கல்யம் மட்டும் பண்ணினால் போதும். மற்ற நகைகள், வைரத்தோடு முதலியன வேண்டாம். பட்டும் வேண்டாம். நூலில் கூறைப் புடவை வாங்கினால் போதும். ஆந்திர தேசத்தில் இப்படித்தான் செய்கிறார்கள். எல்லாவற்றையும் விட வரதக்ஷிணை தொலைய வேண்டும். ஊர்கூட்டி சாப்பாடு, பாட்டு, சதிர், பந்தல் என்று விரயம் பண்ணுவதும் போக வேண்டும்.

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஆகையால் குழந்தைகளே....

ஹெச்.என்.ஹரிஹரன்

2086ம் ஆண்டு.

...ஜூவா சிறு குப்பியொன்றிலிருந்த மஞ்சள் திரவத்தை உறிஞ்சிக் கொண்டே நடுங்கும்விரல்களால்கையிலிருந்த 'ரிமோட்' டை அழுத்தினர். சுவரில் புதைந்திருந்த மின் துப்பாக்கி ஒன்று 'ஹோலோகிராம் ராக்கெட்'டை உமிழ்ந்தது. டெலிவிஷன் வகைகளில் புதிதாய்ச் சேர்ந்திருப்பது இந்த வகையான 'ஹோலோவிஷன்', முப்பரிமாண உருவங்களை அறையில் நிரப்பிவிடும் தன்மையுடையது.

அன்றைக்கு 'வாயேஜர்' எனும் ஃபோட்டான் ராக்கெட் (**Photon Rocket**) பற்றிய டாக்குமெண்டரியாக இருக்க வேண்டும். ஃபோட்டான் ராக்கெட்டுகள் இருபத்தியொன்றும் நூற்றுண்டின் மகத்தான கண்டுபிடிப்பு. இந்த ராக்கெட்டுகள் ஒளியின் அணுக்களையே எரிபொருளாக்கி ஒளியின் வேகத்தில் பாய வல்லவை.

இரண்டுபேரோடுகிளம்பிய அந்த 'வாயேஜர்' வெளியுலகங்களில் மனிதம் இருக்கிறதா என்கிற பேப்பர் ஆராய்ச்சியிலிருந்து விடுபட்டுக் கண்கூடான முடிவிற்கு வழி தேடிப்போய்க் கொண்டிருந்தது. அது நடந்து ஐம்பது வருடங்கள் ஆகியிருக்கும்.

விரல்கள்மாறிஇயங்கராக்கெட்அறையை விட்டு நீங்கியது. மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் கண்களை மூடி நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து உறங்க முயன்முர்.

தடதடவென்று ஒலியெழுப்பி ஓடி வந்து மறுகணம் மடியில் கனமாய் — அவருடைய குழந்தைகள். மனைவி சமாசாரமெல்லாம் இல்லாமல் பிறந்தவை. அவர் என்றைக்கோ

போட்டிக் கதை: 7



அனுப்பியிருந்த உயிர் அணுத்துளிகள் யார் மூலமாகவோ குழந்தைகளாய்க்கொடுத்திருக்கிறது அரசாங்கம். ஒருநாள் அவர் பொழுது போகவில்லை என்று குழந்தைகள் வேண்டி அவருடையதை அனுப்பி வைத்தார்; நான்கு ஐந்து வருடங்கள் கழித்து இவர்கள் வந்திருக்கிமுர்கள் — ஒரு சிறுவனும், சிறுமியும்.

''ஜூவா.... எனக்கொரு கதை சொல்லேன்'' தானுவும், ஜூனாவும் கொஞ்சினர்கள்.

''என்னுயிற்று என் குழந்தைகளே.... கம்ப்யூட்டர் சொன்ன கதைகளெல்லாம் பிடிக்கவில்லையா?''

''போ ஜூவா.... இந்தக் கம்ப்யூட்டருக்கு நன்ருகக் கார்ட்டூன் படம் போட்டுக் காட்டத் தெரியவில்லை. நம்மை ஏமாற்றுகிறது.''

''ஆம்,ஜூவா.சொன்ன கதைகளையேதிரும்பத் திரும்பச் சொல்கிறது.''

''சரி, இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?''

''நீ எங்களுக்கொரு கதை சொல்ல வேண்டும்!''

''கதையா.... ம்....'' யோசித்தபடிக் கண்களை மூடிக் கொண்டார். வாயேஜர் ஞாபகம் வந்தது.

''சரி குழந்தைகளே. உங்களுக்கொரு கதை சொல்கிறேன்'' ஆரம்பித்தார்.

* * * * *

வாயேஜர் மீண்டும் பூமிக்குத் திரும்புவதற்கான ஆயத்தங்களில் இருந்தது. அதன் தலைவன் ஜூனுஸ் சிவப்புத்திரவத்தை உறிஞ்சியபடி அலுத்தான்.

''பூமியின் கால அளவுப்படி நாம் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளை இங்கேயே செலவழித்திருக்கிறோம். அங்கிருந்தாலாவது என் அரசாங்கத்துக்கு ஏதாவது உதவியிருக்கலாம்!''

வின்யா அவனைத் திட்டினுள். ''முட்டாள். அங்கிருந்து அப்படியென்ன சாதித்திருப்பாய்? நீயும் உன் விந்துக்களைக் கொடுத்துவிட்டு, உன் பங்குக்கு இரண்டு குழந்தைகளைப் பெற்றிருப்பாய். நானும் வருடா வருடம் குழந்தைகளைப் பெற்றுத் தரும்படி பணிக்கப்பட்டிருப்பேன்!''

மீண்டும் ஜூனுஸ். ''அதுவே மேல் என்று தோன்றுகிறது வின்யா. இவ்வளவு தொலைவு வந்த பின்னரும் எனக்கின்னும் அரசாங்கப்

பயம் போகவில்லை. இத்தனை வருடங்களில் நீயும், நான் உன்னைத் தொடுவதற்கு மேல் அனுமதிக்கவில்லை.''

"அதெல்லாம் நம் அகராதியிலே கிடையாது யூனுஸ்.'' அருகில் நெருங்கி அவன் நெற்றியில் முத்தமிட்டாள் (உதடுகளில் முத்தமிடலாகாது; நெற்றியில் மட்டுமே அனுமதி)

யூனுஸ் பூமிக்குத் திரும்ப பூஸ்டர் ராக்கெட்டுகளை ஆயத்தமாக்கினான். விசையை இயக்கவும் அமைதி வெளியைக்கிறிப்பூமியை நோக்கி விரைந்தது வாயேஜர்.

"பூமிக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம் வாயேஜர்'' என்கிற வாக்கியம் நேஸாவின் அறைக்குள் ஒலித்தது. நேஸாவின் கமாண்டர்-இன்-சிப்பின் அட்ரீனலின் கொஞ்சம் அதிகம் சுரந்தது.

"மடையர்களே. நீங்கள் பூமிக்குத் திரும்பி உங்கள் தோல்வியை மண்டியிட்டு வெளியிடப் போகிறீர்களா? முடியாது. இன்னும் ஐம்பது வருடங்களானாலும் நீங்கள் விண்ணில்தானிருக்க வேண்டும்!''

"எங்களுக்கு இந்த விண் வாழ்வு போதும் சிப். உங்கள் கட்டளையை மீறுவதற்கு மன்னிக்கவும். இதற்குரிய தண்டனையை நேரில் சந்திக்கையில் கொடுத்துவிடுங்கள். நாங்கள் மண்ணிலேயே மடிய விரும்புகிறோம்.''

"முட்டாள்களே.''

"ஆமாம்! நாங்கள் முட்டாள்கள்தாம். ஆனால்.....'' அதற்கப்புறம் வாயேஜரின் செய்தி நேஸாவிற்குள் ஒலிக்கவில்லை.


"என்னாயிற்று நண்பர்களே? பேசுங்கள்... ஹலோ, ஹலோ'' சிப்பின் குரல் ஒலி அலைகளாய் வாயேஜரைத் தேடிக் கொண்டிருந்தது.

அதற்குப்பதில்சொல்லும்நிலையில்வாயேஜர் இருக்கவில்லை. அசுரத்தனமான ஈர்ப்பு சக்தியுடைய கிரகத்தின் ஈர்ப்பு எல்லையைத் தொட்டிருக்க வேண்டும் அவர்கள்....

அதுவரையில் சீரான வகுக்கப்பட்ட பாதையில் போய்க் கொண்டிருந்த வாயேஜர் சுழன்று திரும்பியது. இதுவரை பார்த்தறியா ஒரு கிரகம் நோக்கி. அதன் நிறத்தை நிர்ணயிக்குமுன் விழுங்குவதைப் போல் நெருங்கி வந்த கிரகம்/வாயேஜர்.... முடிவில் ஒரு பெரிய சப்தம்.....

* * * * *

கமாண்டர்-இன்-சிப் யூஸே ஜனாதிபதியுடன் உடனே தொடர்பு கொண்டார். வாயேஜர் மறைந்ததில் ருஸையா நாட்டுக்




குப் பங்கிருக்கிறதா என்று மேஜை மேல் விவாதம் வளர்ந்தது.

* * * * *

மறுபடி உணர்வு வந்ததும் அவர்கள் இருவரும் படுக்கை ஒன்றில் கிடப்பதை உணர்ந்தார்கள். காற்றில் வாசனை போல் மெல்லியதாய் இசை கலந்து குளிர் காற்று வீசியது.

புலன்கள் ஒவ்வொன்றும் தன்னிலை அடைய, வெள்ளை அங்கி அணிந்த ஏழு அடி உயர உருவமும், 'முழித்துக் கொண்டு விட்டார்கள்' என்று மற்றொன்றிடம் பேசிக் கொண்டதும், 'நேதாவிடம் நான் சொல்லி விடுகிறேன்' என்றபடி பார்வையிலிருந்து மறைந்த இன்னொன்றும் உணர முடிந்தது.

துளிக்கூட வலியே உணராமல் படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்தார்கள்.



லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—

விஐபி
கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள
புதிய விஐபி கன்கார்டு! நாகரீக
நரம்போடிய அலாதி ஸ்டைலிங்.
கண்டறியாத வர்ண வகைகள்:
பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்),
டெஸர்ட் பிரவுன் (மணற் கபில
நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச்
சாம்பல்), க்ரீம் சாக்கலேட்,
மேலும் பலப் பல. உட்புறமோ
இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர்:
அருகிலுள்ள வியாபாரியிடம்...
சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

''நீங்கள் யார்?'' வாய குழறியது.

''நாங்கள்.... நாங்கள்தாம். உங்கள் சகோதரர்கள்.''

''உங்கள் பாஷையைப் போல் நீங்கள் பேசுவதும் குழப்பமாயிருக்கிறது.''

''மன்னிக்கவும். நான் ஆங்கிலம் உதிர்த்துப் பல சூரியன்களாகிறது. நேதா வரும் வரை பொறுத்திருங்கள்.''

''யார் அவர்?''

அவரே வந்தார். இவரும் மற்றொரு ஏழரை அடி உயர உருவம்: சுத்தமான ஆங்கிலம் பேச்சில்.

''நீங்கள் பேசியதைக் கேட்டேன். நீங்கள் பூமியிலிருந்து வருகிறீர்கள் என்பதும், உங்கள் கணக்கில் ஐம்பது ஆண்டுகளாக மனித உயிரினம்தேடிப்பிறகிரகங்களுக்குப்பயணப்பட்டுத் தோற்றீர்கள் என்பதும் தெரியும்.''

''ஆம். நாங்கள் வந்தது ஓர் ஆராய்ச்சிக்காகத்தான்!''

''அதுதான் இங்கே ஒரு விந்தை. நீங்கள் மிகவும் முன்னேறி இருக்கிறீர்கள். ஆனால் மிகவும் அவசரப்படுகிறீர்கள் எதற்கும்'' நேதா ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

''எங்களுக்கு அவசரம்தான். இப்போது உங்களைப் பார்த்ததும் எங்கள் நோக்கம் வெற்றி பெற்றுவிட்டதை உணர்ந்துவிட்டோம். நாங்கள் பூமிக்குத் திரும்ப வேண்டிய ஆயத்தங்களைச் செய்து தருவீர்களா?''

''பார்த்தீர்களா மீண்டும் அவசரப்படுகிறீர்கள்....? உங்கள் பூமியைப் பற்றிய-ஒரு விஷயத்தை உமக்குக் கடைசியில் தெரியப்படுத்துகிறேன். முதலில் என்னுடன் வாருங்கள்.''

நேதா வாசலை நோக்கி வேகமாக நடந்தார். சிலவினாடிகளில் அவர் கைகளை அசைத்துக் கால்களை உதைத்துப் பறந்து போனார்.


அவரை வியப்புடன் பார்த்துக்கொண்டே வெளியில் வந்தபோது அந்த கிரகத்தைப் பற்றி மேலும் அனுமானிக்க முடிந்தது. எங்கும் வாகனங்களையே பார்க்கவியலவில்லை. நேதாவைப் போல் எல்லோரும் பறந்து போவதைப் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது. ஒரு வித்யாசமான சூழல் இருப்பதை உணர முடிந்தது. விபத்திற்கு முன்னால் நிர்ணயிக்க வியலாது போன நிறம் மஞ்சள் என்று தெரிந்தது. எங்கும் சப்தமேயில்லாத வெளியாக இருந்தது.

யூனுஸையும் வின்யாவையும் இரண்டு பேர் தூக்கிக் கொண்டு போனார்கள்.

''நேதா, இது எப்படி சாத்தியமாயிற்று உங்களால்? எங்கள் நாடு எவ்வளவோ முன்னேறியும் சாதனத்துடன்தான் எல்லாரும் பறந்து போகிறார்கள்.''

''ஆமாம் யூனுஸ். நான்கு கால்களால் தவழ்ந்து பின்னர் அவற்றில் இரண்டை கைகளாக்கிக் கொள்ளவில்லையா, உங்கள் மனித இனம். கால்களால் நடந்து, ஓடி. இதெல்லாம் உங்கள் இனப் பரிணாம வளர்ச்சியின் ஏணிப் படிகள். நாங்கள் எப்போதும் உங்களை விட முன்னேறிய' 'ஓரும்-உங்கள் மனிதஇனத்

கோயிலுக்குச் சென்ற போது...



போட்டி: 24

கோயிலுக்குச் சென்ற போது நீங்கள் மன நிறைவை — அமைதியைப் பெற்றிருக்கலாம்; அல்லது, 'அடடா! இப்படி இருக்கிறதே. இவ்வாறு நடந்து கொள்கிறார்களே' என்று மனச்சங்கடமும் அடைந்திருக்கலாம். மனச்சாந்தி, மெய்சிலிர்ப்பு அல்லது மனக்கஷ்டம் அளித்த அனுபவம் ஒன்றைக் கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தையும் முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின்மேல் 'கோயிலுக்குச் சென்ற போது...' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி: 28.10.85

இன்னும் 29 வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் உங்களைத் தேடி வரக் காத்திருக்கின்றன. அவற்றில் ஒன்றையாவது உங்களால் பெற முடியாதா என்ன! வாராவாரம் போட்டியில் கலந்து கொள்ளுங்கள். நிச்சயம் முடியும்.

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

என் பெயர்: ....

விலாசம்: ....

....

துக்கும் இது சாத்தியம். ஆனால் அதற்கு இன்னும் மில்லியன் வருடங்கள் ஆகும்.''

நேதா அவர்களை ஆய்வுக் கூடமொன்றில் இட்டுச் சென்றார். நிறைய மனித உடல்கள் மேஜையின்மேல் கிடத்தப்பட்டிருந்தன. பார்த்தால் அவற்றுக்கு உயிரில்லாதது போல் தோன்றியது. ஆனால் எதுவும் நோய்வாய்ப் பட்டு இறந்தது மாதிரி தெரியவில்லை.

''என்ன யூனுஸ்.... ஒரு மாதிரியாகப் பார்க்கிறாய். இவை பிரேதங்கள் என்று நினைக்கிறாயா? இல்லை. இவை இங்கு உண்டாக்கப்பட்டவை. போனமுறை உங்கள் இனம் உருவாக்கப்பட்டபோது கவனிக்காமல் விடப்பட்ட சில தவறுகள் திருத்தப் பட்டிருக்கின்றன இப்போது.''

''என்னது. எங்கள் மனித இனம் உங்களாலா உருவானது? முட்டாள்தனமாக இருக்கிறதே'' யூனுஸ் அதிர்ந்து வின்யாவின் தோள்களைப் பற்றிக் கொண்டான்.

''இல்லை நேதா....'' தோள்களைக் குலுக்கினான் யூனுஸ். ''எனக்குத் தெரிந்து ஆதி காலத்தில் ஆதாம் ஏவாள் என்று....''

''அதுவா?'' பெரிதாய்ச் சிரித்தார் நேதா. ''கேள்வியை உங்களிடமே விடுகிறேன். பூமியின் தொடக்கத்தில் ஆதாம் ஏவாள் என்று இருவர்தான் இருந்தார்கள் என்றால் எப்படி உங்கள் பூமி இப்படி கோடிக் கணக்கில் மக்களாய் நிரம்பியிருக்கிறது? அந்த இருவரின் சேர்க்கைதான் இப்படி என்பதை நீங்களும் நம்புகிறீர்களா? அதற்குக் குறைந்தது நூறு இருநூறு பேராவது இருக்க வேண்டாமா?

சிறிது மௌனம்.

''உண்மையை ஒப்புக் கொள் யூனுஸ். இதற்கு மேலும் குறுக்கிடாமல் நான் சொல்வதைக் கேள்.''

* * * * *

''......அதனால் நாங்கள்தாம் உங்களை ஆராய்ச்சிக்காகப் பூமியில் இறக்கிவிட்டோம். இந்த லட்சம் வருடங்களில் நீங்கள் வெகுவாக முன்னேறிவிட்டீர்கள். உங்களது முன்னேற்றம் குறித்து அனுமானிக்க நாங்கள் அடிக்கடி பறக்கும் தட்டுக்களில் வந்து பார்த்துவிட்டுப் போனோம். நீங்கள் என்னடாவென்றால் எங்களை ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டு இங்கே வந்து விழுந்திருக்கிறீர்கள். நேதா முகம் மாறாமல் புன்னகை புரிந்தார்.

''நேதா உங்கள் விளக்கங்களுக்கு எங்கள் நன்றி. நாங்கள் பூமிக்குச் செல்ல வேண்டும். இங்கே பார்த்தவற்றையெல்லாம் அவர்களிடம் சொல்லிப் பிரமிக்க வைக்க வேண்டும். அனுமதி தாருங்கள்'' யூனுஸ்தான் கேட்டான்.

''மன்னிக்க வேண்டும் யூனுஸ். உங்கள் பூமியைப் பற்றி ஒரு விஷயம் சொல்கிறேன் என்றேனல்லவா. நீங்கள் பயணப்பட்டு வந்த ராக்கெட் காணாமல் போனதில் ரஷ்யா நாட்டுக்குப் பங்கிருக்கிறது என்று நினைத்த உங்கள் யூஸே நாடு அவர்களோடு சண்டை போட்டதில் பூமி தன் உயிரினங்கள் அனைத்தையும் இழந்துவிட்டது.....''

''என்ன சொல்கிறீர்கள்?''

''ஆமாம். யூனுஸ். பூமி அழிந்துவிட்டது.''

யூனுஸ் பிரமை பிடித்துப் போனான். காலடி படத் தவித்த யூஸே நாடு. அன்பான யூஸே தலைவர்.... எல்லாவற்றிற்கும் மேலாக முழு மனித இனம்....

''இனி எங்கள் கதி?''

''கவலைப்பட வேண்டாம். நீங்கள் பூமிக்குச் சென்று மறுபடி வாழ்வைத் தொடங்குங்கள். ஆனால் இப்படி அல்ல. உங்கள் மூதாதையர் போல.... ஆதிவாசி காலத்திலிருந்து ஆரம்பியுங்கள். உங்களுக்குத் துணையாக நான் ஐந்நூறு பேர்களை அனுப்பி வைக்கிறேன்.''

''முடியாது நேதா.... நேதா.... மறுபடி அறிவு மரத்திலிருந்து கனிகளைக் கொய்து தண்டனை பெறமுடியாது. எங்களைக்கொன்று விடுங்கள்.''

நேதா அவர்களது புலம்பலை லட்சியம் பண்ணவேயில்லை. யூனுஸும், வின்யாவும் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு மூளைச் சலவை செய்யப்பட்டார்கள்; மொழி மறந்து போனார்கள்; நிர்வாணமாக்கப்பட்டார்கள்.

ஆய்வுக் கூடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மனிதர்களை ஏற்றிச் செல்ல ஒரு விண்வெளிக் கப்பல் தயாராய் இருந்தது.

அவர்கள் புறப்பட்டபோது நேதா முணுமுணுத்தார். ''இன்னொரு ஆதாமும் ஏவாளுமா?''

* * * * *

''குழந்தைகளே..... கதை பிடித்திருந்ததா?'' தலைகளை மெல்ல வருடினார். அவர்களின் மெல்லிய சுவாசம் கையில் படிந்தது. தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

''கதையைக் கேட்க வந்துவிட்டுத் தூங்கினால் எப்படி?'' என்றபடி முணுமுணுத்துக் கொண்டே தான் சொன்ன கதையை யோசித்துப் பார்த்தார். தன் கற்பனைத் திறன் மீது அசாத்திய நம்பிக்கை வளர்ந்தது.

'ஹோலோ விஷன்'. கட்டாயமாய் ஒளிபரப்பானது.... இப்போது அவர் எதிரில் செய்தி வாசிக்கும் ஹோலோகிராம் மனிதன் அமர்ந்திருந்தான்.

''கட்டாய ஒளிபரப்பு. எல்லாரும் இந்தச் செய்தியைக் கேட்டாகவேண்டும். திரும்பி வந்து கொண்டிருந்த வாயேஜரின் தொடர்பு திடீரென அறுந்துவிட்டது. இதற்கு ரஷ்யாவின் சதிவேலை காரணமா என்று சந்தேகிக்கப்படுகிறது......''

யூவா செய்தி வாசிப்பவனை ரிமோட்டின் மூலம் பலவந்தமாக அப்புறப்படுத்தினார். அவருக்கு முதல் தடவையாக வாழ்க்கையில் பயம் வந்தது.



யாகம்

ஒரு குறிப்பிட்ட நாளில் எட்டு கிரகங்களும் ஒரே நேர்க்கோட்டில் சந்திக்கும் போது, நடு இரவு பன்னிரெண்டு மணிக்குப் பிறக்கும் அந்தக் குழந்தை — சாத்தானின் குழந்தை. அது உலகத்தையே தன் கைக்குள் போட்டுக் கொண்டு என்ன பாடு படுத்தப் போகிறது பார் என்ற சவாலுடன் படத்தை ஆரம்பிக்கிறார்கள்.

புயல், மழை, இரவு என்று மாற்றி மாற்றித் திகிலை மனத்தில் விதைக்கிறார்கள். பொம்மை ஹெலிகாப்டர் பறந்து வந்து வாழைத் தோப்பை நிர்மூலம் பண்ணுவதும், மரப் பொம்மை நடந்து வந்து மின் கம்பியை அறுத்து ஆசிரியர் செந்திலுக்குக் கதி மோட்சம் கொடுப்பதும், ஜெயசித்ராவின் எதிரில், அந்தச் சாத்தானின் பையன் முகம் பயங்கரமாக உருமாற்றிக் காண்பிப்பதுமாகப் படத்தைச் சுத்தியலால் தட்டித் தட்டியே நகர்த்திச் செல்கிறார்கள்.

இடைவேளை வரை பரபரப்புத்தான். ஜனங்கள் இடைவேளையில் பரபரப்பில் செய்ய வேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்யாமல் அவசர அவசரமாய் ஆடிட்டோரியத்தில் மறுபடி நுழைந்து இருக்கை தேடி அமர்வதைப் பார்க்கும் போது, அட! தமிழில் இப்படி ஒரு திகில் படமா என்று வியக்காமல் இருக்க முடியவில்லை.

அப்புறம்தான் கதை திகிலில் இருந்து தெய்வத்திற்குட்ராக் மாறிவிடுகிறது. இடைவேளை வரை இருந்த பரபரப்பு அப்புறம் அம்பேல். நளினி வழக்கம் போல் மஞ்சள் புடவை அணிந்து கோயில் கோயிலாக வலம் வருகிறார். சோமயாஜுலு யாகம் பண்ணுகிறார். ரஜினிகாந்த் (ஒரே ஒரு ஸீனில் மட்டும்) பிரார்த்தனை பண்ணுகிறார்.


கடைசியில் தெய்வ பலத்திற்கு முன் சாத்தானின் பலம் யானைக்காலுக்குக் கீழ் அகப்பட்ட எறும்பாக நசுங்கிப் போகிறது. சாத்தானுக்கும், தெய்வ பலத்திற்கும் இடையில் மோதலை வைத்து முன் பாதியில் காண்பித்த ஹெலிகாப்டர், பொம்மை சமாசாரம் போல் ஏதாவது செய்யக்கூடாதா? க்ளைமாக்ஸ்தான் படு போக். நளினியின் மேல் மகிஷாசுரமர்த்தனி வந்தேறிக் கடைக் கண் பார்வையிலேயே சாத்தான் அவுட்.

ஆக்ஷன் கிங் அர்ஜுன் சண்டைக் காட்சிகளில் மட்டும்தான் ஆக்ஷன் கிங். மற்றபடி சதுரங்க ராஜாதான். நிழல்கள் ரவி தன் பங்கை ஒப்பேற்றியிருக்கிறார்.

அந்தச் சாத்தான் பையன் அழியாத கோலங்கள் பையன்தானே? கண்ணில் நிறைய வித்தை இருக்கிறது. காமம், க்ரோதம், கோபம், ஆசை எல்லாம் தெரிகிறது.

செந்திலின் கஞ்சப் பாட்டன் மின்சாரக் கம்பியில் வரும் மண்ணெண்ணெயைத் திருட முயலும் ஸீன் சிரிப்புக்காகச் சேர்க்கப்பட்டதுதான் என்றாலும் அனுதாபத்தையும் வாரிக் கொள்கிறது. வரவரச் செந்தில் நிறையப் பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டார். அது சரி, ஆசிரியர் செந்திலின் மரணத்திற்கு முன்னால் அந்தச் சாத்தானின் பையன் நாடிச் சென்று அடையும் பெண் யார்? அப்புறம் பதினெட்டு வயதில் ஒரு பெண்ணை அடைந்து அவள் வயிற்றில் கருவை உண்டாக்கிவிட்டால் என்ற ஒரு புதுக்கதை வேறு சொல்லப்படுகிறதே, அதற்கு என்ன அர்த்தம்?

எப்படியிருந்தாலும் முன் பாதியில் ஜமாய்த்து விட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.



நீதியின் மறுபக்கம்

ஒரு ஏமாந்த கிராம இளைஞன். எல்லாம் வல்ல கிராமப் பெரிய மனிதர். இளைஞனைக் காதலிக்கும் அவர் மகள். அவளை மணக்கத் திட்டம் வைத்திருக்கும் மைனர் முறைப் பையன். அரசியல் வல்ல அமைச்சர் ஒருவர்.


ஏழை இளைஞனின் அப்பாவித் தம்பியும், வயதான அம்மாவும் வில்லனால்/வில்லன்களால் தீர்த்துக் கட்டப்பட்டு, கோர்ட்டில் சட்டம் கைவிட்டபின் இளைஞனே தனியே பழி வாங்கக் கிளம்பி....

அடடே! வழக்கமான சந்திரசேகரத்தனம் தான் என்று நினைத்தால் கடைசி கடைசியாய் ஒரு ட்விஸ்ட் வைத்து வித்தியாச முத்திரை வைத்துவிட்டார். என்னதான் ஐம்பதாயிரம்ஓட்டிற்காக அமைச்சர் பொய்சொன்னாலும், வி. காந்த்தின் தம்பியைக் கொலை செய்த நேரம், அவர் கல்யாணப் பந்தலில் காத்திருக்கிறார்களே, நூற்றுக் கணக்கான ஜனங்கள், அவர்களில் ஒருத்தர் கூடவா வி. காந்த் கொலைகாரனாயிருக்க முடியாது என்று அழுத்தமாய்ச் சாட்சி சொல்ல முடியாமல் போய்விட்டது? ரொம்ப வீக்கான பேஸ்.

விஜு சக்கரவர்த்தி ஏற்கனவே ஒரு படத்தில் ஊழல் போலீஸ் அதிகாரியாக வந்துவிட்டதால் டிரெஸ்ஸை மாட்டியதுமே, அவரைப் பற்றிச் சந்தேகம் வந்துவிடுகிறது. செந்தாமரைதான் அரசியல்வியாதி—ஸாரி அரசியல்வாதி. வழக்கம்போல் நறுக்கென்று செய்கிறார்.

விஜய்காந்த்தைச் சுற்றிச் சுற்றி வந்து வம்புக்கிழுக்கும் ஆரம்பக் காட்சிகளில் ராதிகா துறுதுறு. பாதிப் படத்திற்கு மேல் வெறும் துரு.

விஜய்காந்தின் தம்பி தங்கமாக வரும் மாஸ்டர் சுரேஷ், காதலிக்க அண்ணனுக்குச் சொல்லித் தருவதும், ராதிகாவை வம்புக்கிழுப்பதும், வில்லன்களிடம் சிக்கிக் கொண்டு துன்புறும்போது தவிப்பதும் — சுட்டிப் பயல்தான்.



நான்கே காட்சிகளில் வந்தாலும் ஜெய்சங்கருக்கும் கௌரவமான ரோல்.

கடைசிகோர்ட்சீனில்நீதிபதியின்குழந்தைகளைப் பணயம் வைத்திருப்பதாகப் புகைப்படம் கொடுத்துப் பகிரங்கமாய் அரசியல்வாதிகள் மிரட்டுமளவிற்கா நம் நீதி மன்றங்கள் வந்துவிட்டன? ஸென்ஸாரின் மறு பக்கம் என்ன சொல்லுமோ?

வழக்கமான ரயில். வழக்கமான பாதை. ஆனால் போய்ச் சேருமிடம் புதிய ஊர்.

—ஜெயமன் மதன்

முணுமுணுக்கும் மாமியாரை



ஐஸ் ஒன்றே வழி!

என்னங்கம்மா (அம்மா என்பது ஐஸ்!) ஏதோ பாட்டு முணுமுணுக்கிறீங்க போலிருக்கே! கொஞ்சம் சப்தமாப் பாடுங்க; நானும் கேட்கறேன்! இதுதான் நான் மாமியாரைச் சமாளிக்கும் விதம்.

— ஆமிஷாரஜித், தஞ்சாவூர்—5.

பாவம், அத்தை!

நான் காலையில் சென்று மாலையில் வீடு திரும்பும் பள்ளி ஆசிரியை. ஒரு குழந்தைக்குத் தாய். மாலையில் வீடு திரும்பியவுடன் கணவரிடம், "சே! ஸ்கூல்ல கொஞ்சம் கத்திட்டு வர்றதுக்கே உடம்பு அடிச்சுப் போட்டாப் போல ஆயிடுது. பாவம், அத்தை எப்படித்தான் இந்த இரட்டை வாலையும் சமாளிச்சுக்கிட்டு விட்டு வேலைகளையும் பாக்கறுங்களோ!" என்று மாமியார் காதுபடக் கூறிவிட்டு, அவர் செய்யும் வேலையைப் பிடுங்கிச் செய்வேன். முணுமுணுப்பு? கப்சிப்!

— திருமதி இந்து, பாண்டிச்சேரி—1.

காதில் வாங்க மாட்டேன்!

வரதட்சணை இன்றி வந்ததால் எப்போதும் மாமியார் முணுமுணுப்புத்தான். இதைப் புரிந்து கொண்ட என் கணவர் எனக்குச் சொல்லிக் கொடுத்த ஒரே வழி அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் இருப்பதுதான். நானும் அதைத்தான் கடைப்பிடித்து வருகிறேன். இன்றுவரை பிரச்னை ஏதும் ஏற்படவில்லை. இனியும் அப்படியே இருக்குமென்றும் நம்புகிறேன்.

— ஆர். சரசுவதி ராமலிங்கம்,
காஞ்சிபுரம்—1.

போஸ்ட்மேன் வரவேண்டும்!

தன் இளைய மகள் பத்மாவிடமிருந்து கடிதம் வந்தால் என் மாமியாரின் கோபமெல்லாம் பறந்துவிடும். அவருக்குக் கண் பார்வை மட்டு. அவர் கோபத்தில் குதிக்கிற நாளில் நான் போஸ்ட்மேன் வரும்வரை காத்திருந்து எந்தக் கடிதம் வந்தாலும் அது பத்மாவிடமிருந்து வந்த கடிதம் என்று சொல்லுவேன். என்னையே அவர் படித்துக் காட்டச் சொல்வதால் என் இஷ்டத்துக்கு அவரைத் தூக்கி வைத்து வாசித்துக் கோபத்தைத் தணித்து விடுவேன்.

— ஆர்.வி. மீனலோசனி, ஹொசூர்.

ரச் சமாளிப்பது எப்படி?



வெற்றிலை, பாக்கு வழி!

என் மாமியாருக்கு ஒரு நாளைக்குப் பத்து முறையாவது வெற்றிலை பாக்குப் போட்டாக வேண்டும். அப்படியொரு பழக்கம். வெற்றிலை பாக்கைக் கை உரலில் போட்டு இடித்தும் தர வேண்டும். அதனால் நிறைய வெற்றிலை பாக்கு வாங்கி நானே இடித்து அதை உருண்டைகளாக்கிப் பாலிதீன் பையில் போட்டு வைத்துக் கொள்வேன். மாமியார் முணுமுணுக்க ஆரம்பிக்கும்போது ஒரு வெற்றிலை பாக்கு உருண்டையைக் கொடுத்துவிடுவேன். அவரும் அதை அசை போட ஆரம்பித்து விடுவார். பிறகு எங்கே முணுமுணுப்பது?

— எஸ். அஜிமுனிஷா, சென்னை — 11.

நாத்தனார் கொடுத்த அட்வைஸ்

ஒரு நாள் என் மாமியாருக்குக் காப்பி கொடுத்தபோது நன்றாக இல்லையென்று அதைக் குடிக்க மறுத்துவிட்டார்கள். அதே காப்பியை ஊரிலிருந்து வந்திருந்த என் நாத்தனாரிடம் தந்து அவரிடம் கொடுக்கச் சொன்னேன். 'பிரமாதம்!' என்று சொல்லிக் குடித்தார். உடனே என் நாத்தனார், ''உன் மருமகள் முன்பு கொடுத்த அதே காப்பியைத்தான் இப்போது உனக்குக் கொடுத்தேன். இப்போது மட்டும் எப்படிச் சுவையாக இருக்கிறதாம்? மருமகளையும் உன் மகளைப் போலவே நினைத்தால் குறையே தெரியாது!'' என்றார். அன்றிலிருந்து என் மாமியார் எதைப் பற்றியும் முணுமுணுப்பதில்லை!

— கே. ரேணுகா, மழையூர்.

'ஆமாம் சாமி!' வழி!

என் மாமியாருக்கு அவரைப் புகழ்வதைவிட அவர் பெண்களைப் புகழ்ந்தால் மிகவும் பிடிக்கும். அதனால் என் மூன்று நாத்தனார்களையும் புகழ்ந்து பேசுவேன். மாமியாருடைய பிறந்த வீட்டுப் பெருமைகளையும் பொறுமையாகக் கேட்டுக் கொள்வேன். அவர் மருமகளாக இருந்த காலத்தில் தம் மாமியாரிடம் போட்ட சண்டைகளை அவர் வாயாலேயே கேட்டு என் மாமியார் செய்ததுதான் சரி என்பதுபோல் பேசுவேன். இப்படி எல்லா விதங்களிலும் ஐஸ் வைத்துப் பேசினால் உருகாத மாமியாரும் உண்டோ?

— ஏ. ஜெகதாம்பாள், சிறுமுகை.

பேரனைக் கொடுங்கள்!

மாமியாரின் முணுமுணுப்பைத் தாங்க முடியாவிட்டாலும் அது பற்றிக் கணவரிடம் கூறக் கூடாது. அது கணவன்–மனைவி இடையே உள்ள மகிழ்ச்சியைக் குறைக்கும். அதனால் சீக்கிரமாக ஒரு குழந்தையைப் பெற்றுக் கொள்ளுங்கள். பிறகு? பாட்டிக்குப் பேரன் வேலையே சரியாக இருக்கும்; உங்களைக் கவனிக்க நேரமிருக்காது!

— செல்வநாயகி அன்புமலர், ஈரோடு–1.

பதிலுக்குப் பதில்

மாமியார் முணுமுணுக்க ஆரம்பித்தால் நீங்களும் பதிலுக்கு முணுமுணுக்க ஆரம்பித்துவிடுங்கள். என்னவென்று அவர் கேட்டால், "நீங்கள் சொல்லும் அதே தோத்திரம் தான் அத்தை" என்றுசொல்லுங்கள். இதென்னடா போட்டி என்று மாமியார் தானுகவே முணுமுணுப்பதைவிட்டுவிடுவார். இதுதான் என் அனுபவபூர்வமான சாதனை!

— வி. சுப்புலெக்ஷ்மி, சென்னை–88.

முணுமுணுப்பே முன்னேற்றியது!

சதா தம் பெண்களைப் பற்றியே உயர்வாகப் பேசி, என்னை மட்டம் தட்டிப் பேசும் என் மாமியாரின் பேச்சு என் காதில் விழாமலிருக்க குழந்தைகளுக்கு டியூஷன் எடுத்துக் கொண்டிருக்கிறேன். மற்ற நேரங்களில் டைப்பிங் செய்ய வெளியே சென்று விடுகிறேன். என் மாமியாரின் முணுமுணுப்பு மட்டும் இல்லையென்றால் இவற்றைச் செய்வேனு என்பது சந்தேகம்தான்! ஆக அவர் முணுமுணுப்பும் எனக்கு உபயோகமாகத் தான் இருக்கிறது!

— சீனிவாசவல்லி, சென்னை–5.

எனக்கு இருக்கும் அதிர்ஷ்டம்!

என் மாமியாரின் மாமியாரும் இருக்கிறார். என் மாமியார் என்னைப் பற்றி ஏதாவது முணுமுணுக்க ஆரம்பிக்கும்போது, உடனே நான் அவரிடம் போய்ப் புகார் சொல்லி விடுவேன். அவ்வளவுதான்! உடனே அவர் என் மாமியாரை மொலு மொலுவென்று பிடித்துக்கொண்டு, "சின்னஞ்சிறிசு அதுக்கு என்ன தெரியும்? நீ எப்படி இருந்தாய் என்று தெரியுமா?" என்று அடக்கி விடுவார். அப்புறம் என்பாடு யோகம்தான்! ஆனல் அனைவருக்கும் எனக்கிருப்பதுபோல் மாமியாரின் மாமியார் இருக்க வேண்டுமே!

— ஜானகி வாசுதேவன், வேலூர்–1.

அன்பு ஒன்றே வழி!

மாமியார்–மருமகள் லடாய் வருவதற்கான காரணம், மாமியார் தன் ஆதிக்கத்தைச் செலுத்தக் கிடைக்கும் ஒரே இடம் மருமகள் என்பதால்தான். பண்பாலும், பாசத்தாலும், வற்ருத அன்பாலும், அந்த ஆதிக்கத்தைச் சுலபமாக முறியடித்துவிடலாம். மாமியாரின் பிறந்த நாள் மண நாள் முதலிய முக்கிய நாட்களை உற்சாகத்துடன் கொண்டாடி அவருக்குப் பரிசுகளையும் கொடுத்து ஆசி பெற்ருல் அவர் அன்பைப் பெற்றுவிடலாம். ஏனெனில் மாமியாரும் ஒரு வீட்டு மருமகள்தானே!

— பாரதி, கொச்சின்–16.

காப்பாற்றும் கந்தர் சஷ்டி

எதற்கெடுத்தாலும் குறை கண்டு பிடித்து முணுமுணுத்துக் கொண்டே இருக்கும் என் மாமியாரைச் சமாளிக்க, அவர் முணுமுணுக்கும் போதெல்லாம் நான் கந்தர் சஷ்டி கவசத்தை மனத்துக்குள்ளேயே சொல்ல ஆரம்பித்துவிடுவேன் மனம் முழுவதும் அதிலேயே லயித்து விடுவதால் அவருடைய முணுமுணுப்பைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை!

— சந்திராஜேஸ்வரி, கோயமுத்தூர்–38.


பொறுப்பைக்கொடுத்துப்பாருங்கள்!

திருமணமான புதிதில் எனது மாமியார், 'மாதம் இவ்வளவு குடும்பச் செலவா? இதை வாங்கித்தான் தீரணுமா?' என்று முணுமுணுத்துக் கொண்டே இருப்பார். அதனல் நான் அடுத்து வந்த முதல் தேதியன்று சம்பளம் முழுவதையும் அவரிடமே கொடுத்து, 'எங்கள் வீட்டுச் செலவுகளை எங்கள் அம்மா தான் கவனித்துக் கொள்வார். அதுபோல் இங்கும் என் அம்மா மாதிரி நீங்களே கவனிக்க வேண்டும்!' என்றேன். சில மாதங்கள் சமாளித்துப் பார்த்தும் முடியாமல் கடைசியில் எல்லாப் பொறுப்புக்களையும் என்னிடமே கொடுத்துவிட்டார். முணுமுணுப்பையும் விட்டுவிட்டார்.

— திருமதி டி. பழனியம்மாள்.
வேலூர் (சேலம்).

புளோபிளாஸ்ட் நிறுவனம் வழங்கும் வி. ஐ. பி. ஸூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

கே. ரேணுகா,
மழையூர்,
ஊர்க்குடி போஸ்ட்,
கொரடாச்சேரி (வழி),
தஞ்சை மாவட்டம்,
613 703.



உணர்வுகள் உறங்குவதில்லை

ர. சு. நல்லபெருமாள்



11. சோறும் சுதந்திரமும்!

ஒவ்வொரு ஆண்டும் பல நிறுவனங்கள் பல ஆயிரம் டைரிகளை விநியோகம் செய்கின்றன. எல்லாம் வெறும் குறிப்பேடுகளாகப் பயன்படுத்தப்படும். எப்போதோ வெகு அபூர்வமாகப் பத்து லட்சத்தில் ஒன்று இலக்கியமாக அமைவதும் உண்டு. நாட்குறிப்பு ஓர் இலக்கியமாக மாறிய விந்தையைச் சந்திரசூடனின் டைரி நோட்டுப் புத்தகங்களில் காணலாம். ஆனால் அவருடைய குறிப்புக்களில் வருஷமோ தேதியோ இருக்காது!

நடைபெற்ற சம்பவங்கள், அவற்றினால் ஏற்பட்ட பாதிப்புகள், அனுபவங்கள், உணர்வுகள், எல்லாவற்றையும் ஓர் ஈடுபாட்டுடன் ஒரு குயர் நோட்டுக்களில் எழுதி வைத்திருந்தார். ஒவ்வொரு நோட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் அது எத்தனாவது நோட்டுப் புத்தகம் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக எண் குறிப்பிட்டிருந்தார். அதிலிருந்து எந்த நோட்டுப் புத்தகம் முந்தியது, எது பிந்தியது என்பதை மட்டும் தெரிந்து கொள்ளலாம்.

சந்திரசூடனின் அறையில் டைரி நோட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் தூசி தட்டித் துடைத்து அடுக்கி வைத்தான் பரணி. அன்று அவன் கல்லூரிக்குப் போகவில்லை. அங்கு ஸ்டிரைக். மாணவர் சங்க நிர்வாகக் குழுவில் பரணியும் அங்கம் வகித்தான். ஒரு மாணவனைக் கல்லூரி நிர்வாகம் கல்லூரியிலிருந்து விலக்கியதை எதிர்த்து மாணவர் சங்கம்



போராட்டத்தில் இறங்கியிருந்தது. பரீட்சை எழுதும்போது அந்த மாணவன் காப்பியடித்ததைக் கண்டுபிடித்துக் கண்டித்தாராம் ஒரு பேராசிரியர். அந்த மாணவன், பேராசிரியரைத் திட்டி அடிக்க முயன்றானும். அவனுக்காக மாணவர் சங்கம் ஸ்டிரைக் செய்தது.

பொழுதுபோகாமல் தவித்த பரணி மாடிக்குச் சென்று சந்திரசூடனின் டைரிகளைத் தூசி தட்டிச் சுத்தப்படுத்தினான். எந்த நோட்டை முதலில் படிப்பது என்றே புரியவில்லை. எல்லாவற்றையுமே படித்துவிட வேண்டும் என்ற ஆவல். எண் வரிசைப்படி படிப்பதா? அல்லது எதையாவது எடுத்துப் படிப்பதா? எப்படிப் படித்தாலும் ரசனை குறையப் போவதில்லை.

ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து உள்ளே புரட்டிப் பார்த்தான். அது எட்டாவது நோட்டுப் புத்தகம். சோபாவில் சாய்ந்தபடி அதைப் படிக்கத் தொடங்கினான் —

சந்திரசூடன் எழுதியிருந்தார்:

சப்பாணி என்னைத் தொழிற்சங்கத்தில் சேரும்படி கூறியபோது நான் மறுத்தேன். பொதுவுடைமை சித்தாந்தங்களில் சிக்கி, கட்சித் தோழர்களோடு திரிந்த காலத்தில் தொழிற் சங்கங்களைப் பற்றித் தெரிந்திருந்தேன். அது வெறும் தத்துவ ரீதியில்தான். இப்போது நான் ஒரு பெரிய தொழிற்சாலையில் குமாஸ்தாவாக வேலைக்கு வந்த பிறகு நேரடியாகவே தொழிற்சங்கத்தைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டியது.

இந்தத் தொழிற்சாலையின் தொழிற்சங்கம் மார்க்ஸியவாதிகளின் ஆதிக்கத்திலிருந்தது. அந்தப் போதையிலிருந்து தெளிவடைந்து வந்திருக்கிறேன். நான் எப்படி இதில் சேர முடியும்?

சப்பாணிக்கு நம்பிக்கை இருந்தது. என்னை மெள்ள மெள்ளத் தன் பாதையில் திருப்பி விடலாம் என்று நினைத்தான். தினமும் மத்தியானம் சாப்பிடக்கூடும் இடத்தில் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் என்னோடு நெருங்கிப் பேசத் தொடங்கினார்கள். இவர்களுடைய பேச்சில் சர்வதேச அரசியல்வரை அடிபடுகிறது. நான் எதிலும் தலையிடாமல் கவனித்து வருகிறேன்.

இவர்களுடைய பேச்சும், சிந்தனையும் என்னுள் எதிர்ப்பைத்தான் தோற்றுவிக்கின்றன. பொதுவுடைமை சித்தாந்தந்தான் மனித இனத்தின் மேம்பாட்டிற்கு முடிவான ஒன்று என்றார்கள். இதை நம்ப வேண்டுமென்று மற்றவர்களையும் வற்புறுத்தினார்கள்.

என் பேச்சுக்கு இந்தத் தொழிற்சங்கத்தாரால் பதில்கூற இயலவில்லை. பொதுவுடைமைவாதிகளின் ஆட்சிக்குள் சிக்கியிருக்கும்மக்கள் எப்படி சுதந்திரத்தை இழந்து வயிற்றைக் கழுவுகிறார்கள் என்பதை ரஷ்ய நாட்டிலிருந்தே உதாரணங்களை நான் எடுத்துக் கூறியபோது, இவர்கள் வாயடைத்துப் போனார்கள். இவர்களுடைய எஜமானர்களிடமே நான் குறைகளைக் கண்டு சொன்னபோது இவர்களுக்குக் கோபம் வந்தது.

சப்பாணி இன்று என்னை எச்சரித்தான். என்னை அடிக்க நான்குபேர் தொழிற்சாலைக்கு



வெளியே காத்திருக்கிறார்கள் என்று விவரம் சொன்னான். இன்று மத்தியானமே நான் தப்பித்துச் செல்ல அவனே உதவினான். அவனுடைய வீட்டருகேதான் நானிருக்கிறேன். அவனுக்கு மனைவியும் ஐந்து குழந்தைகளும் இருக்கிறார்கள். அடிக்கடி என்னிடந்தான் சிறு தொகைகள் கடன் வாங்குவான். கடனைத் திருப்பித் தரமாட்டான். நான் திருப்பிக் கேட்பதுமில்லை. கேட்டாலும், அவனால் தர முடியாது. ஆனால் திருப்பித் தந்துவிடுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

நான் தொழிற்சாலையிலிருந்து தப்பி வந்த பிறகு அங்கே வேலைக்குப் போவதாயில்லை. அந்த அராஜகச் சூழ்நிலையில் நான் வேலை செய்ய முடியாது.

* * * * *

தொழிற்சாலையில் நாளை தொடங்கப் போகும் வேலை நிறுத்தம் பற்றிச் சப்பாணி கூறினான். வேலை நிறுத்தத்தின் காரணந்தான் விசித்திரம்.

தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி திருடினான். மேலதிகாரி அதைக் கண்டுபிடித்துக் கண்டித்தார். அந்த அதிகாரியை அவன் திட்டி அடித்துவிட்டான். அதனால் அவன் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டதற்காகத்தான், இந்த வேலை நிறுத்தம்.

* * * * *

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளிகள் தொழிற்சங்கத் தலைவரின் தலைமையில் இன்று மாலை ஊர்வலம் நடத்தினார்கள். தன்னுடைய செல்வாக்கு எவ்வளவு என்பதைக் காட்டி அச்சுறுத்த, தலைவர் நடத்திய ஊர்வலம் அது. பிரும்மாண்டமான ஊர்வலம். தொழிற்சாலையில் வேலை பார்க்கும் மூவாயிரம் பேர்களுடன் வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டார்கள். நான் நின்று கொண்டிருந்த இடத்தை ஊர்வலம் கடக்க இரண்டு மணி நேரம் பிடித்தது.

அந்தக் கூட்டமும் அது போட்ட கோஷமும் என்னுள் எரிச்சலை மூட்டின. மனித சக்தியை எப்படியெல்லாம் வீணாக்குகிறார்கள். இவ்வளவும் ஆக்க ரீதியில் திரும்புமானால் இந்த நாடு எவ்வளவு செழித்துவிடும். ஓ! தொழிற்சங்கத்தலைவர்கள் இந்த அப்பாவிகளை எப்படியெல்லாம் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

* * * * *

இன்று இரவு கட்சிப் பத்திரிகையுடன் சப்பாணி வந்தான். பத்திரிகையைப் பார்த்தேன். ஊர்வலம் பற்றியும், வேலை நிறுத்தம் பற்றியும் மிகைப்படுத்தி செய்தி வெளியாகியிருந்தது.

"வேலை நிறுத்தத்தில் சேர்ந்திருக்கிறாயே சாப்பாட்டிற்கு என்ன வழி?" என்று கேட்டேன்.

உடனே அவன் முகத்தில் சோகம் படர்ந்தது:

"எனக்கு இஷ்டமில்லை சார். நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு இதில் இஷ்டமில்லை. ஆனால் சங்கத்தில் கட்டாயப்படுத்தும்போது என்ன செய்ய முடியும். வேலைக்குப் போனால் அடித்துக் கொன்றுவிடுவார்கள்" என்றான்.

ஐயோ, இந்தச்சப்பாணி நாளைசோற்றுக்கு என்ன செய்வான்? என்னிடம் கடன் கேட்க வருவான். கடன் கேட்க அவனுக்கு வெட்கமாயிருந்தால், கடன் கேட்க மனைவியை அனுப்பி வைப்பான்.

* * * * *

இரண்டு மாதங்களாக வேலை நிறுத்தம் தொடர்கிறது. தொழிலாளர்களின் வீடுகளில் பசி. சப்பாணி வீட்டில் அடுப்பு எரிந்து இரண்டு நாட்களாகின்றன. எந்த தொழிலாளிக்கும் வேலைக்குச் செல்லும் துணிவில்லை. வேலைக்குச் சென்றால் கட்சித்தொண்டர்கள் தடுத்து நிறுத்தி விடுவார்கள். இது தொழிற்சங்கத்தின் மானப் பிரச்னையாம். ஆகவே, தொழிலாளர்கள் குடும்பத்தோடு பட்டினி கிடந்து வாடுவது அவர்களுடைய கடமை.

* * * * *

டைரியைப் படித்துக் கொண்டிருந்த பரணி குழம்பினான். அவன் வரலாற்றுத் துறை மாணவன். உலக வரலாற்றில் தொழிற்சங்கத்தின் தொடக்கம் பற்றியும், அது அமைவதற்கான சூழ்நிலைகள் பற்றியும் அது ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியும் நன்கு படித்திருந்தான். ஆனால் சந்திரசூடனின் டைரியில் படித்த விவரங்கள் அவனைக் குழப்பின. ஒரு திருட்டுத் தொழிலாளிக்காகத் தொழிற்சங்கம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வாட்டியதை எண்ணிக் குழம்பினான்.

திடீரென்று அவனுக்குக் கல்லூரியின் நினைவு வந்தது —

* * * * *

சேல்ஸ்மேன்: "இந்த ரிமோட் கண்ட்ரோல் மூலம் நீங்க படுக்கையில் இருந்தபடியே போரடிச்சால் டீ. வி. யை ஆஃப் பண்ண முடியும்."

"எப்போதாவது இன்ட்ரஸ்டிங்கா புரோகிராம் இருக்கிறப்ப மட்டும் தானாகவே 'ஆன்' பண்ணிக்கிற மாதிரி எதுவும் டீ. வி. இருந்தால் சொல்லுங்க..."

— என். எஸ். வி. குருமூர்த்தி.



இப்போது எங்கள் மாணவர் சங்கம் நடத்தும் போராட்டமும் இப்படித்தானே இருக்கிறது. பரீட்சையில் காப்பியடித்து, பேராசிரியரைத்தாக்கிய ஒரு அயோக்கிய மாணவனுக்காகத்தானே இந்த ஸ்டிரைக்!

அவனுக்கே அவமானமாயிருந்தது. மாணவர் சங்கக் கூட்டத்தில் போராட்டத்திற்காகக் கை தூக்கியவர்களில் அவனும் ஒருவன். எதிர்த்து ஒரே ஒரு மாணவன் மட்டும் பேசினான்; குற்றம் புரிந்தவனுக்கு மாணவர் சங்கம்துணை போவதை எதிர்த்தான். அவனை எல்லாரும் தாக்க முனைந்து அச்சுறுத்தவே அவனும் அடங்கிவிட்டான். பரணிக்கு அந்த நினைவு மனத்தில் அரிக்கத் தொடங்கியது —

டைரியைத் தொடர்ந்து படிக்க எண்ணி நோட்டுப் புத்தகத்தை மீண்டும் திருப்பிய போது மாடிப்படியில் காலடி ஓசை கேட்டது. சந்திரசூடன் உள்ளே வந்தார்.

''என்ன படிக்கிறாய்?'' என்று கேட்டவாறே கட்டிலில் அமர்ந்தார்.

பரணி சோபாவிலிருந்து எழுந்து, ''உங்கள் டைரி'' என்று சிரித்தான்.

''ஓ..... படிக்கத் தொடங்கிவிட்டாயா? ஜாக்கிரதை படித்துவிட்டுக் குழம்பாதே.''

''குழம்பவில்லை. தெளிவடைந்திருக்கிறேன்.''

''எதில்?''

''போராட்டங்கள் பற்றி.''

சந்திரசூடன்புரிந்துகொள்ளாமல் அவனை உற்றுப் பார்த்தார்.

''நீங்கள் வேலை பார்த்த தொழிற்சாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தம் பற்றி எழுதியிருக்கிறீர்களே,'' என்றான் பரணி.

''ஓ, அதுவா?'' என்றபடியே வெற்றிலைப் பெட்டியை அருகே இழுத்தார்.

''முறை தவறி நடப்பதானால் தொழிற் சங்கங்கள் எதற்கு?'' என்றான் பரணி.

''அவற்றின் தலைவர்கள் சுகபோகமாக வாழ்வதற்கு.''

''சார், நான் எங்கள் கல்லூரி ஸ்டிரைக்கை நிறுத்தப் போகிறேன்.''

சந்திரசூடன் சிரித்தார். ''உன்னால் முடியுமா? உதை வாங்காமல் நீ திரும்பினால் போதும்.'' என்றார்.

''எப்படியும் நான் நிறுத்தியே தீருவேன். ஒரு அயோக்கியனுக்காக அத்தனை மாணவர்களும் சங்கடப்படுவானேன்?''

''அவனைப்போல் வேறு சில அயோக்கியர்களும் உங்கள் கூட்டத்தில் இருப்பார்களே. அவர்களுக்குப் படிப்பதைப் பற்றிக் கவலை இல்லை. ஸ்டிரைக்கை நிறுத்த அவர்கள் சம்மதிப்பார்களா?''

''நான் தீவிரமாக எதிர்க்கப் போகிறேன்'' என்று திடமாகக் கூறிவிட்டு மாடியிலிருந்து கீழே இறங்கினான் பரணி.

''போ, போ. போகும்போது உன் பாட்டியிடம், உனக்கு ஒத்தடம் கொடுக்க வெந்நீர் போட்டு வைக்கச் சொல்'' என்றார் சந்திரசூடன்.

(தொடரும்)

அமைச்சர் ராமச்சந்திரன் மறுக்கிறார்:

''நான் எங்கும் அப்படிப் பேசவில்லை!''



அன்புள்ள ஆசிரியருக்கு,

29.9.1985 நாளிட்ட கல்கி இதழில் 'கேள்வி பதில்' பகுதியில் நான் பேசியதாக ஒரு பகுதியைப் போட்டு ''தராசு'' என்ற பெயரில் பதில் வந்திருக்கிறது. நான் எங்கும் அப்படிப் பேசவில்லை. எங்கிருந்து உங்களுக்கு இந்தத் தகவல் கிடைத்திருக்கிறது என்பதும் தெரியவில்லை. இருப்பினும், தங்களுக்கு எங்கள் மீது உள்ள பொல்லாங்கு உள்ளத்தை (**Prejudice**) சிதம்பரத்தைச் சேர்ந்த 'வித்யா வந்தன்' என்ற பெயரில் சாமர்த்தியமாக வெளிக்கொணர்ந்துள்ளீர்கள். தங்கள் திறமைக்கு என் பாராட்டு.

இதை வெளியிடுவீர்கள் என நம்புகிறேன்.

அன்பன்,

ச. இராமச்சந்திரன்.

(அமைச்சர் திரு ராமச்சந்திரன் அவர்களிடமோ, கட்சியிடமோ, அரசிடமோ எமக்கு எந்தவிதப் பொல்லாங்கு உள்ளமும் இல்லை. வாசகர் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் கூறப்பட்டுள்ளது. அவ்வளவே.

— ஆசிரியர்)

இலவசம்!

ஒவ்வொரு பாருடனும்
ரூ.1/ மதிப்புள்ள
ஒரு வெல்வெட்
ஷாம்பூ பாக்கெட்!

டோட்டல்

நீலநிற டிடர்ஜெண்ட் சலவை பார்





இந்த விசேஷ சலுகை
தமிழ் நாட்டில் மட்டுமே!

இந்த சலுகை
இல்லாமலும் இருப்பு
விற்பனைக்கு உள்ளது.

தயாரிப்போர்: கர்நாடகா சோப்ஸ் & டிடர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
விற்பனை ஏற்பாடு: மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட்

11. கனத்தை லேசாக்கும் கனவுகள்

> தன்னை அனைத்து ஜீவன்களிலும் இலகும் உயிருக்குயிராய் அறிந்த பரமோத்தம ஞானி தன்னிலேயே விளையாடி, தன்னிலேயே இன்புற்று, இதனையே தன் தொழிலாகக் கொண்டிருப்பான்.
>
> — முண்டகோபநிஷதம் 3—1—4.

உலகமே கனவு என்ற அத்வைத லக்ஷ்யத்தைக் காட்டிக் கொடுப்பதே தமது கடமை எனக் கொண்டிருப்பவர் நமது லீலா பாலர். தம் உரைகளில் அந்தப் பெரும் குறிக்கோளைக் கூறாமல் விடமாட்டார். "இங்கு கூடியிருப்போரில் சிலர், 'பாமர மக்களுக்கு மத்தியில் பாபா ஏன் பரம அத்வைத தத்வங்களைச் சொல்கிறார்? இது யாருக்குப் புரியும்?' என நினைக்கலாம். ஆனால் ஸத்யத்தைத்தான் நான் சொல்ல முடியுமே தவிர, வெறுமே செவிக்கு ரஞ்ஜகமாகப் பேசிப் போவதற்கில்லை. நான் சொல்வது வீண் போகாது. ஓரிரு நெஞ்சங்களிலாவது அது ஆழப் புகுந்து அவர்களது வாழ்வையே மாற்றக் கூடும். இப்படிச் சிலர் உய்வதே போதுமானது" என்றும் உரைகளிலேயே அவர் கூறுவதுண்டு.

பேட்டியொன்றின்போது, "எம் மதஸ்தராயினும் தங்கள் மதத்தின் முடிவான கொள்கை இன்னதென்று அறிந்து சொல்கிறார்கள். ஹிந்துக்களுக்கு மட்டும் அது என்னவென்றே தெரியாதிருக்கலாமா? ஹிந்து மதத்தில் எத்தனை கொள்கைகளிருந்தாலும் இதற்கென்றே தனிச் சிறப்பாக உள்ள அப்படிப்பட்ட தத்வம் யாதெனில், 'ஜீவன் பரம் பொருளன்றி வேறில்லை' என்னும் அத்வைதம்தான். இது புரியட்டும், புரியாமற் போகட்டும்; அநுபவத்துக்கு வரட்டும், வராமல்தான் போகட்டும்; ஆனால் இது அடியோடு தெரியாமல் நம் மக்கள் இருக்கலாமா? அவர்களுக்கு இதைத் தெரிவிக்காமல் கூட ஸ்வாமி என்று நான்தான் இருக்கலாமா?" என்று கேட்டார்.

அத்வைத அநுபூதி கண்டவராக அவர் இருப்பதால்தான் உபநிஷதம் சொன்னாற் போல, தனது வெளிப்பாடாகவே அவர் காணும் உலகில் விளையாடிக் களிக்கிறார், களிப்பிக்கிறார். இந்த விளையாட்டில் பலவித பாத்ரங்கள் இருப்பதாகவும், த்வைதமாகக் கொண்டு, அத்வைத அநுபவத்துக்கு உயர முடியாதவர்களுக்கும் அவர்களளவில் ரஞ்ஜகமாக லீலைகள் புரிந்து அவற்றின் மூலமே சிறுச் சிறிதேனும் உயர்த்துகிறார். ஏனெனில், த்வைத வேஷம் போடுகையில், "நான் ஏதேனும் கொள்கையுடையவன் எனில் அது ஸகல ஜீவருக்கும் மகிழ்ச்சியைப் பொழிவதுதான்" என்பவராதலால்!

ரா.கணபதி

இங்கேதான், உலகைக் கனவென்றவர் கனவையே உலகாக்கிவிடுகிறார்! "ஸ்வாமி வரும் கனவை வெறும் கனவெனத் தள்ளிவிடாதீர்கள்" என்கிறார்.

காதேமாலாவில் ஸ்வாமி தொகுத்துள்ள லீலா மாலாவில் அதிவிநோதமானதொரு ஸ்வப்ன அதிசயமுண்டு. அந்தப் பெண் ஒரு யோக மாணவி. சிற்பம் செய்யவும் அறிந்தவள். தன்னை யோகத்தால் நல்லுருவாகச் செதுக்கி வந்த யோகேச்வரரைச் சிலையுருவில் வடிப்பது போல ஓரிரவு கனவு கண்டாள். காலையில் எழுந்திருக்கையில், 'கையில் என்ன கசகசப்பாக? பற்றுப் போட்டாற் போலிருக்கிறதே?' என்று பார்த்தாள். பார்த்தால்..... அவள் விரலெல்லாம் சிலை செய்யும் குழை மண் அப்பியிருக்கிறது! மணிவாசகர், 'குழைத்த பத்து' பாடினார்; இது அப்பன் அருள் குழைத்த பற்று!

தீராத

உறக்கத்தில் இன்னொருவர் கைக்குக்கிட்டியதைப் பார்ப்போம். அந்த இன்னொருவர் டில்லியிலுள்ள ராம்லால் ஆனந்த் கல்லூரியின் முன்னாள் முதல்வரான பேராசிரியர் இந்த்ர நாராயண் பட்நகர்.

கனவிலும் உன்னையன்றி நினைவுண்டோ?
கதி உன் கழலின் நிழலே அன்றோ?

என்பதாக, ஸ்வப்னாவஸ்தையிலும் தாம் ஸ்வாமியின் கழலையே பற்றி நிற்க வேண்டுமென்று கருதியவர் அவர். அதற்கான ஸாதனையாக உறங்குமுன் உள்ளத்தை ஒருமுகப்படுத்திப் படுத்திப் பாதமலரைப் பிடித்திருப்பதாக பாவிப்பார். பாவனைக்கு அழுத்தம் தருவதற்காக க்ரியாம்சையிலேயே தலையணையில் தலைவன் தாளிருப்பதாய் எண்ணி, அதைப் பற்றியிருப்பார்!

ஒரு நாளிரவு தலையணைப் பஞ்சு வழக்கத்திலும் மென்மையாய், ஹம்ஸ தூளியினும் ம்ருதுவாய்க் கைக்குள் அடங்கியது. உறைத் துணியோ காச்மீரப் பட்டினும் வழுவழுப்பாயிருந்தது. அதோடு, ஹம்ஸ தூளிக்கும், காச்மீரப்பட்டுக்கும் இருக்க முடியாததோர் அன்புயிர்ப்பு பட்நகரின் உள்ளங்கை வழியே உள்ளத்துள் பாய்ந்தது! ஆம், பேராசிரியரின் கைக்குள் பேராச்சர்ய ஸ்வாமியின் அசல் பாதமே இருந்தது!

அடுத்தமுறை அவர் ஸ்வாமியிடம் நேரில் பாத நமஸ்காரம் பெறுகையில், ஸ்வப்னத்திலே, அவர் கைக்குள் தமது பாதம் எந்தக் கோணத்தில் பிடிபட்டிருந்ததோ, அச்சாக



விளையாட்டு ஸ்வாமி

அப்படியே அடியிணையைப் பொறுத்திக் கொண்டார். 'அன்பெனும் பிடியுள் அகப்படும்மலை'யும் 'அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கட'னுமான ஸ்வாமி!

* தென் அமெரிக்க அடியாரொருவர் பாபாவின் ப்ரஸாதமான விபூதிப் பொட்டணத்தைக் கையில் வைத்தவாறே தினந்தோறும் தூங்குகிறாராம். தினந்தோறும் அவருக்குக் கண்ணனின் கழல்களைப் பிடித்திருப்பது போலக் கனவு வருகிறதாம்!

* பலவிதமான ப்ரச்னைகளுக்கும் கனவில் ஸ்வாமி உபாயம் கூற, அவற்றையே நனவில் பெற்ற உத்தரவாகக் கொண்டு அப்படியே செய்து தீர்வு பெற்றிருப்பவர்கள் ஏராளம், ஏராளம். உதாஹரணமாக, ஸ்ரீ ச.கு. கணபதி அய்யரின் புதல்வியார் ஸ்ரீமதி கமலம்மாவுக்குச் சின்ன விஷயங்களுக்கும் ஸ்வாமி கனவுகள் வழியே கட்டளை பிறப்பிக்க, அப்படியே நடக்கிறதாம். பிற்பாடு திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் இசையிலே முதல் வகுப்புப் பட்டம் பெற்ற இவரது பெண்ணுக்குக் கனவுகளிலேயே ஸ்வாமி ஸங்கீதசிக்ஷை அளித்திருக்கிறாராம், மண்டையில் குட்டிக்கூட!

* நாற்பதாண்டுகளாக வேறொரு கனவதிசயமும் நடந்து வருகிறது. நாற்பதுகளின் மத்தியில் ஸ்ரீ திருமல் ராவ் தீராத வயிற்று நோயுற்றபோது, நமது தீராத விளையாட்டுக்காரர் ஆபரேஷன் செய்வதாய்க் கனவு கண்டார். விழித்தெழுந்தவர் விதிர்விதிர்த்தார்! வாஸ்தவமாகவே அவர் வயிற்றைக் கிழித்து அறுவை செய்திருந்தது! நோயும் பறந்துவிட்டிருந்தது!

அதன்பின்னும் பலருக்கு இந்த லீலையை ஸ்வாமி 'ரிபீட்' செய்திருக்கிறார்.

* கனவு மூலம் நம் தேசப் பாதுகாப்புக்கே ஸ்வாமி புரிந்துள்ளதொரு பேருபகாரத்தை எண்ணினால், அப்பப்பா, அநாயாஸ விளையாட்டின் ஆழ்பயன் எத்தகையது என சிலிர்த்து விடுவோம்!

பெயர் குறிப்பிடுவதற்கில்லை—வட எல்லையிலுள்ள ஒரு முக்யத்வம் வாய்ந்த விமான தளம். அதில் ஸெக்யூரிடி வார்டில் ஒரு சிறிய அதிகாரி. 1965, மே 22ந்தேதி அவர் ஒரு கனவு கண்டார். நம் கதாநாதர்தான் கனவில் தோன்றினார். விமான தளத்தில் பன்னிரண்டு இடங்களைத் தெளிவாகக் காட்டி, அங்கே அப்போது இல்லாத பன்னிரு 'போஸ்ட்'களைக் காட்டினார். அவற்றில் வைக்க வேண்டிய தளவாடங்களைக் குறிப்பிட்டுவிட்டு, 'போஸ்ட்'களிலும் தளத்தைச் சுற்றியும் எத்தனை ஜவான்களை எப்படிக் காவல் வைக்க வேண்டுமென்றும் ஸ்பஷ்டமாகக் கூறினார். "ஒரு ஜவானுக்குக்கூட ஒரு காயமும் ஏற்படாது" என்று அபய வாக்களித்து மறைந்தார்.

விழித்தெழுந்த பக்தருக்கு கனவு ஸமாசாரத்தின் அவச்யம் புரியவில்லை. ஏனெனில் அப்போது யுத்த ஆபத்து எதுவுமே இல்லை. மேலும், இவரோ சிறு அதிகாரி. தம் வரம்புக்கு மேற்பட்டதாக ஸ்வாமி கனவில்

கொடுத்த பொறுப்பை எப்படி எவரிடம் சொல்வது எனக் குழம்பினார். எதையோ சொல்லப் போக இவரையே மேலாளர்கள், உளவாளியாக எண்ணிவிட்டால்? ஆயினும் பகவான் வாக்கு என்பதால், பிற்பாடு மறவாதிருக்க, உடனே அலுவலகம் சென்றார்; ஸ்வாமி காட்டியவாறே போஸ்ட்களுக்கும் சுற்றுக் காவல் நிலைகளுக்கும் க்ராஃப் படம் போட்டு, பாதுகாப்பான ஒரு மேஜைக் கண்ணாடிக்கு அடியே வைத்துவிட்டார்.

சுமார் மூன்று மாதம் பின், ஆகஸ்ட் மத்தியில், சற்றும் எதிர்பாராத எதிர்ப்பு ஏற்பட்டது! பாகிஸ்தான் காலாட் பிரிவில் பன்னிரண்டாயிரம் சிப்பாய்கள் படையெடுத்து நெருங்குவதாகத் தெரிந்தது! ஓரிரு நாட்களில் தளத்தைச் சூழ்ந்துவிடுவர்!

பயங்கரமான நிலை! தளத்திலோ நிரந்தரப் பணியாட்களான நானூறே பேர் உள்ளனர். எதிரிகளைத் தாண்டி வெளியேயிருந்து நம் படைகளை அக்குறுகிய இடைக்காலத்தில் தருவிப்பது வெகு ச்ரமமானது! இந்த தளம் விழுந்துவிட்டாலோ பாரதத்துக்கே அது ஒரு வீழ்ச்சி போலத்தான்!

மேலதிகாரி கலவரமுற்றார். நமது அன்பர் ஸாயி பக்தரென்றும், ஸாயி அற்புதம் வல்ல ஆபத்பாந்தவர் என்றும் அவர் கேள்விப்பட்டிருந்தார். எனவே, "ஸாயி ரக்ஷது!" என்று நம் பக்தருக்கே முக்ய "சார்ஜ்" கொடுத்தார்.

மலைத்தார் பக்தர். அவரது பார்வையில் ஏதோ காகிதம் மிதந்து வந்தது. 'இதென்ன ப்ரமை?' என்று ஒதுக்கப் பார்த்தார். காகிதமோ மீள மீள மிதந்து வந்து, பிடிவாதமாகத் தன்னைப் புரிய வைத்துக் கொண்ட பின்தான் மறைந்தது. ஆம், மூன்று மாதம் முன் அவர் போட்டு வைத்த க்ராஃப்தான் இன்று ஸமய ஸஞ்ஜீவியாய்க் காட்சி தந்தது!

ஓடோடிச் சென்று அதை எடுத்துப் பார்த்தார் பக்தர். 'ஆஹா! வருமுன் காப்போராக இத்தேசத்துக்கு எப்பேர்ப்பட்ட அருள் கூர்ந்திருக்கிறார் ஸ்வாமி!'

அப்புறம் என்ன? நேராக ராணுவப் பணி செய்யாத 'நான்-மிலிடரி'க்காரர்களை அதிகமிருந்த அவ்விமான தளத்தில் ஓர் அதிசயமான பாதுகாப்பு ஸாஹஸம் தொடங்கிற்று. ஸ்வாமி கனவில் காட்டியவாறே பன்னிரண்டு போஸ்ட்கள் கட்டப்பட்டன. இருந்த நானூறு ஊழியரில், ஸ்வாமி பணித்த கணக்குப்படியே போஸ்ட்டுக்குப் பத்துப் பேராக நூற்றிருபது பேரும், மீதமிருந்தோர் அவர் காட்டிய 'பொஸிஷன்'களில் சுற்றுக் காவலாகவும் அமர்த்தப்பட்டனர். கைவசமிருந்த தளவாடங்கள் கரெக்டாக அவர் காட்டியபடி விநியோகமாவதற்குப் போதுமாயிருந்தன!

மாமேதையரான ஸேனாதிபதிகளும் வியக்கும் 'ஸ்ட்ராடஜிஸ்டிக்' திறம் காட்டியாக்கும் ஸ்வாமி படை வகுத்திருக்கிறார்! இரண்டு நாட்களுக்குப் பின் தளத்தை முற்றுகையிட்ட பன்னீராயிரவர் இரவெல்லாம் இந்த நானூற்றுவர் கொடுத்த எதிர்த்தாக்கிலேயே சுருண்டனர்! ஏதோ பெரும் படை பலம் அங்கு நமக்கிருப்பதாக எண்ணி, மறுநாள் காலை வாலைச் சுருட்டிக் கொண்டு வாபஸ் ஆயினர்!

'நிர்பல் கி பல் ராம்!' என்னும்படி ஸாயி ராமனின் பக்கபல விசேஷந்தான்!

இன்னோர் அதிசயம் — போர் வரலாறுகளிலேயே அபூர்வமானது: நமது வீரர்களில் ஒருவருக்கும் ஒரு காயம் கூடப் படவில்லை! அன்றே அபய வாக்களித்தவர் அனைவர்க்கும் அருட் கவசம் சார்த்தி விட்டிருக்கிறார்!

எவரோ சிறிய அதிகாரிக்கு, இன்னதற்கென்றே புரியாமல் கனவில் கட்டளையிட்டு, அப்புறம் அவர் கண்முன் வரைபடத்தை மிதக்கவிட்டு — மாபெரும் தேச பாலனத்தை எப்படி பால லீலையாய் செய்திருக்கிறார்!

ஸம்பவம் நடந்து பத்தொன்பதாண்டுகளுக்குப் பின் ஸ்ரீ வி. கே. கோகக் கூறியே இப்பேரருள் தெரிய வந்திருக்கிறது. இதிலிருந்து தெரிய வரும் இன்னொரு அமுத உண்மை, "தான் செய்தோம்" என்ற தற்கனமேயில்லா த்யாக சீலராய், ப்ரேம வள்ளலாய், செய்யும் யாவுமே விளையாட்டாகவே செய்து லேசாய் வாழ்கிறார் நமது மஹாகனம் ஸ்வாமி என்பதுதான்!

(தொடரும்)



கணவன்: "நான் சமையல் செய்வது பிள்ளைகளுக்குத் தெரிஞ்சு போச்சு!"
மனைவி: "அதுக்கு என்ன இப்போ?"
கணவன்: "பசங்க என்னைப் பார்த்து, 'அம்மாவும் நீயே! அப்பாவும் நீயே'ன்னு பாடறாங்க!"

— பூவை. கே. சந்திரன்.


ஜனரஞ்ஜனி
வழங்கும்
புல்லரிக்கும் பகுதி
உங்கள் கேள்விக்கு
ஆவியின் பதில்கள்
ஆவி உலக
நிபுணர்
ரவிச்சந்திரன்
தொகுத்து அளிக்கும்
புதிய பகுதி
5 - 10 - 85
இதழில் தொடக்கம்


ஜனரஞ்ஜனி
ஜனரஞ்ஜனி
பல்சுவை - புதுமை வார இதழ்
அனுராதா ரமணன்
எழுதும்
ஊமை உறவுகள்
புதிய தொடர்கதை
ஜனரஞ்ஜனி
19.10.85
இதழில்
தொடங்குகிறது
ஜனரஞ்ஜனி
188. N-H ரோடு
கோவை 641001

நான் நான் ஆனபோது...



"என்ன செய்யற இப்ப நீ?" குரலில் அலட்சியம் கலந்து கேட்டான் அந்த ஆள்.

எனக்குச் சுருக்கெனத் தைத்தது.

இயற்கையாக எழும் சுயமரியாதை உணர்வு எனக்குள் சீறிப்பாய்ந்தது. காரணம், அந்த "நீ."

"எனக்கென்ன வயசிருக்கும்?" சிரிப்பின்றிக் கேட்டேன்.

"எதுக்கு? ஒரு இருபத்தாறு இருக்குமா?" அதே அலட்சியத்துடன் இப்போது சிறிது கிண்டலும் இழையோடியது.

"என்ன படிச்சிருக்கேன் தெரியுமா?"

"எம். ஏ. தானே?"

"எம். ஏ. எம்.எட்: இதுக்கு முன்னலை என்னைப் பார்த்ததுண்டா?"

கொஞ்சம் தயங்கி, "இல்லைதான். ஏன்?"

"எனக்கு வயது இருபத்தாறு. எம். ஏ. எம். எட். படிச்சிருக்கேன். நமக்குள்ள முன் பின் பரிச்சயமில்லை. அப்படி இருக்கப்ப, எப்படி என்னை நீன்னு மரியாதை இல்லாம கூப்பிடலாம்?"

என் குரலில் ஆத்திரம் இருந்தது. அது நடிப்பு இல்லை. என் நிஜ உணர்வே அது தான். ஆம், நான் அப்படித்தான்.

ஏதோ, 'நீ எனக்கு மட்டம்தான்' என்ற பாவனையில் முதல் சந்திப்பின்போதே வயது, படிப்பு, அனுபவம், அறிவு இவற்றுக்கெல்லாம் மதிப்பளிக்காமல் விளிப்பவர்களை வெறுப்புடன் விலக்கிவிடும் குணம் என்னுடையது.

மரியாதைநிறையத்தருவேன். அதேபோல எதிர்பார்ப்பேன். இதிலென்ன தவறு?

அது மட்டுமல்ல, தான் வாழ பிறரைக் கெடுப்பவனை எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது.

"அது.... அது.... நீ...." தடுமாறினன் அந்த ஆள்.

"மறுபடியும் 'நீ'."

"சரி, 'நீங்க' போதுமா? ஏதோ நம்ம ராஜரத்தினம் பையனுச்சேன்னு ஒரு உரிமையில கூப்பிட்டேன்" அந்த ஆளின் சமாளிப்பும், சிரிப்பும் எனக்கு அருவருப்பைத் தந்தது.

அந்த ஆள் என் தந்தை வேலை செய்யும் தனியார் பள்ளியின் கரஸ்பாண்டண்ட். (எனவே நான் பேசியதற்கு என் தந்தை தண்டனை அனுபவிக்க வேண்டி வரலாம்).

ஆசிரியர்களை அடிமை போல நடத்தும் எதேச்சாதிகாரவாதி அவன். அவர்களின் சம்பளத்தில் பகற்கொள்ளை அடிப்பதில் கில்லாடியும் கூட. கேட்டால் அவனுக்குக் கொடுத்தேன், இவனுக்குக் கொடுத்தேன் என அரசு ஊழியர்கள் மீது பழியைப் போட்டுவிடுவான். எனவே டி. ஈ. ஓ., சி. ஈ. ஓ. அலுவலகங்களுக்குப் போய் யாரையும் பார்க்கக் கூடாது என்பது அவனது கட்டளை. மீறி யாராவது போனுல் அவர்களைத் தன் அதிகாரத்தை வைத்துக் கொண்டு படாதபாடு படுத்திவிடுவான்.

பல ஆசிரியர்களுக்குத் தங்களின் உண்மைச் சம்பளம் எவ்வளவு என்பதே தெரியாது. விஷயம் தெரிந்த ஆசிரியர்கள் ஊமைகளாக இருந்தவர். அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் அடிக்கடி சொல்வதுபோல 'தாளித்துவிடுவான்'. பலர் விஷயத்தில் செய்தும் காட்டி இருக்கின்றன்.

இப்போது புரிகிறதா அவன் வயதுக்குக் கூட நான் மதிப்புத் தராததன் காரணம்?

அவனை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.,

இந்தச் சின்னச் சம்பவம் நடந்து சில மாதங்கள் ஆகிவிட்டன.

என் போதாத காலம், வேலைக்காக இப்போது அவனிடமே வர வேண்டிய வறுமை நிலை எனக்கு.

முதலில் எனக்கு இஷ்டமேயில்லை.

"இப்ப சகிச்சுக்கோ, நேரம் வரும்போது அவனைத் தாளி" என்ற பலரின் சமாதானம்—அதில் கொப்பளித்த அவர்களின் வெதும்பல்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்ற எனது ஆத்திரம்—என்னைச் சம்மதிக்க வைத்தது.

"வாவா. நீதானே அன்னைக்குப் பேசினவன்?" என்றுன் அவன் என்னைப் பார்த்ததும்.

"நான் எம். ஏ. எம். எட். படிச்.....";

மனத்துக்குள்ளேயே அடங்கியது என் குரல்.

"ஸாரி ஸார்."

கெக்கலித்தான் அவன்.

எனக்கு ஆத்திரம் பொங்கியது. இயற்கையாக அது வெடித்துச் சிதறி அவன் கொட்டத்தை நிர்மூலமாக்கி இருக்க வேண்டும்.

ஆனல், இப்போது அப்படி நிகழவில்லை.

இராஜா பாலசந்தர்

இந்த மாறுபட்ட நிலை எனக்கு விசித்திர மாகத் தோன்றியது.

அது மட்டுமா? இந்த ஒரு மாதத்தில் என்னைக் கேவலப்படுத்த எத்தனை 'நவீன முறை'களைக் கையாண்டான் தெரியுமா?

எல்லாவற்றையும் பொறுத்துக் கொண் டேன். பின்னணியில் படமெடுத்து ஆடிக் கொண்டு இருந்த என் குடும்ப வறுமைக் காக,எனக்காகப்பலஇன்னல்களுக்கிடையே காத்திருக்கும் அவளுக்காக!

நான் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதம் முடிந்துவிட்டது.

"இங்க கையெழுத்துப் போடு'' என்றான் அவன்.

போட்டேன்.

சம்பளப் பணம்' என் கைக்கு வந்தது. என் முதல் மாதச் சம்பளம். ஏதோ தன் சொந்தப் பணத்தைத்தானமாகக்கொடுத்தது போல் பார்த்தான்.

''நா உழைச்சதுக்கு கவர்மெண்ட் கொடுத்த சம்பளம், — சப்தமாகச் சொல் என்றது மனம்.

ஆனால் முடியவில்லை.

ஏன்?

எனக்கே தெரியவில்லை. அது மட்டுமல்ல. இந்தஒருமாதத்தில்நிறைய அக்கிரமச்செயல் களை எவ்வளவு துணிவுடன் செய்தான் தெரி யுமா அவன்?

அதுவும், என் கண் முன்னாலேயே. என் னால்தான் கேட்க முடியவில்லை.

நானா இப்படி? துக்கத்தினூடே ஆச்சரியப் பட்டேன்.



ஒருமுறை பஸ்ஸில் எவனோ ஒரு முரடன் யாரோ ஒரு பெண்ணை வேண்டுமென்றே தவறான இடத்தில் இடித்துவிட்டான் என் பதற்காக அவனை அங்கேயே துவைத்தெடுத்த நானா இப்போது இப்படி அடங்கிப் போய் இருக்கிறேன்?

ரோட்டில், கடைத் தெருவில் என எத்தனை அநியாயச் செயல்களை நானாக வலுவில் போய்க் கேட்டிருக்கின்றேன்?

எங்கே அந்த என் வீரம்? ஆண்மை?

இந்தக் கோழைத்தனம் எப்போது என்னைக் கைப்பற்றியது?

வேதனையோடு என் சம்பளப் பணத்தை எண்ணினேன். சுளையாக ஐம்பது ரூபாய் குறைந்தது. கேட்டேன்.

''புதுசில்ல நீ? அதான் கேக்கறே?'' எனச் சிரித்தான்.

நான் ஏனோ இப்போதும் அமைதியாக இருந்தேன்.

ஒருமுறை ஐம்பது காசைத் தராமல் ஏமாற்றிய கண்டக்டரை என்ன பாடுபடுத்தினேன்?

அதன்பிறகுதானே அவன் தினமும் அப்படிப் பலரை ஏய்ப்பது தெரிய வந்தது....

வேண்டாம் அதெல்லாம் பழைய கதை. இப்போது?

நான் உழைத்துச் சம்பாதித்த பணத்தில் ஐம்பது ரூபாய் பகற் கொள்ளை போவதைக் கேட்க முடியாமல் இருக்கின்றேனே.

இந்த ஒரு மாதத்தில் எதைத்தான் கேட்டேன், இதைக் கேட்க?

ஏதோ அவன் வீட்டு வேலைக்காரனை நடத்துவதுபோல அலட்சியப்படுத்தியதை ஆட்சேபித்தேனா?

''இந்தாப்பா, எதிர்த்த கடையில போய்ப் பொகையில வாங்கி வா'' என்றபோது மறுத்தேனா?

''வீட்ல ஏதோ வேலையாம், அம்மா (கரஸ்பாண்டன்ட் மனைவி) உன்னை வரச் சொன்னாங்க, போ'' — இதைக் கேட்டுச் சீறினேனா?

கரஸ்பாண்டன்டின் பத்துவயதுப்பையன் என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டபோது கோபப்பட்டேனா?

இல்லை..... இல்லவேயில்லை.

அதுதான் ஏன்?

என் சுயமரியாதை உணர்வு, சுய கௌரவம் எல்லாம் எங்கே போனது? ஏன் போனது?

யோசித்தேன். யோசித்தேன்.

''என்னடா தம்பி யோசிக்கிற?'' (கவனிக்கவும் 'டா')

நான் ஒரு முடிவு செய்துவிட்டேன். திடமான முடிவு. தீர்மானமான முடிவு.

''ஐ நீட் ரெஸ்பெக்ட்'' ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமைதியாகக் கூறினேன்.

நான் எதிர்பார்த்தது போல அவன் சீறவில்லை. சிரித்தான். ஏளனச் சிரிப்பு! ''அத எதிர்பார்க்காதே, அது தேவைன்னா இது கெடைக்காது. இது இல்லாம வாழ முடியாது'' என என் கையில் இருந்த பணத்தைக் காட்டினான்.

வேலையை விட்டு என்னை நீக்கும் உரிமைகள் தனக்கு இருப்பதைத்தான் சொல்லாமல் சொல்கிறான்.

இந்த அரசாங்கம் இப்படிப்பட்ட உரிமைகளை ஏன்தான் அங்கீகரித்துள்ளதோ? இப்படிப்பட்ட சுயவர்கள் பயன்படுத்திக் கொள்ளவா?

தேவையற்ற சிந்தனை.

''த்தூ..... யாருக்கு வேணும் இந்தப் பணம்'' என்று கூறிப் பணத்தை அவன் மூஞ்சியிலேயே விட்டெறிந்தேன்.

இதை அவன் எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் அதிர்ந்து பின் சமாளித்துக்கொண்டான். ''இந்த ரோஷம் இருந்தா உன்னால வாழ முடியாது!''

''இந்த உலகம் ரொம்பப்பெரிசு'' என்றேன்.

''நீ பதற்றப்படறே'' என்றான் அலட்சியமாக.

எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. ''யூ மஸ்ட் கிவ் மி ரெஸ்பெக்ட், யூ நோ?'' மிக அழுத்தமாகக் கூறினேன்.

அது மட்டுமா இன்னும் நிறையப் பேசினேன். அவனது அக்கிரமங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தேன்.

அடிமைகளாக அவதியுறும் எல்லா ஆசிரியர்களும் மனத்துக்குள் மகிழ்ச்சியுடன் பிரமித்தனர். அதிகார வெறி பிடித்த அந்த கரஸ்பாண்டன்ட் அதிர்ச்சியில் செயலிழந்துவிட்டான்.

நான் நிறையப் பேசினேன், யாருடைய குறுக்கீடும் இன்றி.

இந்த ஒரு மாத மாற்றம் ஒரு விநாடியில் மறைந்த மாயம் என்ன?

ஆம்! இந்த வேலையை ராஜினாமா செய்ய நான் முடிவு செய்துவிட்டேன்; இந்த உலகம் மிகப் பெரியது என்ற நம்பிக்கையில்.

பெயர் சூட்டுவிழா!

மாவட்டங்கள்
வளர்ச்சிப்
பாதையில்
பின்தங்கிய நிலைபற்றி
கவலைப்படுவதில்
அர்த்தமில்லை.
இப்பொழுதுதானே
நம் அரசினர் அவைகட்கு
புண்ணியாகவாசனம்
செய்து
பெயர் சூட்டு
விழா நடத்துகிறார்கள்!

—ஜெய்ராம்.

27

மேஜைமேல் புத்தகம் விரித்தபடி கிடந்தது. ரஞ்சனியின் பார்வை அதன்மேல் பதிந்திருந்தது. ஆனால் ஓர் அட்சரத்தை மனசு கிரகிக்கவில்லை.

'இத்தனை பேடியா நீ? கோழையா நீ? என்னிடம் கூடச் சொல்லாமல் தில்லியை விட்டு ஓடும்படி உனக்கு என்ன ஆகிவிட்டது? முற்போக்குச் சிந்தனையாளன், சராசரி சேக்கியனைப் போல் உணர்ச்சி வசப்படாதவன் என்று பீற்றிக் கொண்டதெல்லாம் என்ன ஆயிற்று?'

'நம்பிக்கைதான் எதிர்காலத்தின் அஸ்திவாரம். உனக்கு நம்பிக்கை போய் விட்டதா? எதிர்காலமே இல்லை என்று தீர்மானித்து விட்டாயா?'

'உனக்கும் ருமாவுக்கும் என்ன வித்தியாசம்?'

'என்னிடம் உனக்கு நம்பிக்கை போய் விட்டது. ருமாவுக்குப் போய்விட்ட மாதிரி.'

கண்களில் முள்ளாய்க்குத்திய நீரை அவள் அவமான ஆக்ரோஷத்துடன் உள்ளே விழுங்கிக் கொண்டாள்.

எத்தனை ஆத்மார்த்தமான பிரியம் என்னுடையது என்று உங்கள் இருவருக்கும் புரியுமா? நீங்கள் இருவரும் கவலைப்படும் அளவு நானும் பஞ்சாபுக்காகக் கவலைப்படுகிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?

உங்களிடமிருந்து என்னை எப்படிப் பிரித்தீர்கள்? நான் என்ன தவறு செய்தேன்? எங்களைச் சேர்ந்தவள் நீ இல்லை, எங்கள் துக்கம் பிரத்யேகமானது என்று என்னை ஒதுக்கும்படி நான் என்ன செய்தேன்?

நான் ஒரு ஹிந்து என்கிற நிதர்சனம்.

அத்யந்த நண்பர்களிடையே இப்படி ஒரு குறுக்குச் சுவர் எழ வேண்டுமானால் இந்த நாட்டுக்கு விமோசனமில்லை.

அவனுக்கு அவள் மேல் இருந்த ஈடுபாட்டைப் பற்றி அவளுக்குச் சந்தேகமில்லை. எத்தனையோ தருணங்களில் பேசாத மௌனத்தில், பார்வையில், ஒரு வார்த்தையின் கனிவில், செய்கையின் கரிசனத்தில் அவனுடைய மனத்தை அவன் வெளிப்படுத்தியிருக்



கிறான். வேறு எந்தப் பெண்ணுடனும் அவனுக்குச் சிநேகிதம் இல்லை என்று அவளுக்குத் தெரியும்.

பின் ஏன் சொல்லிக் கொள்ளாமல் தலைமறைவாகிப் போனான்? இரண்டு மாதங்கள் லீவுக்கான மனுவை அவன் பஞ்சாபிலிருந்து போட்டிருப்பதாக அவன் வேலை பார்க்கும் காலேஜில் சொன்னார்கள். அவளுக்கு ஒரு கடிதம் கூடப் போடவில்லை.

ஏன் இப்படி நடந்து கொண்டான்?

அன்று பலத்த காயம்பட்டு அவன் நினைவிழந்து கிடந்ததைப் பார்த்துப் பதறி



நான் அசட்டுத்தனமாய் என் உள் மனத்தைத் திறந்து காட்டியதும் அம்மாவும் அப்பாவும் பிறகு லேசாக விறைத்துக் கொண்டு மௌனமானதும் அவனுள் ஒரு பயத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இந்தச் சிநேகிதம் தொடர்ந்தால் இந்த வீட்டை அது இரண்டாக்கிவிடும் என்று அவன் உணர்ந்திருக்க வேண்டும். எனக்கு இப்பொழுது ஏற்படும் துக்கமும் ஏமாற்றமும் அவனுக்கு அன்றே ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த நிலை ஏற்படக் காரணமான மற்ற விஷயங்களின் தாக்குதல்தான் அவனது அஞ்ஞாத வாசத்துக்குக் காரணம்......

''ரஞ்சனி!''

அவள் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தாள். கண்களில் இன்னும் ஈரக் கசிவு இருந்தது.

''உடம்பு சரியில்லையா என்ன?'' என்றாள் அம்மா.

''இல்லையே! நன்றாத்தானே இருக்கேன்?''

''நன்றாயிருந்தா நான் ஏன் கேக்கறேன்? சரியாச் சாப்பிடறதில்லே, எப்ப வந்து பார்த்தாலும் சோர்ந்து போயிருக்கே.''

''ஒரு நாளைக்கு பஸ்ஸிலே யூனிவர்ஸிடிக்குப் போய்ப் பாரு! நீயும் இப்படித்தான் இருப்பே!''

''முன்னேயும் போயிண்டிருந்தவதானே நீ? அதோட ஸ்பானிஷ் க்ளாஸ், பேப்பர் வேலைன்னு பம்பரமா சுத்துவியே, இப்ப என்ன ஆச்சு?''

''ஒண்ணும் ஆகல்லே. பம்பரம் எத்தனை நேரம் சுத்தும்?''

''திக்கற வயசாயிடல்லே உனக்கு. உடம்பிலே ஏதானும் கோளாறோ என்னவோ, நாளைக்கு டிஸ்பென்ஸரிக்குப் போய் டாக்டரைப் பாரு!''

இந்த அம்மா எத்தனை நன்றாக நாடகமாடுகிறாள் என்று அவளுக்கு எரிச்சல் ஏற்பட்டது.

''ஆளை விடும்மா!'' என்றாள் அவள் மெல்லிய சிடுசிடுப்புடன். ''எனக்கு ஒண்ணுமில்லே!''

அம்மா இன்னும் தயங்கி நின்றாள். ''நடராஜனுக்கு என்ன பதில் சொல்லட்டும்?''

ரஞ்சனி திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''எதுக்குப் பதில் சொல்லணும்?''

''என்னடீ இது, நீட்டி முழக்கிண்டு கேக்கறே? நேத்து உங்கிட்ட சொன்னதெல்லாம் மண்டையிலே ஏறல்லியா?''

அம்மாவின் குரலில் கோபம் எட்டிப் பார்த்தது.

''நிச்சயமா புரியல்லே நீ சொல்றது.''

''என்ன, ஒரேயடியா டபாய்க்கறே? ஸிம்லாவிலே ஒரு ஐ. ஏ. எஸ். வரனைப் பத்திச் சொல்லல்லே? டில்லியிலே வளர்ந்த பிள்ளையாம். அதனாலே டில்லியிலே வளர்ந்த பெண்ணா வேணும்ங்கறானாம்!''

''தாராளமா பாத்துப் பண்ணிக்கட்டுமே! எங்கிட்டே ஏன் சொல்றே?''

''விளையாடறியா? நடராஜன் உனக்காக

வாஸந்தி

அந்த வரனைப் பார்க்கலாம் என்கிறான்.''

ரஞ்சனி அம்மாவை தீர்க்கமான கண்டிப்புடன் பார்த்தாள்.

''இதப்பார். நான் போன வருஷமே உங்கிட்டச் சொன்னேன். படிச்சு முடிக்கிற வரைக்கும் தொந்தரவு பண்ணாதேன்னு. அப்பாவும் அதைத்தானே சொன்னார்?''

''உங்கப்பா சொல்வார்! செலவை ஒத்திப் போட முடிஞ்சவரைக்கும் நல்லதுன்னு. உன் படிப்பு முடியறவரைக்கும் வரன் காத்திருக்குமாடி?''

''காத்திருக்காட்டா போறது! அது ஒண்ணுதானா உலகத்திலே?''

அம்மா ஆயாசத்துடன் அவளைப் பார்த்தாள்.

''இன்னும் ஆறு மாசம்தானே இருக்கு படிப்பு முடிய? வரனை நிச்சயம் பண்ணிட்டுக் கல்யாணத்தை அப்புறம் வெச்சுக்கறது! இல்லே கல்யாணத்துக்கப்புறமும் பரீட்சை எழுதக் கூடாதுன்னு எங்கே சொல்லியிருக்கு?''

''அம்மா! நான் எம். ஏ. யோட படிப்பை நிறுத்திக்கப்போறதில்லே. எம்ஃபில் பண்ணுவேன். அப்புறம் பி. எச்டி பண்ணுவேன்.''

அம்மாவுக்கு முகத்தில் சுறுசுறுவென்று கோபம் ஏறிற்று.

''நீ இப்ப இருக்கிற லட்சணத்தைப் பார்த்தா எம். ஏ. பரீட்சையைக் கூட பாஸ் பண்ணப் போறதா எனக்குத் தெரியல்லே. நீ புஸ்தகத்தை ஒழுங்காத் தொட்டு எத்தனையோ நாளாச்சு. என்ன ஆச்சு உனக்கு?''

ரஞ்சனி சோர்வுடன் கண்களை மூடிக்கொண்டாள்.

''அம்மா என்னை விடு, ப்ளீஸ்!''

அம்மா பிடிவாதமாக அங்கேயே நின்றாள்.

''ஊரார் ஆத்துப் பெண்களெல்லாம் இல்லே, அம்மா அப்பா சொன்னதைக் கேட்டுண்டு, காலாகாலத்திலே கல்யாணத்தைப் பண்ணிண்டு! உனக்கேன் இந்தத் தலையெழுத்து? ஊர் உலகத்து சமாச்சாரமெல்லாம் எப்படிப் போனால் என்ன? உனக்குன்னு சினேகிதா வேற. புத்தியை நன்னாப் பேதலிக்க வெச்சாச்சு!''

''அம்மா ப்ளீஸ்!'' என்றாள் ரஞ்சனி கோபத்துடன். ''என்னைச் சொல்லு, என் சினேகிதாளைச் சொல்லாதே.''

அம்மா சற்று நேரம் விறைப்புடன் மௌனமாக நின்றாள்.

''நீ என்ன மனசிலே நினைச்சிண்டிருக்கியோ எனக்குத் தெரியாது'' என்றாள் அம்மா மெல்லிய குரலில். ''வழக்கத்துக்கு விரோதமான காரியங்களை நீ செய்யறதா எனக்குத் தோணறது. கல்யாண விஷயத்திலேயும் நீ அந்த மாதிரி நடந்துக்கறதை நான் அனுமதிக்க மாட்டேன். அப்பாவும் அனுமதிக்க மாட்டார். ஊர்லே பெரியவா எல்லாரும் இருக்கா. அவாளுக்கு நான் பதில் சொல்லியாகணும். தில்லியிலே வளர்ந்தா நம்ம வேர்களை மறந்துடணும்னு நினைக்காதே!''

ரஞ்சனி காதைப் பொத்திக் கொண்டு எழுந்தாள்.

''நான் படிக்கணும். நீ இப்ப இங்கேயிருந்து போ. எனக்குக் கல்யாணம் பண்ணிக்கிற நினைப்பே இப்ப இல்லே. உன் லெக்சரை வேஸ்ட் பண்ணாதே. சமயம் வரும்போது சொல்லு!''

''அப்ப ரொம்ப லேட்டாயிடும்!''

''ஓ மை காட்!'' என்று ரஞ்சனி ஆத்திரத்துடன் மேஜையை ஓங்கிக் குத்தினாள்.

''என்ன அங்கே வாக்குவாதம், அவளைப் படிக்க விடாமெ?'' என்று அப்பாவின் குரல்.

ரஞ்சனி படுக்கச் சென்றாள் வெறுப்புடன். அம்மா சமாதானமாகத் தட்டிக் கொடுத்துவிட்டுச் சம்மதமின்றி நகர்ந்தாள்.

முகத்தைக் கைகளால் ரஞ்சனி பொத்திக் கொண்டாள். மூடிய கண்களின் விளிம்பில் ஈரம் கசிந்தது. நமக்குள் எப்படி இப்படி ஒரு பலவீனம் புகுந்தது என்று அவமானமேற்பட்டது.

கல்லூரிக்குச் செல்லும்போது இப்பவும் ருமாவின் வீட்டிற்குச் சென்று அவளுடன் சேர்ந்து பஸ்ஸில் பயணிப்பது நிற்கவில்லை. பழைய கலகலப்பும் அன்னியோன்யமும் தான் போய்விட்டது. ருமா தன் சோகத்தைக் காப்பதில் தீவிரமாக இருந்தாள்.

அவள் அழைப்பு மணியை அமுக்குமுன் ருமா கதவைத் திறந்தாள்.

''நான் இன்னிக்கு வரல்லே ரஞ்சனி'' என்றாள். ''என் தாத்தாவுக்கு உடம்பு ஸீரியஸாயிருக்கு. ஸஃப்தர்ஜங்லே அட்மிட் பண்ணியிருக்கோம்!''

''ஓ. நோ! என்ன உடம்பு?''

''ஹார்ட் அட்டாக். நேத்து ராத்திரி.''

'நேற்று காலை பார்க்க நன்றாயிருந்தாரே' என்று சொல்ல நினைத்துச் சொல்லாமல் ரஞ்சனி மௌனமானாள். ப்ளூ ஸ்டார் ஆபரேஷனும் அதற்குப் பிறகு நவம்பர் கலவரங்களும் அர்ஜுன்னின் மரணமும் அவருடைய ஆரோக்கியத்தைத் துரிதமாகக் கெடுத்துவிட்டன என்று அவள் கவனித்து வருகிறாள்.

''ஓ ஸாரி'' என்று மெலிதாக முணுமுணுத்தாள்.

''ஏதாவது உதவி வேணுமா? ஆஸ்பத்திரிக்கு எப்பப் போகப் போற?''

''ஒன்பது மணிக்குப் போவேன். உதவி ஒண்ணும் வேண்டாம் ரஞ்சனி, தாங்க்ஸ்!''

சட்டென்று ரஞ்சனி எதிர்பாராமல் உடைந்து போனாள்.

அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து முகத்தை மூடிக் கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

''என்ன, என்ன ரஞ்சனி?'' என்றாள் ருமா திகைத்து.

ரஞ்சனிக்கு வார்த்தைகள் வரவில்லை. சற்றுப் பொறுத்து, முகத்தைத் துடைத்துக் கொண்டு மெல்லச் சொன்னாள்:

''நீ இப்படி என்னை வெளி ஆளைப் போல நடத்த நான் எந்தத் தப்பையும் செய்யல்லே ருமா!''



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் கும்பகோணம் ''ராஜா வேத காவ்ய பாடசாலை''யை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 75 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்துவருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 200/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2000/— மூலதனம் ஏற்படுத்தியோ (அ) அவ்வப்போது ரூ. 200/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஸமாராதனை நடத்தும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம். நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமானவரி விலக்கு உண்டு.

விபரங்களுக்கு:

அத்வைத வித்யாசார்ய மஹாராஜ ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
கும்பகோணம்


அழகுப் போட்டி
"நீங்க ஒருத்தர் மட்டுந்தான் அழகி போட்டிக்கு உள்ள அர்த்தத்தை சரியா புரிஞ்சிகிட்டு உயர்ந்த ராகமாலிகா புடவையை கட்டிகிட்டு வந்தீங்க, அதனாலதான் உங்களை அழகு ராணியாக தேர்ந்தெடுத்து இருக்கோம். ஒரு வருடம் முழுவதும் ராகமாலிகா புடவைகளையே பரிசாக அளிப்போம்."
UMA FEATURES

ருமாவின் கை அவள் தோளை அணைத்தது:

"சரி, வா. எழுந்திரு. நீ அழுது நான் பார்த்ததேயில்லே. சமையல்வேலைகொஞ்சம் இருக்கு. அதை முடித்துவிட்டுக் கிளம்பலாம்.

சமையலறையில் பழைய சௌஜன்யம் மெள்ள எட்டிப் பார்த்தது.

ஆஸ்பத்திரிக்குப் போகும் வழியில் ருமா சற்று இளகியிருப்பது தெரிந்தது.

ருமாவின் தாத்தா ஆஸ்பத்திரியில் தூக்கமும் விழிப்புமாக இருந்தார். இருவரையும் பார்த்ததும் கண்ணீர் பெருக்கினார். ருமாவின் பெற்றோர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு இருவரும் அவரருகிலேயே உட்கார்ந்திருந்தார்கள். ரஞ்சனியைக் குனியச் சொல்லித் தாத்தா மெல்லிய குரலில்,

"கலவரங்களைப் பற்றி விசாரணை ஏன் இன்னும் செய்யவில்லை?" என்றார். அது அவளது வேலை என்று நினைத்தது போல.

"செய்வார்கள் தாத்தா" என்றாள் ரஞ்சனி சமாதானமாக.

செய்து என்ன ஆகப் போகிறது? இறந்தவர்களைத் திரும்பிக் கொண்டு வரப் போகிறார்களா?"

ருமாவின் வார்த்தைகளை கவனிக்காதவளாய் ரஞ்சனி தாத்தாவின் முகத்தையே பார்த்தாள்.

அவர் ருமாவைப் பார்த்துச் சொன்னார்: "எத்தனையோ விஷயங்களைத் திருப்பிக் கொண்டு வர முடியாது பேட்டீ! நல்ல சினேகிதத்தைத் தொலைத்தால் அதுவும் திரும்பக் கிடைக்காது! உன் துக்கத்திலேயே மூழ்கிப் போயிடாதே. உன்னைவிட அதிகமா பல நூறு பேர்களுக்குத் துக்கம் ஏற்பட்டிருக்கு. நான் விசாரணை கேட்கிறது நியாய தர்மத்துக்காக!"

அவர் சோர்வுடன் ரஞ்சனியைப் பார்த்தார், "இவளை மன்னித்துவிடு பேட்டீ! இவள் தன்னை அறியாமல் உன்னைப் புண்படுத்தியிருக்கிறாள்."

"இல்லை தாத்தா!" என்றாள் ரஞ்சனி புன்னகையுடன். "நான் அப்படியெல்லாம்நினைக்கவேயில்லே!"

அன்று இரவு ரஞ்சனி படுக்கப் போகும் தருணத்தில் ருமாவிடமிருந்து ஃபோன் வந்தது.

"மறுபடி ஒரு அட்டாக் வந்து தாத்தா காலமாயிட்டார் ரஞ்சனி!" என்றாள்.

"ஓ. ஐ ஆம் ஸாரி" என்றாள் ரஞ்சனி மெல்லிய குரலில். "நான் வரேன் உங்க வீட்டுக்கு!"

"காலையிலே வா போதும்! அப்புறம் ரஞ்சனி, ஸாரி!"

"எதுக்கு?"

"எல்லாத்துக்கும்!"

"டோண்ட் பீ ஸில்லி 'யார்'!"

மனத்திலிருந்து இறுக்கம் தளர்ந்தாற் போலத் தோன்றிற்று. வெகு நாட்கள் கழித்து ரஞ்சனியின் அதரங்களில் புன்னகை விரிந்தது.

இப்பொழுது நடைபெறுகிறது ஆனந்த் A/C
சங்கம் A/C (பகல் காட்சி) லிபர்டி [3 காட்சிகள்]
மற்றும் தமிழகமெங்கும்



நேதாஜியின்

நறுக்கென்ற வசனங்கள்
நயமான தத்துவங்கள்
சுவையான வாதங்கள்

சத்தான கதைக்கு ஐந்து
முத்தான பாடல்கள்.
மெல்லிசை மன்னரின்
தேனிசை ரீங்காரம்.

பார்க்க, ரசிக்க, சிந்திக்க


பழனியப்பன் ராமசாமி அளிக்கும்

ஜெமினியின்

ஜனனி

இசை — M.S. விஸ்வநாதன்
ஒளிப்பதிவு — சோமந்தூராய்
விஸ்வம் நடராஜ்

கதை திரைக்கதை வசனம்
பாடல்கள் டைரக்ஷன்
நேதாஜி



"உங்கள் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருப்பேன்!"

* சாயி பக்தர்களாக இருந்தும் கூட என் போன்ற பலரால் ரா. கணபதியின் எழுத்து நடையைச் சகிக்க முடியவில்லை. ஏன், இதனைச் சாதாரணத் தமிழில் எழுதக் கூடாது? சின்னக் குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை அனுபவித்துப் படிக்கலாம் இல்லையா? கணபதியின் தொடரை நல்ல தமிழுக்கு மாற்றவில்லையேல் சாயி படத்துடன் உங்கள் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருப்பேன். இன்னும் இரண்டு வாரங்களுக்குள் இது நடைபெற்றாக வேண்டும். இல்லையேல் அந்த சாயி தடுத்தாலும் விடேன்!

சாயிராம்!

கூத்தப்பாக்கம். வி. எஸ். சத்யா.

(ஏறத்தாழ இதே போன்று வேறு ஒரு வாசக அன்பர் எழுதிய கடிதத்தை ரா. கணபதிக்கு அனுப்பி வைத்தோம். "இத்தொடர் அனைவருக்கும் இலகுவாகப் புரியும்படி அமைய பாபாவை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்!" என்று பதில் எழுதியிருக்கிறார் அவர்.

— ஆசிரியர்)

காழ்ப்புணர்ச்சி கொண்ட ரிப்போர்ட்!


* தமிழ்நாட்டில் ஆதரவற்ற முதியவர்களும் சத்துணவு சாப்பிட்டு வருகின்றார்கள். தாங்கள் எழுதியுள்ளபடி சாராயம் குடிப்பவர்களின் குழந்தைகள் மட்டும் சத்துணவு உண்ணவில்லை.

சத்துணவு மையங்களில் வேலை பார்ப்பவர்கள், மாவட்டங்களில் உள்ள கோட்டாட்சி அலுவலர், கோட்ட வளர்ச்சி அதிகாரி, ஊராட்சி ஒன்றிய ஆணையர் இவர்களால், திருக்குறள், பொது அறிவு இவற்றில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்களால் முறையாக நியமனம் செய்யப்படுகின்றார்கள்; தங்கள் கருத்துப்படி அ.தி.மு.க. ஆட்கள் மட்டும் நியமனம் செய்யப்படுவதில்லை. சத்துணவு அமைப்பாளர்கள் அரிசி, பருப்பு, எண்ணெய் களவாடுகின்றார்கள் என எழுதி இருக்கிறீர்கள். சத்துணவு மையங்கள் ஊருக்குள் இருக்கும்போது அமைப்பாளர்கள் எப்படித் திருடுவார்கள்?

உங்களது ஸ்பெஷல் ரிப்போர்ட் அ.தி.மு.க. அரசின் மீதும், சத்துணவுத் திட்டத்தின் மீதும் ஏற்பட்டுள்ள காழ்ப்புணர்ச்சியால் எழுதப்பட்டதே தவிர, நடுநிலைமையானது அல்ல.

கல்லடிப்பட்டி, து. கோவிந்தராஜன்,
திருச்சி மாவட்டம். சத்துணவு அமைப்பாளர்,
ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி.





* பெரியவர்கள் நலனுக்காக மட்டுமின்றி நமது நாட்டின் குழந்தைகளின் நன்மைக்காகவும் உடனடியாக சாராயக்கடைகளை மூட வேண்டும் எனத் துணிவாகத் தெரிவித்துள்ளமைக்கு இந்நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களின் சார்பாக இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருநாகேச்வரம். உ. சிங்காரவேலன்,
செயலாளர்,
தமிழ்நாடு காந்திய நிர்மாணத் திட்ட ஊழியர் சங்கம்.

இன்னும் வேண்டும்!

* திரு வெங்கட்டின் நாடகத்திற்கு தலைவர் பாலசுப்பிரமணியன் செய்தது மிகவும் மிதவாதமே ஆகும். இதில் ஜனநாயகப் புறம்பிற்கு ஏதும் இல்லை. தமிழ் நாட்டில் பல்லாயிரக்கணக்கான பாலசுப்பிரமணியர்கள் உருவாக வேண்டுமென்று நாங்கள் வேண்டுகிறோம்!

சென்னை — 33. சிவசுப்பிரமணியன், மீனு,
ராஜும் மற்றும் பலர்.

அவர் மதிப்பு!

* அவர் பேச்சு டேப்பில் பதிவாகியுள்ளது' என்று சொல்லியும், தான் அப்படிப் பேசவே இல்லை என்று கூறுவதிலிருந்தே திரு பாலசுப்பிரமணியன் எந்த அளவு உண்மையை மதிக்கிறார் என்று உணர்ந்து கொள்ளலாம்!

சென்னை — 20. ரா. கணபதி.

எதிர் அணி தயார்!

* தான் ஒரு சர்க்குலர் விட்டால் உங்கள் சர்க்குலேஷனே கவிழ்ந்துவிடும் என மிரட்டியுள்ளார் திரு பாலசுப்பிரமணியன் அவர்கள். பிராமணர் சங்கத்தில் இவரைப் போன்ற தலைவர்கள் செய்து வரும் அக்கிரமங்களை எதிர்த்துப் போராட எங்களைப் போன்ற இலட்சக் கணக்கான பிராமணர்கள் எதிர் அணியில் இருக்கிறோம் என்பதை இந்த பாலசுப்பிரமணியன்கள் உணரட்டும்!

குளித்தலை. ராஜுகாணி.

நன்கொடையா, கட்டாய வசூலா?

* 'இலங்கைத் தமிழர் துயர் துடைப்பு நிதிக்காகத் தமிழக அரசு இரண்டு கோடி ரூபாய் நிதி திரட்டித் தரும்' என்று சமீபத்தில் அறிவித்தாலும் அறிவித்தது, அதிகாரிகளின் 'கட்டாய வசூல் வேட்டை' பகிரங்கமாக ஆரம்பமாகி விட்டது. திருச்சி ஆர். டி. ஓ. அலுவலகத்தில் நன்கொடையாக ரூபாய் நூறை வெட்டினால் தான் எஃப். ஸி.யே கிடைக்கிறது'. இந்த லட்சணத்தில் 'நாங்கள் இவ்வளவு திரட்டினோம்' என்ற பெருமை வேறு. அ. தி. மு. க. ஆட்சியில் கட்டாய வசூலுக்கு மறுபெயர் நன்கொடை போலும்!

லால்குடி. ஆர். சிவராஜ்.

(இக்கடிதம் பரிசு பெறுகிறது)

ஊலயன்ஸ் சூப்பர் பம்பர்

எம்.பி. செஞ்சிலுவை சூப்பர் பம்பர்

ஆந்திரா லக்ஷ்மி பம்பர்ஸ்

ஹிம்லக்ஷ்மி பம்பர்ஸ்

ஆகியவற்றை தந்தோரிடமிருந்து....

Rs 17 CRORES

ஐக்கத் திட்டங்களுடன்


ஐந்தே லட்சம் டிக்கட்டுகளில்

பரிசு வரிசை	தொகை			
முதல் பரிசு	50 x 10,00,000	கடைசி	4	இலக்கங்களுக்கு
2-ம் பரிசு	50 x 1,00,000	கடைசி	4	இலக்கங்களுக்கு
3-ஆம் பரிசு	500 x 25,000	கடைசி	3	இலக்கங்களுக்கு
4-வது பரிசு	5000 x 10,000	கடைசி	2	இலக்கங்களுக்கு
5-வது பரிசு	50000 x 500	கடைசி	1	இலக்கத்திற்கு

பரபரப்பான
கவர்ச்சி அம்சங்கள் :-

1. மொத்த பரிசுத்தொகை 70%க்கும் மேல்—எந்த பம்பரிலும் இதுவரை இல்லாத ஒன்று.
2. ஒவ்வொரு 100 டிக்கட்டுக்கும் ரூ.10,000/- பரிசு ஒன்று உத்திரவாதம். கடைசி இரண்டு இலக்கம் சரியாக இருந்தால்.

எந்த லாட்டரியிலும்
இதுவரை
இல்லாத
மிக அதிக
பரிசுத்தொகை



முதல் குலுக்கல் :
அக்டோபர் 31, '85

டிக்கெட் :
ரூ. 500/- மட்டும்

vaibhav shali
BUMPER


சந்திரா ஏஜன்ஸீஸ்

CHANDRA AGENCIES

பி-89, சவுத் எக்ஸ்டென்ஷன் பார்ட்-2, புது தில்லி-110049

[illegible]

தகவலுக்கு மட்டும்



• ஆறடி நிலமே சொந்தமடா!

மனிதன் இருக்கும் போது நிம்மதியாக வாழ முடியவில்லை.

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா!''

என்பதைப் புரிந்து கொள்ளாமல் எது எதற்கோ ஆசைப்படுகிறான். கூடவே அவதிப் படவும் செய்கிறான்.

இறந்து விட்டாலோ அவன்பாடு நிம்மதி தான். ஆனால் சுற்றி இருப்பவர் படும் அவதி? ஆஸ்பத்திரியில் இறந்திருந்தால் உடலைப் பெற்று வர லஞ்சம்; வீட்டுக்குக் கொண்டு வர டாக்ஸி அல்லது வண்டிக்காரர்கள் கேட்கும் அநியாயச் சத்தம்; வீட்டில் ஈமச் சடங்குகள் நடத்தச் செலவு; பிறகு இடுகாட்டுக்குக் கொண்டு போனாலோ அங்கே வெட்டியான் படுத்தும் பாடு! எல்லாவற்றிற்கும் பணம், பணம், பணம்!

சுடுகாட்டைக் கண்காணிக்கும் பணியாளரைப் பேட்டி காணத் தீர்மானித்துக் கிளம்பினேன்...

ஈரோட்டில், காவிரிக்கரையில், பாலத்தின் வலதுபுறமும் இடதுபுறமும் இருக்கும் சுடுகாட்டிற்குச் சென்று அங்கு பணிபுரியும் கருப்பண்ணன் (இங்கு வாட்சுமேன், வெட்டியான், முதலாளி, தொழிலாளி எல்லாம் இவர்தான்.) என்பவரைச் சந்தித்தேன்.

கேள்வி: இங்கு எத்தனை வருஷமாக வேலை செய்கிறீர்கள்?

கருப்பண்ணன்: பதினைந்து வருஷமாக!

கேள்வி: உங்களுக்கு எவ்வளவு சம்பளம் தருகிறார்கள்?

கரு: மாதம் 500 ரூபாய்!

கேள்வி: இந்தச் சம்பளம் உங்களுக்குப் போதுமா?

கரு: போதாதுதான். இந்த நாளில் ஆயிரம் ரூபாய் கிடைத்தால் கூடப் போதாதுதான். ஆனால் யார் தர்றேங்கறாங்க? எங்க முனிசிபாலிட்டி ஆபீசிலே முறையிட்டேன். யாருமே காதிலே போட்டுக்கிடலை!

கேள்வி: சுடுகாட்டில் வேலை செய்கிறீர்களே, உங்களுக்கு பயம் இல்லையா?

கரு : எனக்கு எந்த விதப் பயமும் இல்லே. பிணங்களைக் கண்டால் எனக்குத் துளிக் கூட பயம் இல்லை. பேய், பிசாசு.

"பிணம், பேய்களைப் பற்றி பயமில்லை! ரௌடிகளைக் கண்டுதான் பயம்!"

—ஒரு வெட்டியான் கூறுகிறார்


எதையும் நான் பார்த்ததில்லே. ஆனால் உயிரோட இருக்கிற, இங்கே அடிக்கடி நடமாடுகிற குடிகாரனுங்க, திருடனுங்க, ரௌடிங்க இவங்களைக் கண்டாத்தான் எனக்குப் பயமா இருக்கு.

கேள்வி: ஏன், அவர்கள் உங்களை என்ன செய்கிறார்கள்?

கரு: குடித்துவிட்டு இங்கே கும்மாளம் அடிக்கிறார்கள். காசு பணம் வைத்து சீட்டு விளையாடுகிறார்கள். பிணத்துடன் துக்கத்தையும் சுமந்து வருபவர்களின் பொருட்களைத் திருடிக்கொண்டுபோய்விடுகிறார்கள். எனக்கென்று கொடுத்த அறையின் கதவை உடைத்து அதில் வைத்திருந்த கடப்பாரை, அரிவாள், மண்வெட்டி போன்ற சுடுகாட்டிற்குத் தேவையான பொருட்களைத் திருடிக் கொண்டு போய் விட்டார்கள். பல வருடங்களாகியும் இந்த அறையின் கதவை முனிசிபாலிடியினர் சரி செய்து கொடுக்கவில்லை. ரௌடிகளை மிரட்டினால் அவர்கள் என்னை அடிக்க வருகிறார்கள். எனக்கு எந்தப் பாதுகாப்பும்இல்லே.சுடுகாட்டில்உள்ளபல்புகளையெல்லாம் திருடிக் கொண்டு சென்று விட்டார்கள்! இருட்டாயிருந்தால்தானே ரௌடிங்களுக்கு வசதி! பலமுறை இதுபற்றி எங்க ஆபீசர்களிடம் ரிப்போர்ட் பண்ணியும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லே!

கேள்வி: உங்களுக்கு என்னென்ன வசதிகள் தேவை என்று நினைக்கிறீர்கள்?

கரு : இங்கு என்னைத் தவிர வேறு யாரும் இல்லே! எனக்கு உதவியாக நாலு பேரை முனிசிபாலிட்டியினர் வேலைக்கு அமர்த்தணும். அப்பத்தான் சுடுகாட்டைச் சுற்றி வளர்ந்து இருக்கும் கள்ளிச் செடிகளையும், கொடிகளையும் வெட்டி எறிந்து பிணங்களை எரிக்கவர்றவங்களுக்கு எந்தவித(விஷப் பூச்சிகள்) பயமும் இல்லாமல் செய்ய என்னால் முடியும். அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி ஒரு நோட்டு கொடுத்தாங்க (டெத் சர்டிபிகேட் புக்) அதுக்கப்புறம் ஒண்ணுமே கொடுக்கல்லே. நானே காசு கொடுத்து பேப்பர் வாங்கித் தினமும் இங்கே வர்ற பிணங்கள் லிஸ்ட்டை எடுத்து ஆபீசுக்குக் கணக்குத் தர வேண்டியதாயிருக்கு.



• பல ஆண்டுகளாகியும் சரி செய்யப்படாத அறைக் கதவு.



• கருப்பண்ணன்.

கேள்வி: அடிக்கடி இங்கே வந்து மேல் அதிகாரிகள் செக்கிங் செய்வது உண்டா?

கரு: அதெல்லாம் வர்றதே கிடையாது. இங்கே வந்தா ஏதாவது வருமானம் கிடைக்குமான்னுதான் நினைப்பாங்க. இங்கே வருமானம் கிடைக்க அவங்களுக்கு சான்ஸ் இல்லே. அதனாலெ இங்கேவர்றதேகிடையாது. அவுங்க செத்தாத்தான் இங்கே வருவாங்க...!

கேள்வி: இங்கே பிணங்களை எரிக்க, புதைக்க வருபவர்களிடம் வற்புறுத்தி ஏதாவது பணம், பொருட்களைச் சன்மானமாக வாங்கும் வழக்கம் உண்டா உங்களுக்கு?

கரு : அதெல்லாம் நான் யாரையும் வற்புறுத்தமாட்டேனுங்க. அவுங்களாப்பிரியப்பட்டு ஏதாவது கொடுத்தாக்க வாங்கிக்குவேன். அவ்வளவுதான்! எரிகிற வீட்டிலே புடுங்கின கதையா ஆயிடும், நான் வற்புறுத்திக் கேட்டா! ஆனால் ஆஸ்பத்திரி கேசு, போலீஸ்கேசு இப்படிஏதாவதுவந்தா அவுங்க கிட்டே கேட்டே பணம் வாங்கிடுவேன்! கூட வர்ற போலீஸ்காரங்களே எனக்கு வாங்கிக் கொடுத்து விடுவாங்க!

65 வயதான கருப்பண்ணனின் நியாயமான கோரிக்கைகளை, தேவைகளை ஈரோடு நகராட்சி பூர்த்தி செய்து தருமா...? ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சுடுகாட்டிலும் இதுபோன்ற பிரச்னைகள் இருக்கத்தானே செய்கிறது!

பேட்டி: **மேஜர்தாசன்.**

படங்கள்: **என். எஸ். மணி.**

உண்டியல் கலெக்ஷன்...



* என். செந்தில்குமார், மயிலாடுதுறை.

? தெருக்களைச் சுத்தப்படுத்தநினைத்தமலைச்சாமி மாற்றப்பட்டிருப்பது குறித்து?

! சுத்தப்படுத்தப்பட வேண்டியது தெருக்கள் மட்டுமல்ல; அரசியலும்தான் என்பதைக் காட்டுகிறது.

* எம். தனபாலன், கரூர்.

? உண்ணாவிரத உண்டியல் கலெக்ஷன் இலங்கைத் தமிழ் அகதிகளுக்குப் போய்ச் சேருமா?

! புல்லுக்குப்பாய்வதுநெல்லுக்கும்ஆங்கே பொசியுமாம் என்று நம்பலாம்.

* எஸ். உமாகாந்தன், ஒட்டன்சத்திரம்.

? ஸ்பெஷல் ரிப்போர்ட்டில் உள்ளபடி ரூ 2.50 சாராயத்திற்கு நூறு சதம் லாபம் வைத்தால் ரூபாய் ஐந்து மட்டுமே. ஐநூறு சதம் லாபம் வைத்தால்தான் 25.00 ஆகிறது. நூறு சதமே. கொள்ளை என்றால் ஐநூறு சதம் என்பது கொள்ளைக்கு மேல் கொள்ளை இல்லையா?

! கணக்கு என்று வரும்போது உமாகாந்தனுக்கும்தான் காலை வாருகிறது! ஐந்நூறு சதம் என்பது கூடத் தவறு நண்பரே. 900 சதம் லாபம் தான் சரி. அதாவது கொள்ளைக்குமேல் கொள்ளைக்குமேல் கொள்ளைக்கு மேல் கொள்ளையோ கொள்ளை!!!

* எஸ். ஆரோன் பிரபு, திருச்சி.

? 'எம். ஜி. ஆர். சிந்திய ரத்தத்தினால்தான் 1967ல் தி. மு. க. ஆட்சிக்கு வந்தது' என்று ஆர். எம். வீ. கூறியுள்ளாரே!

! அன்று எம். ஜி. ஆர். ரத்தம் சிந்தியது கட்சிக்காக அல்ல. சிந்திய ரத்தத்தைதி. மு. க. வினர் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்; அவ்வளவுதான்.

* எஸ். சிவாஜிராஜா, அயன்புரம்.

? மத்திய அமைச்சரவையில் மாபெரும் மாற்றம் செய்திருக்கிறாரே பிரதமர்! அதைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

! வேலைப் பளுவைக் குறைத்து, வேலைத் திறனை அதிகப்படுத்துவதற்காகச் சில துறைகளை ஒரே அமைச்சரிடம் இணைத்துத் தந்தும் அதேநேரத்தில் துணை அமைச்சர்களிடம் பொறுப்புக்களைப் பிரித்துக் கொடுத்தும் விஞ்ஞான ரீதியான ஓர் அணுகுமுறையுடன் அமைச்சரவையை உருவாக்கியுள்ளார். அதோடு வேலைத் திறன் இல்லாத அமைச்சர்களுக்குத் தம் அமைச்சரவையில் இடமில்லை என்பதையும் சிலரை நீக்கியதன் மூலம் எச்சரித்தும் இருக்கிறார். மரகதம் அம்மையாரின் பதவிப் பறிப்பைச் சிதம்பரமும், அருணாசலமும் ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

...இலங்கைத்

* ஜி. ராணி, விசலூர்.

? முதல் மரியாதை படத்தில் வடிவுக்கரசி ராதாவை நடுத்தெருவில் விளக்கு மாற்றால் அடித்ததும்தான் ராதா, சிவாஜி வடிவத்தைத் தன் மனத்தில் புகுத்திக் கொண்டதாகக் கல்கி பேட்டியில் பாரதிராஜா கூறியுள்ளார். ஆனால், சிவாஜி அந்தப் பெருங் கல்லைத் தூக்கியவுடன் ராதா குங்குமமும், கண்ணாடியும் பவுடரும் வாங்குவதாகக் காண்பிக்கிறாரே. அது எதற்கு?

! அந்தப் பாறாங்கல்லை சிவாஜி தூக்கியதன் மூலம் ராதாவின் மனத்தில் ஒரு மேலோட்டமான காதல் சிலிர்ப்பை ஏற்படுத்துகிறார். அந்தச் சிலிர்ப்பின் வெளிப்பாடுதான் குங்குமம், கண்ணாடி, பவுடர்... போன்றவை. கடைசியில் வடிவுக்கரசியிடம் அடி வாங்கும்போதுதான் சிவாஜியின் வடிவத்தைத் தன் மனத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்கிறார் ராதா.

* வி. ரவிகுமார், லால்குடி.

? இந்தியாவில் மிகவும் பிரபலமான தொழில் எது?

! அரசியல்.

* அர. மணிவண்ணன், ஆலந்தூர்.

? 'என் உடல்நிலை சமீப காலமாகக் கெட்டுவிட்டது. டாக்டர்கள் ஓய்வெடுக்கும்படி கூறினார்கள். எனவேதான் ராஜினாமா செய்கிறேன்' என்ற ரஷ்யப் பிரதமரின் நியாய



* மாற்றப்பட்டது ஏன்?



* பதவிப் பறிப்பு.



* எச்சரிக்கை.



* மலையாளத்தில்......

மான — நேர்மையான வழியை நம்மவர்களும் பின்பற்றலாமல்லவா?

! அத்தகைய அரசியல் நேர்மையும், நாகரிகமும் நம்மவர்களிடம் துளிக்கூட இல்லையே!

* மலர்ப்பிரியன், நம்மாழ்வார்ப்பேட்டை.

? குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்குப்பண உதவிசெய்வதைவிடுத்து, இரண்டு குழந்தைகளுக்குமேல் பெற்றுக்

அல்ல என்பதையும் ராஜீவ் காந்தியின் அணுகு முறையைத் தாங்கள் வரவேற்பதையும் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்திருக்கிறார்கள்.

* மேரி விமலா, சிரயான் குழி.

? கல்கியில் இந்துமதி எழுதிய 'நெருப்பு மலர்' மலையாளப் பத்திரிகையான 'குமாரி' யில் 'அக்னிச் சிறகுள்ள தும்பி' என்ற பெயரில் வெளி வந்து கொண்டிருக்கிறது.

தமிழர்களுக்குப் பேரயச் சேருமா?

கொள்பவர்களுக்குத் தண்டனை தரும் விதத்தில் சட்டம் கொண்டு வர அரசு முன் வருமா?

! மூன்றாவது குழந்தை பெற்றுக் கொள்வதை விடவும் ஒரு பெரிய தண்டனை உண்டா என்ன, அதுவும் இன்றைய விலைவாசி நிலவரத்தில்!

* பானுமதி மனோகர், சென்னை—79.

? எது தன்னம்பிக்கை? எது தலைக்கனம்?

! தன்னால்முடியும்என்பது தன்னம்பிக்கை. தன்னால் மட்டுமே முடியும் என்பது தலைக்கனம்.

* மு. ஜானகிராமன், தேரெழுந்தூர்.

? பஞ்சாப் வாக்காளர்களின் முடிவு பற்றி.....

! விவேகமான முடிவு. மாநிலத்தில் அகாலிதள மிதவாதிகள் (எல்) பதவிக்கு வந்திருப்பதால் சீக்கிய பயங்கரவாதிகளைத் தண்டிப்பதோ குற்றமற்ற சீக்கியர்களை விடுவிப்பதோ சீக்கியத் தலைமையின் பொறுப்பாகவே ஆகிறது. இ. காங்கிரஸ் பதவிக்கு வந்திருந்தால் ஒரு தர்ம சங்கட நிலை இருந்திருக்கும்; இதேசமயத்தில் இன்று நாடாளுமன்றத் தேர்தலில் இ. காங்கிரஸ் வேட்பாளர்களை ஏறத்தாழ சரிக்குச் சரி தேர்ந்தெடுத்ததின் மூலம் தாங்கள் பிரிவினைவாதிகள்

தமிழும், மலையாளமும் தெரிந்த என்னைப் போன்ற வாசகர்களை இந்துமதி இப்படி ஏமாற்றலாமா?

! தமிழில் படித்ததையேதான் மலையாளத்திலும் படிக்க வேண்டுமா என்ற ஏமாற்றம் உங்களைப் போன்ற மிகச் சிலருக்கு இருக்கலாம். ஆனால் தமிழில் வெளிவந்த ஒரு நாவல் அப்படியே இன்னொரு மொழியில் வெளிவருவது குறித்து ஏற்படும் சந்தோஷம் அந்த ஏமாற்றத்தை மறக்கடிக்கச் செய்துவிடுகிறதே!

* ரூ 10 பரிசு பெறுபவர்:

மு. ஜானகிராமன்,
2/59, வடக்கு வீதி,
தேரெழுந்தூர் (அஞ்சல்),
மயிலாடுதுறை—609 808.

* அடிவாங்கி......

* கல்லைத் தூக்கி...



நீங்கள் கேட்டவை—தராசு



காட்டு தர்பாருக்கு ஒரு பொடிப் பயலின் பதில்!

—வெங்கட் மனம் குமுறுகிறார்

பிராமண சங்கத்தின் சென்னைக் கிளை தலைவர் திரு பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு.

'மேடை நடிகன்', 'பொடிப் பயல்' என்ற பவித்திரமான பட்டங்களைத் தங்கள் திருவாயால் உதிர்த்து, சக பிராமணன் என்னைக் கல்கி வாசகர்களுக்கு இனம் காட்டிய நண்பரே! தமிழ் நாடக மேடையில், உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்ட விரும்பும் நாடகங்களைக் குறைப்பிரசவமாக்க அரங்கங்களில் பதிக்கப்படும் உமது பொற் பாதங்களைப் பற்றிக் கேட்டுக் கொள்கிறேன்..... நீங்கள் கண்டியுங்கள். ஆனால் தங்கள் கண்டனத்தில் சற்று கண்ணியம் இருப்பின் தவறுகாது எனத் தண்டனிட்டுச் சொல்வேன். இருநூறு ஆவேச அராஜகர்களின் கண்டனத்தை 30.8.85 அன்று ஆர். ஆர். சபாவில், பொறுமையுடன் தாங்கிக் கொண்ட இந்தப் 'பொடிப் பயல்' தான் கல்கி இதழில் நீர் தரக்குறைவாகப் போட்டிக்கு அளித்திருக்கும் பேட்டியையும் தாங்கிக் கொள்கிறேன். 30.8.85 அன்று நீங்கள் உங்கள் பிராமண பரிவாரங்களுடன் நடத்திய காட்டு தர்பாரில் நிராயுதபாணியாக நிறுத்தப்பட்ட நிரபராதி நான்!

நாற்காலிகளையும் மேசைகளையும் உடைக்காமல் விட்டதைத் தங்கள் பொறுமைக்கும் நாகரிகத்திற்கும் எடுத்துக் காட்டாகத் தாங்கள் கூறுவதால், சுதந்திர ஜனநாயகத்தில் அறிவு பூர்வமாக ஒரு எழுத்தாளன் உண்மைகளைக் கூற முற்பட்டபோது, தங்கள் சங்கத்தினர் மஞ்சள் பத்திரிகைகள் கூட அச்சிட நாணும் அர்ச்சனை மந்திரங்களை சங்கத் தமிழில் என் மீது சொரிந்து—என் மனத்தை உடைத்ததில் வியப்பதற்கு ஒன்றுமில்லைதான்.

"ஐயர் கறி தின்றதால்தான், கறி விலை ஏறிப் போச்சுடா" என்று பலர் பேச; தெருவில் கேட்டேன்! திடுக்குற்றேன்! எடுத்தேன் பேனா! 'பிராமணா! நீ பழைய உன்னத நிலையை அடைய வேண்டுமானால் உன் தர்மத்தைக் கைவிடாதே' என்றேன் பேனா முனையால்! இதுதான் நான் செய்த 'தவறு'! இதற்காக என்னை ஹெல்மெட் முனையில் பதம் பார்க்க வந்த சக பிராமணக் கண்மணிகளின் தலைவர் அவர்களே! கல்கியில் தாங்கள் மறுத்துள்ள 'வாட்டர் கேட்' விவகாரங்கள் வள்ளிசாக டேப்பில் பதிந்துள்ளனவே! எங்கு வந்து யார் முன்னால் போட்டுக் காட்ட வேண்டும்? தேவையில்லை...! ஏன் எனில் நீங்கள் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டதை வெட்ட வெளிச்சமாக்கி திரு காசிராமன் போன்ற உண்மையிலேயே நம் குலத்திற்காக அனுதினமும் பாடுபடும் ஒரு சில நல்ல இதயங்களைப் புண்படுத்த இந்தப் 'பொடியன்' விரும்பவில்லை.

இப்படிக்கு,
வெங்கட்,
சென்னை.

அடுத்த வாரம்: கேரள பிராமண சபாவின் பொதுச் செயலாளர் வி. எஸ். மணி அய்யர் எழுதும் கடிதத்துடன் இந்த விவாதம் முடிவடைகிறது.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Frivate Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani Editor: K. Rajendran

கல்கி

10·11·85

தீபாவளி சிறப்பிதழ்



லக்ஷ்மி எழுதுகிறார்

புதிய தொடர்கதை ஆரம்பம்

வண்ணப்படம்: யோகா

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Srilanka

கண்ணைக் கவரும் இல்லம் — அவள் கைக்கெட்டும் தூரம்.
ஆம். அவள் வீட்டுச் சுவர்களின் வண்ணம் ட்ராக்டர்!



ADROIT-92/5-Tam.A

ட்ராக்டர். இந்தியாவில் எல்லோரும் விரும்பும் சுவர் பெயிண்ட். பட்டுப் போன்றது. பலகாலம் உழைப்பது. கழுவக் கூடியது. அதோடு, கட்டாயம் உங்கள் கைக்கும் பைக்கும் எட்டக் கூடியது!

ட்ராக்டர் எந்தச் சூழலுக்கும் ஏற்ற வகைவகையான வண்ணச் சேர்க்கை—தொட்டுத் தழுவும் மென் வண்ணச் சாயல்கள், எடுப்பான ஆழ்ந்த நிறங்கள்.

ட்ராக்டர் டிஸ்டெம்பர் மற்றும் ட்ராக்டர் அக்ரிலிக் டிஸ்டெம்பர். எங்கும் எத்தகைய உட்புறத்திற்கும் ஈடிணையற்றது.

மிடுக்கான சுவர்கள் கையைக் கடிக்காமலே கிடைக்குது!

ட்ராக்டர்

இந்தியாவிலேயே மிக அதிகமாக விற்பனையாகும் டிஸ்டெம்பர்.

ஏஷியன் பெயிண்ட்ஸ்